# மஞ்சரி

ஜய - வைகாசி

மே, 1954

அணுக்குண்டு பிறந்த வேளை

வைரம் விளையும் நாடு

வெளி ஆதிக்கத் திட்டுக்கள்

விடுதலை (ரவீந்திரர் கதை)

நடிகை (ருஷியக் கதை)

# கடவுள் எங்கே இருக்கிறார்?

கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் மேலே இருக்கிறார்; உள்ளே இருக்கிறார்; வெளியே இருக்கிறார். உள்ளே இருந்தாலும் மூடிக் கிடக்கவில்லை; வெளியே இருந்தாலும் விலகி இருக்கவில்லை; மேலே இருந்தாலும் உயரத்தில் இல்லை; கீழே இருந்தாலும் ஆழத்தில் இல்லை. முற்றும் மேலே இருந்து ஆள்கிறார்; முற்றும் கீழே இருந்து தாங்குகிறார்; முற்றும் வெளியே இருந்து அணைக்கிறார்; முற்றும் உள்ளே இருந்து நிறைக்கிறார்.

—ஹில்டிபேர்ட் அவ் லவார்டின்.


## மஞ்சரி

**ஆசிரியர், பதிப்பாளர்:** என். ராமரத்தினம்

**நிர்வாக ஆசிரியர்:** தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கி. தாமோதரன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ. — கி. சாவித்திரி அம்மாள்
த. நா. ஸேனாபதி — சீதா தேவி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

**ஓவியர்கள்:** ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 :: :: மே 1954 [இதழ் 5

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

ஹைட்ரஜன் குண்டுப் பரீட்சையில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியிருக்கிறது. இதுவரைக்கும் இரண்டு மூன்று குண்டுகளைப் போட்டாகிவிட்டது. ஒரு குண்டைப் போட்டதும் கடலில் ஒரு தீவே இருந்த இடம் தெரியாமல் அழிந்துவிட்டதாம். எங்கோ ஓரிடத்தில் குண்டைப் போட, அது வெடித்ததால் எழுந்த 'ரேடியோ-ஆக்டிவ்' (கதிர் வீச்சு) அணுக்கள் வேறு எங்கோ வெகு தூரத்துக்கப்பால் இருந்த ஜப்பானியச் செம்படவர் சிலர்மீது பட்டு அவர்களுடைய உடலைக் கருக்கிவிட்டதாம். அவர்களில் ஒருவன் பின்னால் மாண்டே போய்விட்டானாம். இவை மாத்திரம் அல்ல; மிகவும் சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டைப் போட்டால், கடல்நீர் அத்தனையுமே பெருந்தீயாக மாறி, உலகமே அழியும் அபாயங்கூட ஒரு நாள் நேரலாமாம். இன்று நகரம் ஒவ்வொன்றையும் ஒரேயடியாய் அழிக்கக் கூடிய நிலையில் ஹைட்ரஜன் குண்டு, ஒரு நாள் உலகத்தையே அழிக்கக் கூடிய நிலைக்கு வளரலாம் என்று எண்ணும்போது, எவரும் வருந்தத்தான் வேண்டும்.

* * *

அமெரிக்கர் உலகறிய ஆடம்பரமாய் ஹைட்ரஜன் குண்டுகளைச் சோதிக்கிறார்கள்; ருஷியரும் சும்மா இருக்கவில்லை. அவர்கள் ரகஸ்யமாக இவைகளைச் சோதிக்கிறார்களாம். இவற்றினும் கொடிய 'நைட்ரஜன்' குண்டுகளை வேறு அவர்கள் தயாரித்து வருகிறார்களாம். அது பொய்யோ, மெய்யோ தெரியவில்லை. மெய்யானால், அதன் சக்தி இன்னும் பெரிய அபாயமாயிருக்குமாம். ஹைட்ரஜன் குண்டு கடல் நீரையெல்லாம் பற்றியெரியச் செய்யும் என்றால், நைட்ரஜன் குண்டு காற்றையெல்லாம் பெரு நெருப்பாக்கி விடுமாம்! நீரில் மூன்றுக்கு இரண்டு பங்கு ஹைட்ரஜன் வாயு இருக்கிறது; காற்றில் நூற்றுக்கு 78 பங்கு நைட்ரஜன் வாயு இருக்கிறது. ஆகவே, ஹைட்ரஜன் குண்டு கடல் நீருக்குக் கொள்ளி வைத்துவிடும்; நைட்ரஜன் குண்டு நாமெல்லாம் சுவாசிக்கும் காற்றுக்குக் கொள்ளி வைத்துவிடும்! பிறகு, மண் உலகம் ஒரே தீக்கோளமாகி, மனிதன் உள்படச் சகல ஜீவராசிகளுக்கும் கூண்டோடு கைலாசம் கிடைத்துவிடும்! ஆனால், நல்லவேளையாக இப்போது 'புற்பா முதலாப் புல்லெறும்பாதி ஒன்றின்றியே, நற்பாலுக்குய்த்திடும்' ஹைட்ரஜன் குண்டோ, நைட்ரஜன் குண்டோ தயாராகியிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும்,

இந்த மாதிரி அழிவு ஆயுதச் சோதனைகள் மனித நாகரிகத்துக்கே ஆபத்தானவை, அரக்கத்தனம் வாய்ந்தவை என்பது மட்டும் உண்மை. பண்டித நேரு சொல்வதேபோல இவற்றின் பரீட்சைகளையாவது உடனே நிறுத்துவதுதான் நியாயம். இந்தப் பரீட்சைகளே உலக மக்களிடையே பீதியையும் கலவரத்தையும் கிளப்பக் கூடியவையாக இருக்கின்றன.

* * *

சில தினங்களுக்கு முன் சிதம்பரத்தில் அகில இந்திய எழுத்தாளர் மகாநாட்டைப் பண்டித நேரு ஆரம்பித்து வைத்தார். இந்தியாவில் பழமையான பல பாஷைகள் இருக்கின்றன. ஒரு பாஷைக்காரர்கள் மற்றப் பாஷை இலக்கியங்களைப் படிப்பதும், இந்தியா முழுவதற்கும் சொந்தம் என்று சொல்லக்கூடிய புதிய இலக்கியங்களைச் சிருஷ்டிப்பதும் மிக அவசியம் என்று நேரு வற்புறுத்தியிருக்கிறார். இதை இந்தியாவில் உள்ள எல்லா மொழியினருமே கவனிக்க வேண்டும். அண்ணமலை யூனிவர்ஸிட்டியின் வைஸ்-சான்ஸலரான ஸ்ரீ ஸி. பி. ராமஸ்வாமி ஐயர் மற்றொரு விஷயத்தை அழுத்தமாய்ச் சொல்லியிருக்கிறார். வருங்காலத்தில் இங்கிலீஷ் அகில இந்தியாவுக்கும் தேசிய மொழியாக இராமற் போகலாம்; அதற்காக இங்கிலீஷை நாம் அடியோடு கைவிட்டுவிட முடியாது. நவீனக் கலை, ஸயின்ஸ்களையெல்லாம் கற்பதற்குப் பேருதவியான அந்தப் பாஷையை நாம் இன்னும் பல காலம் கற்று வர வேண்டியது தான். அதோடு உலக பாஷைகளில் ஒன்றாக வளர்ந்துவிட்ட அதை நாம் நிராகரித்து ஒழித்துக் கட்டுவோம் என்பது நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்வதாகவே முடியும். இதையும் இந்திய மொழியினர் அனைவரும் மனத்தில் இருத்த வேண்டும்.

* * *

பரலி சு. நெல்லையப்பர் சிறந்த தமிழ் எழுத்தாளர்; தேசபக்தர்; அடக்கம் நிறைந்தவர்; தியாகம் புரிந்தவர். அவருக்குச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தினர் ஒரு நிதி திரட்டி உதவத் தீர்மானித்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விஷயம். ஸ்ரீ நெல்லையப்பருக்கு இன்று வயது 65. எழுத்தாளர்களை அவர் காலத்திலேயே போற்றுவதில்லை என்ற அவப்பெயரை மாற்றத் தமிழ் எழுத்தாளர் சங்கம் மேற்கொண்டிருக்கும் இந்த ஏற்பாடு பாராட்டத் தக்கது. 'லோகோபகாரி'யைப் போன்ற ஒரு சில பத்திரிகைகளே ஒரு காலத்தில் தமிழ் நாட்டின் சிறந்த வாரப் பத்திரிகைகளாக இருந்தன. எளிய தமிழ் எழுத வழி காட்டியவர்களில் மிக முக்கியமான ஒருவர் ஸ்ரீ நெல்லையப்பர். அவரைப் போல் சின்னச் சின்ன வாக்கியங்களில் உயர்ந்த கருத்துக்களை அழகான நடையில் எழுத யாராலும் முடியாது. அவர் எழுத்திலே துளியும் குரோதமோ, பாரபட்சமோ, ஆபாசமோ காண இயலாது. பாரதியாரின் பல பாட்டுக்களை முதலில் வெளியிட்டவர் ஸ்ரீ நெல்லையப்பர்தான். பாரதியாருக்கு அந்தரங்க நண்பர். நெல்லையப்பருக்காகத் திரட்டும் இந்த நிதிக்குத் தமிழர் அனைவரும்

தாராளமாக உதவ வேண்டு கிறோம். நிதியின் பொருளாளர் 'குமுதம்' ஆசிரியர் ஸ்ரீ எஸ். ஏ. பி. அண்ணாமலை. ஆகவே, பணம் அனுப்புவோர், 'ஆசிரியர், குமுதம், த. பெ. எண்: 1008, சென்னை-10' என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும்.

* * *

இன்று உலகம் நெருக்கடியான ஒரு நிலைமையில் இருக்கிறது. உலக மக்களிடையே பரந்த நோக்கு இருந்தால்தான் அந்த நெருக்கடி தீர வழி பிறக்கும். என்றுமே அமைதியை நாடிய பெரியோர்கள் வாழ்ந்தது நம் நாடு. சமீப காலத்தில் வாழ்ந்த மகா கவி ரவீந்திரரும், 'சத்தியம், சிவம், சுந்தரம்' என்ற உபநிஷத் வாக்கைக் கடைப்பிடித்து, உலக முழுவதும் ஆத்மிக அடிப்படையில் ஒற்றுமை நிலவ - சர்வ தேச நோக்கைப் பரப்ப - அரும்பாடு பட்டவர். அவருடைய நூல்களை இலக்கிய ரசிகர்கள் மட்டுமின்றி எல்லாருமே சுவைத்து இன்புற வேண்டும் என்ற கருத்துடன் சமீபத்தில் சென்னை ராயப்பேட்டை, கான்ரான் ஸ்மித் ரோடில் 'டாகுர் அகாடமி' என்ற சங்கம் ஒன்றை நிறுவியிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 கட்டி எவரும் இதில் அங்கத்தினராகச் சேரலாம்; மாணவர் ரூ. 2-00 கட்டினாலே அங்கத்தினராகலாம் என்று சலுகை அளித்திருக்கிறார்கள். மே மாதம் 8-ஆம் தேதி முதல் ஒரு வார காலம் 'ரவீந்திர ஜயந்தி'யை (94-ஆம் பிறந்த தினம்) ஒட்டிச் சென்னையில் கண் காட்சி ஒன்று நடத்த ஏற்பாடாகி வருகிறது. அதில் அவருடைய மூல நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், மொழி பெயர்ப்புக்கள், அவர் தீட்டிய ஓவியம் - இப்படிப் பல பொருள்களைக் காணலாம். அதோடு அவருடைய நாடகத்திலிருந்து சில பகுதிகளையும், இன்னும் சில விசேஷ நிகழ்ச்சிகளையும் தக்க அறிஞர்களைக் கொண்டு நடத்தப் போகிறார்கள். ரவீந்திரரின் இலக்கிய சம்பந்தமான சொற்பொழிவுகளும் நகரின் பல இடங்களில் நிகழும். இந்த விழாவில் சென்னை அன்பர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறோம்.

### பாஷைக் கிலி

ஸோவியத் ருஷியாவின் கம்யூனிஸம் பரவிவிடக் கூடாது என்பதற்காகவே அட்லாண்டிக் நாடுகளின் தற்காப்பு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. "இந்த ஒப்பந்தம் மிக அவசியமே என்று என் மாணாக்கர்களெல்லாம் ஆதரிக்கிறார்கள். அவர்களுடைய தேசபக்தியைத் தூண்டிவிட நான் எந்தப் பிரசங்கமும் செய்து விடவில்லை. ருஷிய பாஷை எழுத்துக்களையெல்லாம் சாக்குக்கட்டியால் பிளாக்போர்டில் எழுதிவைத்தேன். அவ்வளவுதான். அவர்கள் இந்த ஒப்பந்தத்தில் பக்தி கொண்டுவிட்டார்கள்" என்கிறார் டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த ஓர் உபாத்தியாயர்.

—'எவ்வரிபடீஸ் டைஜெஸ்ட்'



# ராஜாஜி சாதனை

## நீல்கன் பெருமாள்

**பொதுத் தேர்தலின் பலனாகச் சென்னையில் காங்கிரஸ் கட்சி பலமிழந்து தவித்த சமயத்தில், தீரமாக முன் வந்து மந்திரி சபை அமைத்து, அழகுபட ராஜ்ய நிர்வாகம் புரிந்தவர் ராஜாஜி. அவர் இப்போது விலக நேர்ந்தது பெரிதும் வருந்தத் தக்கது. அப்படி வருத்தப் படுகிறவருள் ஒருவர் இந்தக் கட்டுரையாளர். இவர் எப்போதும் ராஜாஜியை ஆதரித்துக்கொண்டேயிருந்தவர் அல்ல. சில சமயம் குறை கூறியும் இருக்கிறார். ஆனால், ராஜாஜியின் சாதனைகளையும் அவருடைய நேர்மையையும் பாராட்டுகிறவர்.**

பதினைந்து ஆண்டுகளாக ராஜாஜியைப்பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குத் தெரிந்த வரையில் 'எடுத்த காரியத்தை நிறைவேற்ற வேண்டும்; பொது மக்களுக்கு - அதுவும் தென்னாட்டு மக்களுக்கு - உண்மையாகவே தம்மால் முடிந்தமட்டில் தொண்டு புரியவேண்டும்; அவர்கள் திருப்தியோடு இருக்கவேண்டும்' என்பதே அவருடைய அவா. இதற்காகவே அவர் 1952-இல் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக்கொண்டார். அப்போது சென்னையில் எந்தக் கட்சியும் மந்திரி சபை அமைக்க முடியாதபடி நிலைமை அவ்வளவு சிக்கலாக இருந்தது. ஆகவே, காங்கிரஸ்காரர்கள் அவரை வற்புறுத்தி இந்தப் பொறுப்பை அவர் மேல் திணித்தார்கள். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. சமீபத்தில் சில பேர் ராஜாஜியை "அதிகார வெறியர்" என்று கண்டித்தார்கள். ராஜாஜியை ஆதரிப்பவர்களோ, "சங்கடமான நிலையில் காங்கிரஸ் கட்சியின் மானத்தைக் காத்த பெருந் தலைவரை இப்படி அவமதிப்பது மிகவும் ஒழுங்கீனமான செயல்" என்றார்கள். உண்மையாகவே, தென்னாட்டில் இன்று அதிகார பீடத்தில் காங்கிரஸ் கட்சி இருப்பதற்கு ராஜாஜி, சென்ற ஒன்றரை ஆண்டுகளாகக் கட்சியை வலுவாக்கியதுதான் காரணம்.

சென்னைக்கு வெளியே உள்ளவர்களோ, 'இப்படி ராஜாஜியை எதிர்ப்பவர்கள் யார்?' என்றுதான் ஆச்சரியப்படுகிறார்கள். எதிர்ப்பவர்களில் அநேகம் பேர் இந்தியா சுதந்தரம் அடைந்த பிறகு காங்கிரஸில் சேர்ந்தவர்கள். அதற்கு முன் காங்கிரஸிடம் அநுதாபங் கூடத் தெரிவித்திருக்க மாட்டார்

**காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 21-3-'54), கல்கத்தா.**

கள்; அப்பேர்ப்பட்டவர்கள்! காங்கிரஸ் கட்சிக்கு ஆள்பலம் வேண்டுமே என்று இவர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டியிருந்தது. இப்போது இவர்களுக்கெல்லாம் பதவி வேண்டும் என்று ஆசை. ஆனால் ராஜாஜி இப்படிக் கண்டவர்களையெல்லாம் பதவியில் நியமிக்கத் தயாராயில்லை. அவர் தெளிந்த அறிவு படைத்தவர். ஆகவேதான் இவ்வளவு எதிர்ப்பு! அப்படியும் ராஜாஜி இவர்களுக்குப் பயப்பட்டு நடுங்கவில்லை. சென்னையில் ராஜாஜிக்கும் வங்காளத்தில் டாக்டர் பி. ஸி. ராய்க்கும் சப்பைக் கட்டுக் கட்ட ஆள் பலமே தேவையில்லை. அவர்களுக்கே இயல்பாக உள்ள திறமையும் நேர்மையுமே அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கின்றன. பொது மக்களைப் பொறுத்தவரையில் ராஜாஜியை அவர்கள் 'பெரியவர், மேதை' என்றே மதிக்கிறார்கள். நாட்டுக்காக அவர் செய்த தியாகமும் தொண்டும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவர் சமயப்பற்றுடன் உருக்கமாகப் பேசுவதைக் கேட்டதும் அவர்களுக்கு மனவுறுதி ஏற்படுகிறது.

மேலே சொன்ன வகையினர் போக, இன்னொரு சாரார் அவர் செய்வது என்னதான் சரியென்றாலும், அவர் வகுப்பைக் குறித்து அவர்மேல் துவேஷம் பாராட்டுகிறார்கள். 'அவர் அதிகார வெறி பிடித்தவர். இல்லாவிட்டால் பெரிய பெரிய பதவியையெல்லாம் அநுபவித்துவிட்டு மறுபடியும் இந்த மாதிரி ஒரு சிற்றெல்லையில் பிரதமமந்திரியாக வருவானேன்?' என்பது அவர்கள் வாதம்! ஆனால் பொது மக்கள், 'யார் ஆண்டால் என்ன? நல்ல மழை பெய்து, உண்ண உணவும் உடுக்க உடையும் கிடைக்க வழி செய்தால் போதும். அதோடு, போதிய அளவு வேலையும் சரியானபடி கூலியும் இருந்துவிட்டால் அதற்குமேல் என்ன வேண்டும்?' என்ற மனோபாவத்தோடுதான் இருக்கிறார்கள். இது ராஜாஜிக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, 'கூடியமட்டில் மக்களுக்கு நம்மால் ஆன சௌகரியம் எல்லாம் செய்து கொடுத்து அவர்களைத் திருப்தி செய்யவேண்டும்' என்பதே அவர் எண்ணம். இப்படிச் செய்யும் போது சுயநலமிகளுக்கு இடம் இல்லாமல் போய்விட்டது. அப்படிப்பட்ட ஆசாமிகள் உடனே, "அவர் சர்வாதிகாரம் செலுத்தப் பார்க்கிறார்; உத்தியோக விஷயத்தில் ஜாதி வித்தியாசம் பாராட்டுகிறார்; ஜனநாயகத்துக்கு முரணாக நடக்கிறார்!" என்றெல்லாம் அவர்மேல் குறை கூறினார்கள்.

1937-இல் அவர் முதல் தடவை சென்னையின் பிரதம மந்திரியாக இருந்தபோது, அவர் செய்ததெல்லாம் பிற்போக்கான செயல் என்று சிலர் சொல்கிறார்கள். "அப்போது சென்னையில் அமைதியும் திருப்தியுந்தான் இருந்தனவோ? அவர் நிர்வாகத்தில் பொருளாதார நன்மைதான் ஏதாவது ஏற்பட்டதா?" என்று அவர்கள் கேட்கிறார்கள். ஆனால் ஸர் ரெஜினல்டு கூப்லண்டு போன்ற பொருளாதார நிபுணர்கள், அவருடைய நிர்வாகத்தை அப்போதே பாராட்டித்தான் இருக்கிறார்கள்.

அது எப்படியிருந்தாலும் இருக்கட்டும்; இந்தத் தடவை அவர் நிர்வாகப் பொறுப்பை ஏற்ற பிறகு பொது மக்களுக்கு எவ்வளவோ

நன்மை செய்திருக்கிறார். வந்ததும் துணிச்சலாக அரிசிப் பங்கீட்டு முறையை ரத்து செய்தார். தஞ்சாவூரில் கம்யூனிஸ்டுகள் நடத்தி வந்த கிளர்ச்சியால் நிலைமை சீர் கெட்டிருந்தது; அதையெல்லாம் சரிப்படுத்தினார். என். ஜி. ஓ-க்களுக்குச் சலுகைகள் அளித்தார். கடைசியாகப் புரட்சிகரமான கல்வித் திட்டம் ஒன்றை அமலுக்குக் கொண்டு வந்தார். இருந்தாலும், இதுதான் சர்ச்சைக்கு இடம் அளித்தது. பருலேகர் கமிட்டியார் இதைப் பரிசீலனை செய்து சில மாறுதல்களோடு ஆமோதித்திருக்கிறார்கள். பொதுவாக, இதெல்லாம் மக்களுக்கும் பிடித்துத்தான் இருக்கின்றன.

1952-இல் ராஜாஜி காங்கிரஸ்காரர் அல்லாத பலரையும் தமக்குத் துணையாகக் கட்டிக் கவிந்து கொண்டு மந்திரிசபை அமைத்தார். ஆனால் அவருக்குப் பின் காங்கிரஸ் கட்சியில் அவ்வளவு மதிப்பாகவும் திறமையாகவும் நிர்வாகம் நடக்க வேண்டுமே. சென்னைச் சர்க்கார் வாங்கியுள்ள பொதுக் கடனே ஏராளமாக இருக்கிறது. சாமர்த்தியமாக நிர்வாகத்தை நடத்தினாலன்றிச் சமாளிப்பதற்கில்லை.

ராஜாஜி என் இந்தத் தடவை பிரதம மந்திரியாக வந்தார்? 1946-இல் ஸ்ரீ டி. பிரகாசம் பிரதம மந்திரியாக வந்தார். அதற்கு முன் தமிழரான ராஜாஜி இருந்தாரல்லவா? அடுத்தபடியாக ஓர் ஆந்திரர் வரவேண்டும் என்று ஏற்பாடு. ஆனால் சில மாதங்களுக்கெல்லாம் என்ன நடந்தது? பிரகாசத்தைப் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுத்த அதே காங்கிரஸ்காரர்கள் அவரை வெளியேற்றி விட்டார்கள். அவருக்குப் பின்னால் வந்தார், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். காலேஜில் படித்துத் தேறாவிட்டாலும் கிராமவாசிக்குரிய எளிமை, நேர்மை, திறமை எல்லாம் அவரிடம் இருந்தன. பொதுவாக அவரை எல்லாருமே பாராட்டினார்கள். ஆனால் அவரிடமும் காங்கிரஸ்காரர்களுக்கு அதிருப்தி ஏற்பட்டது. அவரும் விலகிவிட்டார். ஆனால் பிரகாசத்தைப்போல் வருத்தப்படவில்லை; முகமலர்ச்சியோடுதான் விலகினார். சமீபத்தில் ராஜாஜியை எதிர்த்த சிலர் ஓமந்தூராரிடம் போய், "நீங்கள் வந்துவிடுங்கள். நீங்கள் சொல்கிறபடி நடக்கிறோம்" என்றார்களாம். "ஒரு தடவை பட்டது போதும்" என்று அவர் சொல்லி அனுப்பிவிட்டாராம்.

அடுத்தபடியாக வந்தவர் ஸ்ரீ பி. எஸ். குமாரசாமி ராஜா. நல்ல மனுஷர். அவரைப் பிடித்து இழுத்துப் பிரதம மந்திரியாக்கி வைத்தார்கள். சர்ச்சை, திடுக்கிடும் சம்பவம் எதுவும் இல்லாமல் அவர் நிர்வாகத்தை நடத்திவந்தார். கடைசியில் பொதுத் தேர்தலின் போது, பாவம், அவருடைய சொந்தத் தொகுதியிலேயே அவர் தோற்க நேர்ந்தது. ஓமந்தூராரும் குமாரசாமி ராஜாவும் நேர்மையானவர்கள்தான். ஆனாலும் அவர்களின் மந்திரிசபையில் இருந்தவர்கள் எல்லாருமே அப்படித்தான் என்று சொல்லிவிடுவதற்கில்லை. இனி என்ன நடக்குமோ என்றுதான் பொதுமக்கள் அஞ்சுகிறார்கள்.

ராஜாஜி மந்திரிசபையைப் பொறுத்தவரையில் பிராம்மணர், பிராம்மணரல்லாதார் என்ற பிரச்

னைக்கே இடமில்லை. மொத்தம் பத்துப் பேரில் இரண்டே பேர் தான் பிராம்மணர்கள். பொதுவாக எல்லா மந்திரிகளுமே லஞ்சம், சுயநலம், உத்தியோக வேட்டை இந்தமாதிரி விவகாரங்களில் ஈடுபடாதவர்கள் என்று சொல்லலாம். மக்களுக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? அதோடு சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ராஜாஜியிடம் பயபக்தி உண்டு. அதனுல் லஞ்ச ஊழல் மிகவும் குறைந்துவிட்டது. அவர் வந்த பிறகு மழை பெய்தது. விவசாயிகள் சுபிட்சத்தைக் கண்டார்கள்; அதனுல் அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டது. சமீபத்தில் சென்னையில் இரண்டு நீர்ப்பாசனத் திட்டம் அமல்செய்வதற்கான ஏற்பாடுகளும் நடந்திருக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களைச் செய்த ராஜாஜி பதவியை விட்டுப் போய் விடுவதென்ருல்—?

அவர் அடுத்த பொதுத் தேர்தலைக் கருத்தில் வைத்துக் கொண்டு எதையும் செய்யவில்லை; அடுத்த தலைமுறையில் வாழ்பவர்களுக்கு நன்மை விளைக்கவேண்டும் என்பதுதான் அவர் விருப்பம். தீர்க்கதரிசனமுள்ள சிறந்த அரசியல்வாதிக்குரிய லட்சணம் அதுவே.

### மனித வேற்றுமை

உயர்ந்த மனிதன் எது நியாயம் என்று அறிவான்; தாழ்ந்த மனிதன் எது விற்கும் என்று அறிவான்.

—'ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன்'

### ரெயிலும் கம்பளிப் பூச்சியும்

கிழக்காப்பிரிக்காவில் காண்டாமிருகம், ஒட்டைச்சிவிங்கி போன்ற பெரிய விலங்குகள் பல சமயம் ரெயில்வே தண்டவாளத்தில் வந்து நின்று தாங்களும் மாண்டு, ரெயில் வண்டியையும் நிறுத்திவிடுவதுண்டு. ஆனுல், சமீபத்தில் நைரோபி பிரதேசத்துக்கு வடக்கே கம்பளிப் பூச்சிகளும் இப்படிச் செய்ததுதான் விந்தை.

கொழு கொழு என்றிருந்த பல லட்சக்கணக்கான கம்பளிப்பூச்சிகள் படை படையாய்த் தண்டவாளங்களை மொய்த்துக் கிடந்தன. ரெயில் எஞ்சின்கள் இவைகளை உழுது கொன்று தடம் புரண்டு கீழே இறங்கி நின்று விட்டன. இதனுல் மூன்று நாள் வரைக்கும் ஒவ்வொரு வண்டியும் இரண்டு மணி நேரம் தாமதித்துவிட்டது. இதற்கும் அதிகமாக வண்டிகள் தாமதித்து விடக்கூடாதே; அதற்காக ஒவ்வொரு வண்டியையும் பின்னே யிருந்து தள்ள இரண்டாவது எஞ்சின் ஒன்றையும் கோத்திருந்தார்கள். இது கம்பளிப்பூச்சி எதிர்ப்பு நடவடிக்கை!

—'ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன்'

# அணுக்குண்டு பிறந்த வேளை

★

**ஹைட்ரஜன் குண்டு வந்ததால், உலகமே அழிந்துவிடுமோ என்ற பயம் எங்கே பார்த்தாலும் தோன்றியிருக்கிறது. அந்தக் குண்டின் ரகசியத்தைச் சுருக்கமாக இந்தக் கட்டுரையில் காணலாம். தவிர, இதனாலெல்லாம் உலகம் அழியாது என்பதையும், நம் ஹிந்துவான சாஸ்திர ரீதியாக இது விளக்குகிறது.**

சூரியனில் உள்ள லேசான ஹைட்ரஜன் அணுக்கள், ஒன்றுடன் ஒன்று இணைந்து கனமான ஹீலியம் அணுக்கள் ஆகின்றன. இப்படி இணைவதால்தான் சூரிய உஷ்ணம் உண்டாகிறது. இதேமாதிரியே ஹைட்ரஜன் குண்டிலும் உஷ்ணம் உண்டாகிறது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். யுரேனியம் அணுக்குண்டிலோ இதற்கு நேர்மாறான முறையில் உஷ்ணம் ஏற்படுகிறது. கனமான அணுக்களைப் பிளப்பதாலேயே அதில் உஷ்ணம் ஜனிக்கிறது.

கிரகங்கள் சூழ்ந்து சுற்றும் சூரியமண்டலம் மாதிரியே அணுவும் அமைந்திருக்கிறது. 'ந்யூக்ளியஸ்' என்ற மையப் பொருளை, கிரகங்களைப் போல் 'எலக்ட்ரான்' என்ற சிறு துளிகள் சுற்றுகின்றன. 'ந்யூக்ளியஸ்' என்ற மையப் பொருளில் 'புரோடான்ஸ்' என்ற நேர் (பாஸிட்டிவ்) மின்சாரத் துளிகளும் 'ந்யூட்ரான்ஸ்' என்ற மின்சார நடுநிலையான (ந்யூட்ரல்) துளிகளும் அடங்கியிருக்கின்றன. இவை இரண்டையுமே 'ந்யூக்ளியான்ஸ்' என்று பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள். ஹைட்ரஜனைத் தவிர மற்ற மூலப் பொருள்கள் (எலிமெண்ட்ஸ்) அனைத்தின் அணுக்களிலும் ஒரு விசித்திரம் காணப்படுகிறது. அவற்றின் 'ந்யூக்ளியஸ்' என்ற மையப் பொருளில் அடங்கியுள்ள 'புரோட்டான்' துளிகள், 'ந்யூட்ரான்' துளிகள் இவைகளின் திணிவு (mass) நிறையைத் தனித்தனியே கணக்கிட்டுக் கூட்டினால் வருவது எவ்வளவோ, அதைவிடச் சிறிது குறைவாகவே மையப் பொருளின் மொத்தத் திணிவு நிறை இருக்கிறது. அதாவது, பகுதிகளின் கூட்டைவிட மொத்தம் குறைவாக இருக்கிறது. 'ந்யூக்ளியான்'கள் பிணைந்து மையப் பொருளாக அமைவதில், பொருள் திணிவு சிறிதளவு, சக்தி (எனர்ஜி) ஆக மாறிவிடுவதே இந்தத் திணிவு நிறைக் குறைவு (mass defect) ஏற்படக் காரணமாம். அணுவைப் பிளக்கும்போது, இந்தச் சக்தியைத்தான் விடுவிக்கிறார்கள். இதுவே ஹிரோஷிமாவில் வெடித்த அணுக்குண்டில் நிகழ்ந்த விஷயம். இப்படி

**காப்பிரைட்: தி அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் (ஆங்கிலம்: மே '54), பெங்களூர்.**

இல்லாமல், லேசான அணுக்களை இணைத்துக் கனமான அணுக்களாகச் செய்வதன் மூலமும் இதே மாதிரி சக்தியை வெளிப்படுத்தலாமாம்.

அணுக்களைப் 'பிளப்பது' (ஃபிஷன்), 'இணைப்பது' (ஃப்யூஷன்) இரண்டில் எந்த முறையை அநுஷ்டித்தாலும் சரி, வெளிப்படும் சக்தி அபரிமிதமாயிருக்கிறது. [இங்கே ஒரு விஷயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். சாதாரணமாக வெடிக்கும் பிற குண்டுகளிலும் சரி, தீ மூட்டுவதிலும் சரி, வெளிப்படும் உஷ்ணம் - அதாவது சக்தி - அணுவின் மையப் பொருளிலிருந்து வருவதல்ல; மேற்பரப்பிலிருந்தே வருகிறது. அங்கே அணுப்பிளப்போ, இணைப்போ இல்லை - ஆசிரியர், 'மஞ்சரி'.] அணுப்'பிளப்பு','இணைப்பு' இரண்டிலும் ஏற்படக் கூடிய சக்தி எவ்வளவு என்று கணக்கிடுவதற்கு, ஐன்ஸ்டீன் ஒரு சூத்திரம் (ஃபார்முலா) தந்திருக்கிறார். அதுமிகவும் பிரசித்தமான சூத்திரம். $E{:}mc^2$ என்பதுதான் அந்தச் சூத்திரம். E என்பது சக்தி. m என்பது திணிவு. c என்பது ஒரு செகண்டுக்கு இவ்வளவு ஸெண்டிமீட்டர் என்ற விகிதத்தில் ஒளியின் வேகம். திணிவு நிறையை ஒளி வேகத்தின் சதுரத்தால் பெருக்கக் கிடைக்கும் அளவே சக்தியின் அளவு. யுரேனியம் 235 அணுவைப் பிளந்தால் இந்தக் கணக்கின்படி கிடைக்கும் சக்தி ஒரு பவுண்டுக்கு 4,300 கோடி பிரிட்டிஷ் தெர்மல் யூனிட் உஷ்ணம் ஆகிறது. ஹைட்ரஜன் அணுக்களை ஹீலியம் (திணிவு எண் 4) அணுக்களாக இணைத்தால் கிடைக்கும் சக்தி ஒரு பவுண்டுக்கு 30 ஆயிரம் கோடி தெர்மல் யூனிட் உஷ்ணம் ஆகிறது.

பத்திரிகைச் செய்திகளின்படி அணுக்குண்டு யுகம் 16-7-'45 காலை 5-30 மணிக்கு, புது மெக்ஸிகோ நகருக்கு அருகே அல்மகார்டோ (34 டிகிரி வடக்குலாட்டிட்யூட்; 105 டிகிரி மேற்கு லாஞ்ஜிட்யூட்) என்ற இடத்தில் பிறந்திருக்கிறது. அப்போது சனி உச்சத்தில் இருந்திருக்கிறான். அதற்கு ஒரு வாரம் முந்தி ஜூலை 9 ஆம் வ தான் பூர்ண சூரியக் கிரகணம் பிடித்தது. அது ஐக்கிய அமெரிக்காவின் ஜன்ம லக்னத்திலே தொடங்கியிருக்கிறது. வாஷிங்டன் நகரத்துக்குச் சிறிது தூரத்தில் ஆரம்பித்து, கானடா, வட அட்லாண்டிக், ஃபின்லாண்ட், மத்திய ருஷியா இவைகளைக் கடந்து, சீன எல்லையில் முடிந்திருக்கிறது. அணுக்குண்டின ஜன்மலக்னத்தைச் சனி, ராகு இரண்டு நீசக்கிரகங்களும் சூழ்ந்திருக்கின்றன. தீ விபத்து, நாசம், யுத்தம் இவைகளுக்கு அதிபதியான செவ்வாய் பன்னிரண்டாம் இடத்தில் இருக்கிறான்.

இந்த அணுக்குண்டு ஜாதகத்தில் தீய சக்திகளே நிறைந்திருப்பதால், தீமைகளே விளைய ஏதுவா யிருக்கிறது. உலக மக்களின் மனச்சாட்சியை எழுப்ப வேண்டும்; தன்னலத்தையே குறிக்கோளாகக் கொண்ட ராஜதந்திரிகளின் செயல்களிலிருந்து பாதுகாப்புத் தேடிக்கொள்ள வேண்டும். இல்லையானால், 1979-இல் சனிதசை வரும்போது பெருந்தீமை நேரும்.

சமீபத்தில் அணுக்குண்டுகளால் கோர விளைவுகள் உண்டாகலாம். விருச்சிகத்தில் ராகுவும் சனியும் சேரும்போது, இன்னும் சில குண்டுகளைப் பரீட்சித்துப் பார்ப்

பார்கள். அதனால் காலநிலைக்கே பெரும் பாதகம் நேரலாம். பயங்கரப் புயல்கள் எழலாம். அமெரிக்காவில் கடும்புயல் வீசி மழை பெய்யலாம். விருச்சிகம் மர்மமான ஒரு ராசி. ஆகவே, ஹைட்ரஜன் குண்டை விட அபாயமான ஒரு குண்டைக்கூடக் கண்டு பிடிப்பார்கள்.

சில ஹைட்ரஜன் குண்டுகள் வெடிப்பதால், மண் உலகமே அழிந்து போகும் என்று சமீபத்தில் ராஜதந்திரிகளும் விஞ்ஞானிகளும் வர்ணித்திருக்கிறார்கள். கடல்களிலும் ஆறுகளிலும் உள்ள தண்ணீர் அனைத்துக்கும் 'சங்கிலி விளைவு' (செயின் ரியாக்ஷன்) மூலம் ஹைட்ரஜன் அல்லது ட்யுடீரியம் குண்டு கொள்ளி வைத்துவிடும் என்று அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். வேறு வார்த்தையில் சொன்னால், ஊழித்தீதான் தலைக்கு மேலே வரக் காத்திருக்கிறது என்றே இதற்கு அர்த்தம்.

விஞ்ஞானிகள் இப்படிச் சொன்னாலும், உண்மையில் பிரளயம் வரக் கூடிய காலத்தைப்பற்றி நம் ஹிந்து வான சாஸ்திரங்கள் வேறு விதமாகக் கூறுகின்றன. நம் கிரந்தங்கள் சொல்லும் யுகங்கள் வெறும் கற்பனை அல்ல; சாஸ்திரீயமாகக் கணக்கிட்டவையே.

சகல கர்மாக்களின்போதும் ஒவ்வொரு ஹிந்துவும் செய்யும் சங்கல்பம், பூமி எப்போது ஏற்பட்டது என்பதைத் தெளிவாக்கும். அசுவனி தொடக்கத்தில் 'ஈக்வேட்டர்' என்ற மத்திய ரேகையில் க்ரீன்விச் நகருக்கு 76 டிகிரி கிழக்கே கிரகங்களெல்லாம் ஒரே வரிசையாகக் கூடியிருக்கும் போதே ஒரு மகாயுகம் ஆரம்பிக்கிறது என்றும், இதே மாதிரி ஒரு மகாயுகத்தின் முடிவிலும் அவை கூடுகின்றன என்றும் நம் முன்னோர்கள் மதிக்கிறார்கள். இப்படி எல்லாக் கிரகங்களும் ஒரு தடவையிலிருந்து மறுதடவை ஒரே வரிசைக்கு வர 43 லட்சத்து 20 ஆயிரம் வருஷம் ஆகுமென்று அவர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இந்தச் சதுர்யுகங்களும் சேர்ந்ததே ஒரு மகாயுகம். அதில் 12,000 தேவ வருஷங்கள் அல்லது 43,20,000 சாதாரண வருஷங்கள் அடங்கியிருக்கின்றன. 71 மகாயுகங்கள் அடங்கியது ஒரு மன்வந்தரம். 14 மன்வந்தரங்கள் சேர்ந்தது ஒரு கல்பம். இதுவே ஒரு பிரம்ம தினம். உலகம் அழிந்து அழிந்து மீண்டும் படைக்கப் பெறுகிறது. படைப்புக் காலம் பிரம்மதினம்; அழிந்திருக்கும் காலம் பிரம்ம ராத்திரி. இரண்டும் சேர்ந்ததே பிரம்மாவுக்கு ஒரு நாள். இந்தப் பிரம்மதினங்கள் 360 சேர்ந்தது ஒரு பிரம்ம வருஷம். 100 பிரம்ம வருஷம் பிரம்மாவின் ஆயுசு. பிரம்மாவின் ஆயுசு முடியும்போது, மகாப்பிரளயம் ஏற்படுகிறது.

நாம் தினந்தோறும் செய்யும் சங்கல்பப்படி, நிகழும் கல்பத்தில் ஆறு மன்வந்தரங்கள் இதுவரைக்கும் சென்றிருக்கின்றன. ஏழாவது மன்வந்தரம் நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் ஏழு மன்வந்தரங்கள் பாக்கி. ஏழாவது மன்வந்தரத்தில் 27-மகாயுகங்கள் கடந்து விட்டன. 28-ஆவது மகாயுகம் நடந்துகொண்டிருக்கிறது.

ஆகையால், இந்தக் கல்பத்தில் இதுவரைக்கும் சென்றிருக்கும் வருஷங்களை நாம் கணக்கிடலாம்:

| விவரம் | வருஷங்கள் |
|---|---|
| கல்ப உதயம் .. .. .. .. .. .. .. | 17,28,000 |
| 6 மன்வந்தரங்கள் .. .. .. .. .. | 1,85,06,88,000 |
| 27 மகாயுகங்கள் .. .. .. .. .. | 11,66,40,000 |
| 28-ஆவது மகாயுகத்தில்— | |
| கிருதயுகம்.. .. .. .. .. .. .. | 17,28,000 |
| திரேதாயுகம் .. .. .. .. .. .. | 12,96,000 |
| துவாபரயுகம் .. .. .. .. .. .. | 8,64,000 |
| கலியுகம் .. .. .. .. .. .. .. .. | 5,054 |
| மொத்தம் — | 1,97,29,49,054 |
| சிருஷ்டி நிகழ்ந்த காலம் .. .. .. | 1,70,64 000 |
| இந்தச் சிருஷ்டியின் ஆரம்பத்திலிருந்து சென்றுள்ள காலம் .. | 1,95,58,85.054 |

இன்று நாம் கலியுகத்தின் ஆரம்பத்திலேயே இருக்கிறோம். இது முடிய இன்னும் 4,26,946 வருஷங்கள் மிச்சம் இருக்கின்றன. ஆகவே, நம் வாழ்நாளிலோ, நம் கொள்ளுப் பேரர்கள் வாழ் நாளிலோ இந்த மண் உலகத்துக்குப் பிரளயமோ நாசமோ வராது.

மனித வருஷக்கணக்கில் 31 லட்சத்து 50 ஆயிரம் கோடி கோடி வருஷங்களே இந்த உலகத்தின் ஆயுள் என்று ஹிந்து வானசாஸ்திரிகள் கணக்கிட்டிருக்கிறார்கள். பிரளயம் இரண்டு வகை. ஒன்று, நைமித்திகப் பிரளயம். பிரம்ம தினம் ஒவ்வொன்றின் முடிவிலும் இது ஏற்படும். இதில் சிருஷ்டி வஸ்துக்க ளெல்லாம் அழியும். மற்றொன்று, மகாப் பிரளயம். ஒவ்வொரு பிரம்மாவின் ஆயுளும் முடிந்தவுடன் அது நேர்கிறது. மகாப் பிரளயத்தின்போது, சகல உலகங்களும் அவற்றின் ஜீவராசிகளும் அழிந்து போகும். எனவே, ஓராயிரம் அணுகுண்டுகள் வெடித்தாலும் மண்ணுலகமோ மனித வர்க்கமோ இப்போது அழியப் போவதில்லை என்று நாம் நிச்சயமாய் நம்பலாம். சிருஷ்டியில் ஏதோ தெய்விக நோக்கம் இருக்கிறது. பேராபத்து வந்திருப்பதாக விஞ்ஞானிகளுக்குத் தோன்றக் கூடிய எந்த நிலைமையிலிருந்தும் தப்பித்துக்கொள்ளும் வழி எதுவேனும் இயற்கையிலே எப்போதும் ஒளிந்துதான் கிடக்கும். அதிகார வெறி பிடித்த அரசியல்வாதிகள், அநாவசியமான சங்கடங்களை யெல்லாம் சமாதானத்துக்கு இடையூறாகக் கற்பனை செய்துகொண் டிருக்கிறார்கள்.

ருஷியாவும் ஐக்கிய அமெரிக்காவும் ஆயுத உற்பத்தியில் போட்டா போட்டி நடத்திக்கொண் டிருப்பதால், யுத்தப் படையெடுப்புக்குத் தற்காப்பு உண்டாகிவிடாது. ஆயுதபலத்தால் தேசத்துக்குப் பத்திரம் ஏற்படாது. பலமான நம்பிக்கைதான் வேண்டும். அதனாலேயே அரசியல், சட்டம், பொருள் இவைகளில் மட்டும் அல்ல, ஆத்மிகத் துறையிலும் நலம் பெற முடியும்.

சமூக வாழ்வில் எத்தனையோ குறைகள் இருக்கலாம்; ஆனால் இதைப்போல் பரிதாபமானது வேறொன்றில்லை.

# இப்படி ஆயிரம் பெண்கள்

**மாலதி பாய்**



என் தோழிகளில் பல வகையான பேர்கள் இருக்கிறார்கள். காரிலிருந்து ஸோபாவிலும், ஸோபாவிலிருந்து கட்டிலிலும் உட்காரும் பணக்கார அழகிகள் சிலர். சாப்பாடு துணிக்குக் கவலையில்லாமல் வீட்டில் இரண்டொரு வேலைக்காரர்களை வைத்துக்கொண்டு, சமூக சேவை செய்யும் பெண்மணிகள் சிலர். இவர்கள் எப்போதும் ஆனந்தமாக இருக்கிறார்கள்.

இவர்களைத் தவிர என்றும் பணமுடையிலேயே வாழும் ஒரு வகுப்பார் இருக்கிறார்கள். உழைப்பினால் வாழும் இந்த வகுப்பாருடைய இன்ப துன்பங்களை அறிந்துகொள்வதுதான் நமக்கு மிகவும் அவசியம். அவர்களுக்கு இயன்றவரையில் உதவி செய்தால்தான் நம் நாட்டின் வாழ்க்கைத் தரம் உயரும்.

இப்படிப்பட்டவர்களில் சிலருடைய வாழ்க்கையை மட்டும் உங்களுக்கு அறிமுகப்படுத்துகிறேன். இதோ இந்தப் பெண் அவசர அவசரமாக எங்கே போகிறாள்? இவளுக்கு வயது பதினேழு; மாநிறம்; கொழுக்குமழுக்கென்று இருக்கிறாள். நெற்றியில் காலணா அகலம் குங்குமம். ஆனால் அந்தக் குங்குமத்துக்கு உரியவன் இவளை எட்டிக்கூடப் பார்ப்பதில்லை. இவள் குரூபியல்ல; நடத்தையும் கெடுதலாகத் தோன்றவில்லை. பின்னே என் இப்படி நடந்தது?

இவளுடைய கணவன் பாத்திரங்களுக்குக் கலாய் பூசுகிறவன். தாயின் பேச்சைக் கேட்டு அவன் இவளைப் படாத பாடு படுத்தினான். சாப்பாடும் துணியும் கிடைத்தால் போதும்; இவள் அங்கே வாழ்நாள் முழுவதும் உழைக்கத் தயார். ஆனால் அவன் இவளைத் தள்ளி வைத்துவிட்டான். இவள் இப்போது பிறர் வீட்டில் பத்துத் தேய்க்கிறாள்; மெழுகிப் பெருக்கிக்

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: ஏப்ரல் '54),
கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.



கோலமிடுகிறாள். ஒரு நிமிஷமாவது இவள் வேலை செய்யாமல் இருப்பதில்லை. இவர்கள் சாதியில் மறுமணம் செய்து கொள்ளலாம்; ஆனால் இவளோ, "ஒரு தடவை என் தலையெழுத்து இப்படி ஆனது போதும்; இனி அந்தப் பரீட்சையே வேண்டாம்" என்கிறாள்.

அதோ எதிரில் ஒரு கிழவி வருகிறாள், பாருங்கள்! இவளுக்கு வயது அறுபது ஆகிறது. இன்னும் கண்பார்வை கூர்மையாக இருக்கிறது. ஒரு பல்லாவது ஆட்டங்காணவில்லை; தலை நடுங்கவில்லை; உடம்பும் இளைக்கவில்லை. இவள் கணவன் 'ரேஸ்' பைத்தியம் பிடித்தவன். கொஞ்சநஞ்சம் இருந்ததையும் குதிரைப் பந்தயத்தில் தொலைத்துவிட்டு, ஜெயிலுக்குப் போய்ப் பிறகு எங்கோ மறைந்துவிட்டான். அவன் போன இடம் தெரியவில்லை. அந்தக் கிழவன் எங்காவது செத்துப் போயிருப்பான். ஆயுசு முழுவதும் வீட்டை விட்டு வெளிவராத இந்தக் கிழவி இப்போது பிறர் வீட்டில் வேலை செய்கிறாள். அரிசி புடைப்பது, நோம்புவது, அரைப்பது, குழந்தைகளைப் பார்த்துக்கொள்வது - இப்படிப் பல வேலைகள் செய்கிறாள். இந்த வயதிலும் இவள் கூலிவேலை செய்து பிழைக்க வேண்டியிருக்கிறது. வயிற்றுப் பாட்டைக் கவனிப்பது இந்தக் காலத்தில் எவ்வளவு கஷ்டமான காரியம் என்பதற்கு இவள் அத்தாட்சியாக இருக்கிறாள்.



இதோ இந்த இளம் பெண்ணைப் பாருங்கள். எப்போதும் இடுப்பிலே ஒரு குழந்தை. விடியற்காலை ஐந்து மணிக்கு இவள் பணக்காரர் வீட்டுக்கு வேலை செய்யப் போகிறாள். சமையலுக்குச் சாமான்கள் எடுத்து வைப்பது, துணி துவைப்பது முதலியவை இவளுடைய வேலைகள்.

இதைத் தவிர இரண்டொரு வீடு களில் சில்லறை வேலைகள் செய் கிறாள். இவளுடைய கணவன் கொத்துவேலை செய்கிறான். அவன் எப்போதும் நோயாளி. ஆதலால் வருமானம் குறைவு. வருஷத்தில் ஆறு மாதங்களுக்குமேல் வேலை கிடைப்பதில்லை. ஏதாவது ஒரு வீட்டில் வெள்ளையடிப்பதாக இருந் தால் இவனை உதவியாளாகக் கூப்பிடுவார்கள். நான்கு குழந்தை களும் கணவனும் கொண்ட குடித் தனத்தை இவள்தான் நடத்து கிறாள். இவ்வளவு கஷ்டத்திலும் இவள் ஒரு நாளாவது சோர்வுற்று நான் பார்த்ததில்லை.

இன்னும் ஒரு பெண்மணியைப் பாருங்கள். இவளுடைய முகந் தான் எவ்வளவு கடுமையாக இருக் கிறது! இவளுடைய கணவன் ஒரு துரையிடம் வேலையாக இருக் கிறான். எப்போதும் ஊருராகப் போவான். இவள் தன் பன்னி ரண்டு வயதுப் பையனுக்கு மணம் செய்து வைத்துவிட்டாள். ஐந்து வயதான இவளுடைய மருமகளும் இவளோடு கூலிவேலை செய்கிறாள். வீட்டில் ஐந்தாறு சிறுவர்கள். அவர்களின் படிப்புக்குச் சம்பளம் கட்டுவதற்குள் இவள்பாடு சொல்லி முடிகிறதில்லை; இவளுக்குக் கொஞ்சம் மருத்துவமும் தெரியும். இந்த மருத்துவச்சியைக் கூப்பிட்டு எத்தனையோ பேர் தங்கள் குழந்தை களைச் சாகக் கொடுத்திருப்பது எனக்குத் தெரியும். இவ்வளவு செய்தும் இவளுக்கு வேண்டிய வருமானம் கிடைப்பதில்லை யாம்.

கிராமங்களில் இப்படி எத் தனையோ பெண்கள் சிரமப்படு கிறார்கள். வாழ்நாள் முழுவதும் இவர்கள் வேலை செய்யத் தயார்; ஆனால் போதிய ஊதியம் கிடைப்ப தில்லை. இவர்களுக்குப் படிக்க எழுதத் தெரியாது. வீட்டில் எப் போதும் வறுமை; நோய்; பசியும் பட்டினியும் சகஜம். அறிவும் பண மும் உள்ளவர்கள் இம்மாதிரியான குடும்பங்களுக்குக் கூடிய அளவு உதவி செய்தால் நல்லது. இவர் களும் நம்மைப் போன்ற பெண்கள் தான். சரியான சூழ்நிலையும் சந்தர்ப்பமும் கிடைத்தால் இவர் களும் முன்னுக்கு வர முடியும்.

### அறிவாளியும் மேதையும்

மாத்திரைகளைக் கண்டு பிடித்தவன் புத்திசாலி. அவை களுக்கு மேலே சர்க்கரையைப் பூசினனே, அவன் மேதை.

—'ப்ளுபர்டு ப்ரீஃப்ஸ்'

### ஒரு பாஷை

புன்சிரிப்பு என்பது குழந்தையும் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு பாஷை.

—'டிப்ஸ்'

### பின்னே என்ன காரணம்?

"மீனு உலகத்தில் உள்ள யாரை வேண்டுமானாலும் கல்யாணம் செய்துகொள்ளுவாள்."

"பின்னே ஏன் அவள் கன்னியாகவே இருக்கிறாள்?"

"உலகத்தில் உள்ள யாருக்கும் அவளைப் பிடிக்கவில்லை. அவ்வளவுதான்."




[இதோ சில கேள்விகள்: எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு 82-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

(1) வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் யானையின் தந்தம் நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால், அது யானையின் மேல் வரிசைப் பல்லா, கீழ் வரிசைப் பல்லா?

(2) பல வீடுகளில் அடுப்பெரிக்கக் 'கோக்' உபயோகிக்கிறார்கள். இது நிலக்கரியிலிருந்து வருகிறதா? இதிலிருந்து நிலக்கரி (கோல்) வருகிறதா?

(3) ஸேஃப்டி ரேஸர் பிளேடுகளைக் கண்ணாடி டம்ளருக்கு உட்புறத்தில் தேய்த்துக் கூராக்க முயல்கிறார்களே; இதனால் கூர் ஏற்படுமா? ஏற்படாதா?

(4) வீட்டிலே சாமான்களைச் சுற்றி அழுக்கு அதிகமாய்த் திரண்டு குவிகிறது. சாமான் இல்லாத வெளியிடத்தில் அப்படி அழுக்குத் திரள்வதில்லை. இதை எல்லாரும் கண்டிருக்கிறோம். இதற்கு என்ன காரணம்?

(5) எகிப்து ராஜ பரம்பரையில் டுட் (Tut) என்று ஓர் அரசர் உண்டு. அந்த அரசர் குழந்தையா, பெரியவரா, பையனா?

(6) சிலந்திப் பூச்சியின் வலையினால் மனிதனுக்கு ஏதாவது உபயோகம் உண்டா?

(7) பட்சிகளுக்குள்ளே மிகவும் உயரமானது எது?

(8) அமெரிக்க நகரங்களில் ஒன்றுக்கு 'மோட்டார் ஸிட்டி' என்று பெயர். அது எது என்று உங்களுக்குத் தெரியுமா?

(9) பனி பல சமயம் மழையாக மாறிவிடுகிறது. மழை திரும்பவும் பனியாக மாறுமா? மாறாதா?

(10) ஜனத் தொகையில் மிக அதிகமான சத விகிதம் ரோமன் கத்தோலிக்கர் உள்ளது எந்த நாடு?

(11) கடலாழத்தை இந்தக் காலத்தில் எப்படி அளக்கிறார்கள்?

(12) மனிதருள் ஆண் உடம்பில் உள்ள எலும்புகள் பெண் உடம்பில் உள்ள எலும்புகளை விட அதிகமா? குறைவா? அல்லது இரண்டும் சமமா?

(13) வெங்காயம் உரிக்கும் போது நம் கண்ணில் நீர் வருகிறதே. எதனால்?


(14) கொரியாவின் வடக்கு எல்லையில் உள்ள நாடு எது என்று சொல்ல முடியுமா?

(15) தென்னமெரிக்காவில் உள்ள நாடுகளுள் மிகப் பெரியது ஒன்று உண்டு; அதன் பெயர் தெரியுமா?

(16) 'ரேடியோ-ஆக்டிவிடி' என்கிறார்களே; அது என்ன?

(17) ஒரு நாளில் 20 பவுண்டு பால் கறப்பதற்கு, ஒரு பசு மாடு எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும்?

(18) ஒரு மான் எவ்வளவு புல் தின்னும்?




# கஜேந்திர மோட்சம்

பாற்கடலின் கரையில் திரிகூடம் என்று ஒரு பெரிய மலை இருக்கிறது. தங்கம், வெள்ளி, இரும்பால் ஆன அந்த மலையின் மூன்று சிகரங்கள் திசைகளை ஒளிரச் செய்தன. ரத்தினம், தாதுப் பொருள் முதலியவை மற்றச் சிகரங்களில் இருந்ததால் அவையும் ஒளி வீசின. பாற்கடலின் அலைகள் அந்த மலை அடிவாரத்தில் மோதுவதைக் காணும்போது மலையரசனின் கால்களைப் பிடித்துக் கழுவிக் கடல் அவனை உபசரிப்பதுபோல் தோன்றும்.

சித்தர்களும் சாரணர்களும் அந்த மலையின் குகைகளில் தெய்வப் பெண்களுடன் வசித்து இன்புற்றார்கள். கந்தர்வர்களின் இசையொலியைக் கேட்டுச் சிங்கங்கள் ஏதோ பகை விலங்கு கர்ஜிப்பதாக எண்ணிச் சண்டைக்கு முற்படும். காட்டில் வாழும் பல்லாயிரம் விலங்குகளும் அங்கே இன்பமாய்ப் பொழுது போக்கின. ரத்தின மணல் நிறைந்த அருவிகளிலும் ஓடைகளிலும் தேவ மாதர்கள் வந்து நீராடுவார்கள். காற்றில் அப்போது தெய்வ மணம் வீசும்.

அந்த மலையின் அடிப்பாகத்தில் ருதுமத் என்னும் பூங்கா ஒன்று இருந்தது. அது வருணனுடையது. தேவமாதர் அங்கே வந்து விளையாடிச் செல்வார்கள். மந்தாரம், பாரிஜாதம், பாதிரி, அசோகம், சம்பகம் முதலிய மரங்கள் என்றும் பூத்துக் குலுங்கி, காய்கனிகளுடன் விளங்கின. மா, பலா, கமுகு, தென்னை, மாதுளை முதலிய மரங்களும் அதில் இருந்தன.

அதன் நடுவே தாமரைப் பொய்கை ஒன்று உண்டு. ஆயிரம் இதழ்களுடன் கூடிய அழகிய தங்கத் தாமரைகளும் ஆம்பல்களும் அதில் இருந்தன. வண்டுகளின் ரீங்காரமும் பறவைகளின் ஒலியும் அங்கே கேட்டுக் கொண்டே இருக்கும். மல்லிகை, முல்லை, ஜாதி முதலிய பூங்கொடிகளும் புன்னை, சுரபுன்னை



**கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டுமல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதில் ஒரு பகுதி இது.**

முதலிய மரங்களும் அங்கே இருந்தன.

அந்த மலைச் சாரலில் இருந்த காட்டில் கஜேந்திரன் என்னும் யானை இன்பமாக வாழ்ந்து வந்தது. அது மரங்களை முறித்தும் புதர்களை அழித்தும் அங்கே விளையாடிக்கொண் டிருக்கும். அதன் மதநீரின் மணத்தை மோப் பம் பிடித்ததுமே புலி, காண்டா மிருகம் முதலிய கொடிய விலங்கு களும் பாம்புகளும் பயந்து ஓட்டம் பிடிக்கும். ஆனால் முயல், மான் முதலிய எளிய பிராணிகளைக் கஜேந்திரன் ஒன்றுமே செய்வ தில்லை; ஆகவே, அவை அங்கே பயமின்றி இன்புற்று வாழ்ந்தன.

ஒரு நாள் வெயில் தாங்காமல் தாகத்தோடு அந்த யானை தன் கூட்டத்தோடும் பெண் யானைக ளோடும் அம் மலைச் சாரலை அதிரும்படி சுற்றி வந்தது. அப்போது அந்தப் பொய்கையில் மலர்ந்திருக்கும் தாமரை மலரின் மணம் காற்றில் கலந்து வீசியது. உடனே யானை அங்கே வந்து நீரில் இறங்கிற்று. தங்கத் தாமரையின் மகரந்தம் படிந்து மணம் வீசும் அதன் நீரைத் தாகந் தீரப் பருகியது. துதிக்கையால் நீரை வாரி முதுகில் இறைத்துக் கொண்டது; சற்றுக் களைப்பு நீங்கியதும் பெண் யானைகளின் மேலும் குட்டிகளின் மேலும் வாரி இறைத்தது. இப்படித் தன்னை மறந்து விளையாடிக் கொண்டிருந்தது. பகவானுடைய மாயையினால் அதற்கு இந்த இன்பமே பெரிய இன்பமாக இருந்தது.

கோபமுற்ற முதலை ஒன்று அப்போது அதன் காலைக் கவ்வியது. எதிர்பாராதபடி இப்படி அகப்பட்டுக்கொண்ட கஜேந்திரன் தன்னால் முடிந்த மட்டும் திமிறிக் கொண்டு தப்பப் பார்த்தது. பெண் யானைகள் இந்தக் காட்சியைக் கண்டு மனங் கலங்கி அலறின. மற்ற யானைகள் தம்மால் முடிந்த வரையில் கஜேந்திரனை இழுத்துப் பார்த்தன. இப்படிப் பல ஆயிரம் ஆண்டுகள் இழுத்துப் பறித்துக்

கொண்டு இருந்தன. தேவர்கள் இதைக் கண்டு வியப்புற்ருர்கள். நாளடைவில் கஜேந்திரனின் மன வலிமையும் உடல் வலிமையும் குன்றத் தொடங்கின. நீரில் இருந்ததால் முதலேயின் வலிமை வர வர மிகுதியாயிற்று.

அப்போது பகவானுடைய அருளால் கஜேந்திரன் ஆழ்ந்து யோசித்தது: 'என் சுற்றத்தாரால் என்னை விடுவிக்க முடியவில்லே. இந்தப் பெண் யானைகளேப்பற்றியோ கேட்க வேண்டியதில்லே. விதியின் பாசந்தான் இந்த முதலேயின் உருவத்தில் என்னைச் சுற்றிக்கொண்டிருக்கிறது. ஆகவே, எமனைக் கண்டு பயந்தவனைக் காக்கும் ஆற்றல் உள்ள அந்தப் பகவானைத்தான் இனி அழைக்க வேண்டும்.'

பிறகு முன் பிறப்பில் கற்ற ஒரு மந்திரம் அதற்கு நினைவு வந்தது. அதை ஜபித்துப் பகவானை வேண்டிக் கொண்டது:

''உலகம் முழுவதும் அழிந்து இருள் சூழும்போது அந்த இருளுக்கு அப்பால் ஜோதிப் பிழம்பாக நிற்கும் பகவானே! என்னைக் காத்தருள். ஆயிரக் கணக்கான ஆண்டுகள் கொடிய தவம் செய்து முனிவர்கள் காண விரும்பும் ஆண்டவனே, உன்னைச் சரணடைகிறேன். பெயர், உருவம் நன்மை, தீமை எதும் இல்லாதவனுக இருந்தும் மாயையினுல் உலகம் அனைத்தையும் படைக்கும் ஈசனே, நீயே தஞ்சம் என்று உன்னை அடைந்தேன். மெய்யன்பர்கள் ஒரு பயனையும் கருதாமல் இருந்தும் இன்பக் கடலில் ஆழ்ந்து எப்போதும் உன்னைப் புகழ்ந்தவண்ணம் இருக்கிருர்கள். நீயே இனி எனக்குப் புகல்.''

பிரம்மா முதலிய தேவர்கள் இதைக் கேட்டார்கள். தங்களிடம் இந்தச் சிறப்புகள் எல்லாம் இல்லே என்பதை உணர்ந்தார்கள். ஆகவே, கஜேந்திரனைக் காக்க அவர்கள் முன்வரவில்லே. அப்போது எல்லாத் தெய்வங்களின் உருவாய், அகிலத்தையும் அளாவி நிற்கும் பகவான் நாராயணர் அங்கே தோன்றினுர். தேவர்கள் அவரைப் போற்றினுர்கள். வேதமே உருவாய் வந்த கருடனின் முதுகில் ஏறிக்கொண்டு, சக்கராயுதத்துடன் அவர் கஜேந்திரன் இருக்கும் இடத்துக்கு விரைந்து வந்தார். முதலே ஒரு புறம் இருக்க, உயிருக்காக மன்ருடும் கஜேந்திரன் பகவானைக் கண்டதும் ஒரு தாமரைப் பூவை எடுத்துத் துதிக்கையை உயரத் தூக்கி, ''நாராயணு, நமஸ்காரம்'' என்று கதறியது.

உடனே பகவான் கீழே இறங்கிக் கஜேந்திரனைக் கரையேற்றினுர். அதனுடன் முதலேயும் கரைக்கு வந்துவிட்டது. முதலேயின் வாயைப் பகவான் பிளந்து அதன் பிடியிலிருந்து கஜேந்திரனை விடுவித்தார். பிரம்மா முதலிய தேவர்களும் முனிவர்களும் கந்தர்வர்களும் இதைக் கண்டு பகவானைப் போற்றினுர்கள். மலர் மாரி பொழிந்தார்கள்.

அந்த முதலே முன் பிறப்பில் ஹூஹூ என்னும் கந்தர்வன். தேவல முனிவர் என்பவரின் சாபத்தால் அவன் பின்னுல் முதலேயாகப் பிறந்தான். இப்போது பகவானுடைய அருளால் சாபம் நீங்கி மிகவும் அதிசயமான வடிவத்துடன் அவரை வணங்கித் துதித்தான்.

பிறகு அந்த இடத்தை விட்டுத் தன் நாட்டுக்குப் போனான்.

பகவானுடைய ஸ்பரிசம் பட்டதும் கஜேந்திரனின் உரு மாறியது. ஆணவம் நீங்கி, பீதாம்பரதாரியாய் நான்கு கைகளுடன் அவரோடு ஒன்றி விட்டான்.

கஜேந்திரன் முன் பிறப்பில் பாண்டிய தேசத்தை ஆண்ட இந்திரத்யும்னன் என்ற மன்னன். எப்போதும் விஷ்ணுவை வழிபட்டு விரதங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்து வருவான். ஒரு நாள் மலய மலையில் மனத்தை அடக்கி, சடை அணிந்து, மௌன விரதம் பூண்டு பகவானை வழிபட்டுக் கொண்டிருந்தான். அப்போது விதி வசத்தால் அகஸ்தியர் அந்தப் பக்கம் சிஷ்யர்களுடன் வந்தார். அவரைப் பார்த்துங்கூட அவரை உபசரிக்காமல் இருந்தான் அந்த மன்னன். இதைக் கண்ட முனிவர் கோபங்கொண்டு மறு பிறவியில் யானையாகப் பிறக்கும்படி அவனைச் சபித்துவிட்டார்.

இதுவும் தன் விதியோ என்று மன்னன் ஏங்கினான். யானையாகப் பிறந்தும், முன்பிறவியில் பகவானைப் பூஜித்து வந்ததால் அவனுக்கு நல்ல அறிவு இருந்தது. 'இவனுடைய வரலாற்றைக் கேட்பவர்கள் நல்ல கதி அடைவார்கள்' என்று சொன்னதும் பகவான் தம்முடைய பாஞ்சஜன்யம் என்ற சங்கை ஊதினார். தேவர்கள் அதைக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

## பிரசங்க ரகசியம்

''பகிரங்கக் கூட்டங்களில் பிரசங்கம் செய்வதில் திறமை பெற என்ன வழி?'' என்று ஒரு நண்பர், பிரபல பிரசங்கி ஒருவரைக் கேட்டார்.

''உங்கள் ஆத்ம சிந்தனைகளைப் பிரகடனம் செய்யும் போதும், உணர்ச்சிபற்றிய அல்லது மனத்தத்துவ ரீதியான ஞானக் கருத்துக்களுக்குச் சொல் உருக் கொடுக்கும்போதும், பாண்டித்திய மொழிகளை வழங்காதிருக்க எச்சரிக்கை கொள்ளுங்கள். தம்மிச்சையான உங்கள் சொல்மாரியும், தயங்காத வாக்குப் பிரவாகமும் படாடோப அலங்காரங்களில் சிக்காதபடி பார்த்துக்கொள்ளுங்கள். பல்லசைகளுடன் நீண்ட சொற்களையும், பயனற்ற வறட்டுக் கருத்துக்களையும், இவைபோன்ற ஏனைய குற்றங்களையும் நீக்குங்கள்'' என்று சொல்லிச் சற்று நின்றார் பிரசங்கி. பிறகு, புன்சிரிப்புடன், ''இவைகளையே வேறு வார்த்தைகளில் சொல்லுகிறேனே: சரளமாய்ப் பேசுங்கள்; இயற்கையாய்ப் பேசுங்கள்; பெரிய பெரிய வார்த்தைகளைக் கொட்டாதீர்கள்'' என்று முடித்தார்.

—'க்வோட்'

உடுப்பி கிருஷ்ண விக்கிரகத்துக்குப் பூஜை செய்கிறவர் முறை மாறும் வைபவம்—

# பரியாய மகோற்சவம்


**ஸ்ரீபதி பட்**

உடுப்பியில் 'பரியாய மகோற்சவம்' எண்ணூறு வருஷ காலமாக நடைபெற்று வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் இந்த உற்சவத்துக்கு ஆயிரக்கணக்கில் பக்தர்கள் யாத்திரை வருகிறார்கள்.

ஸ்ரீ மத்வாசாரியர் உடுப்பியில் பாலகிருஷ்ண விக்கிரகத்தைப் பிரதிஷ்டை செய்தார். இந்த மூர்த்தியைப் பூஜிப்பவர்கள் முறை மாறுவதே இந்த உற்சவத்திலே முக்கியமான நிகழ்ச்சி.

மத்வாசாரியர் எட்டு மடங்களை நிறுவினார். இந்த மடாசாரியர்கள் எட்டுப் பேரும் முறைமாறிக் கிருஷ்ணனைப் பூஜை செய்கிறார்கள். ஒருவர் செய்யும் பூஜையின் கால அளவு 2 வருஷம். அது முடிந்ததும் மற்றொருவர் பூஜை முறை தொடங்குகிறது. இந்த மாறுதல் இப்படி 2 ஆண்டுகளுக்கொரு தடவை, மகர மாசம், நாலாம் நாள் (ஆங்கில ஜனவரி மாதம் 17 அல்லது 18-ஆம் தேதி) தொடங்குகிறது. இவ்வளவு நூற்றாண்டுகளாய் நடந்துவரும் இந்தச் சம்பிரதாயத்தைச் சூழ்ந்து பல சடங்குகள் நடக்கின்றன.

இந்த ஆண்டில் முறையை விட்டுக் கொடுத்தவர், பேஜாவர் மடத் தலைவராகிய ஸ்ரீ விசுவேச தீர்த்த ஸ்ரீபாதங்கள் என்பவர். பூஜையை ஏற்றவர் பலிமாரு மடத்தின் தலைவராகிய ஸ்ரீ ரகு வல்லப



**விலகியவர்**

தீர்த்த பாதங்கள் என்பவர். மகர மாசம் 3-ஆம் தேதி பேஜாவர் மடத் தலைவருடைய பூஜை முறையின் கடைசி நாள். அன்று பெரிய சந்தர்ப்பணை ஒன்று நடந்தது. இரவில் பிரம்மாண்டமான ஏற்பாடுகளுடன் தேர்த் திருவிழா நடைபெற்றது. மறுநாள் விடியற்காலையில் பூஜைப் பொறுப்பிலிருந்து அவர் விடுபட்டார்.

ஜனவரி பதினேழில் வழக்கமாகவும், எப்போதாவது சில சமயம் பதினெட்டிலும் பரியாய உற்சவம் தொடங்கும். ஆனால் இரண்டு வருஷ காலப் பூஜை விநியோகங்கள் முதலியவற்றுக்காக முன்னேற்பாடு சில மாதங்களுக்கு முன்பிருந்தே நடக்கும். விறகு, அரிசி முதலியவை வாங்க முகூர்த்தம் வைத்து அதன்படியே வாங்குவார்கள். அழகாகத்

**காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.**

தேரைப்போல் அடுக்கிய விறகு மலை, நூற்றுக்கணக்கான ஏழை மக்கள் சேர்த்ததுதான். இதனால் இரண்டு மூன்று மாதம் வரையில் அவர்களுடைய பிழைப்புக்கு வழி ஏற்படுகிறது. ஒரு மாதத்துக்கு முன்பே, சப்பரம், மண்டபம் இவைகளை அலங்காரம் செய்யத் தொடங்கி விடுவார்கள். மின்சார விளக்குகள் நிறைந்து எங்கும் ஜகஜ்ஜோதியாய்க் காட்சியளிக்கும்.

பல தினங்களுக்கு முன்பே மடங்களில் வேலை சுறுசுறுப்பாக நடக்கும். 'பரியாய'த்துக்கு உட்காரப் போகும் ஸ்வாமிகளை ஏற்கனவே பூஜையில் இருப்பவர் நீங்க மற்ற ஆறு மடத்தினரும் அழைத்துச் சம்மானம் செய்வார்கள். அப்படியே அவர் மற்ற ஆறு பேரையும் 'பரியாய உற்சவ'த்தில் தாம் முறை ஏற்கும்போது அழைத்து மரியாதை செய்வார். பரியாய மடத்தினரும் மடத்து அபிமானிகளும் விருது, மேள, தாளங்களுடன் பழங்கள், காய்கள், கிழங்குகள், அரிசி முதலிய பொருள்களை நூற்றுக்கணக்கான ஆட்களின் தலையில் வைத்து ஊர்வலம்போல் வரிசையாக எடுத்துச் செல்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

'பரியாய உற்சவ'த்தன்று நிகழ்ச்சிகள் இருட்டோடேயே ஆரம்பமாகும். பரியாயம் ஏற்கும் ஸ்வாமிகள் முதல் நாள் இரவு திக்விஜயம் முடித்துக்கொண்டு, உடுப்பிக்கு 9 மைல் தென் கிழக்கில் மத்வாசாரியரின் தண்டத்தால் தோன்றிய தீர்த்தத்துக்கு வந்து, விடியற்காலையில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு உடுப்பிக்குப் புறப்படு



வந்தவர்

வார். உடுப்பிக்கு ஒரு மைல் தூரத்தில் உள்ள 'ஜோடுகட்டெ' என்னும் இடத்துக்கு அவர் வந்ததும் பல வேட்டுக்களை எழுப்புவார்கள். அதைக் கேட்டு உடனே மற்ற ஆறு ஸ்வாமிகளும், குடை, கொடி, சாமரம், தோரணம் முதலிய விருதுகளுடன் பல்லக்குகளில் ஏறி ஊர்வலம்போல் ஒவ்வொருவராகப் புறப்பட்டுப் பரியாய ஸ்வாமிகளை எதிர்கொள்ளப் போவார்கள். முதலிலேயே வழி முழுதும் வேடிக்கை பார்க்கும் கூட்டம் நிரம்பிவிடும். இரு சாரி வீடுகளிலும் மாடிகளிலும் பெண்கள் குதூகலமாக நிற்பார்கள். அங்கிருந்து பரியாய ஸ்வாமிகள் புறப்படும் ஊர்வலம் அவசியம் பார்க்கவேண்டிய வைபவங்களில் ஒன்று. யானை, தோரணம், குடை, சாமரம் ஆகிய ராஜ விருதுகள் முன்வர, அலங்கரித்த பல்லக்கில் பரியாய ஸ்வாமிகளின் பட்டத்து விக்கிரகம் முதலிலும், பிறகு அவரும், பின்னால் முறைப்படி மடத்துக்குரிய மற்றவர்களும் புறப்பட்டுக் கிருஷ்ணன் கோயிலை நோக்கி வருவார்கள்.

தேர் வீதியில் யாரும் வாகனம் ஏறிச் செல்லக்கூடாது. அதனால் அங்கே வந்தவுடன் மடத்து ஸ்வாமிகள் எல்லோரும் பல்லக்கை விட்டு இறங்கிப் புதுத் துணி விரித்த நிலத்தின்மேல் நடந்து போவார்கள். பட்டத்து விக்கிரகத்தின் மேல் அட்சதைகளையும் பூக்களையும் தூவிக்கொண்டே கிருஷ்ண மந்திரத்துக்குப் போய்ச் சேருவார்கள். பிரார்த்தனை செய்து தானம் தட்சிணைகள் கொடுத்து ஸ்ரீமத் அனந்தேசுவர சந்திரேசுவர தேவர்களைத் தரிசிப்பார்கள்.

கிருஷ்ண மந்திரத்தின் ராஜ வாசலை ஊர்வலம் நெருங்கியதும் பழைய பரியாய ஸ்வாமிகள் புதியவரை எதிர்கொண்டு உள்ளே அழைப்பார். அங்கே தரிசனம் ஆனபின் சிம்மாசன அறையில் இருக்கும் சர்வக்ஞ மூல பீடத்தை வணங்குவார்கள். பரியாய பீட ஏற்றம் நடக்கும் பரம்பரை ஸ்தானமாகிய 'படகு மளிகெ'யில், பரியாயம் விட்டு விலகுபவர் நீங்கலாக மீதி ஏழு ஸ்வாமிகளும் நுழைவார்கள்.

'படகு மளிகெ'யில் பல நூற்றாண்டுகளாக வழி வழி வந்த பட்டத்துச் சிம்மாசனம் ஒன்று இருக்கிறது. அதன் மேல் விதைக் கோட்டையை (நம் கல்யாணத்தில் பெண்ணின் தந்தை உட்கார அமைப்பதைப் போன்றது) அமைத்து அதன்மேல் பரியாயம் ஏற்கும் ஸ்வாமிகள் அமருவார். பின்பு பட்டத்தில் மூத்தவர் இளையவர் என்ற வரிசைப்படி மற்ற ஸ்வாமிகளும் உட்காருவார்கள். இதற்குத்தான் பரியாய பீடம் ஏறும் சடங்கு என்று பெயர். அப்போது பரியாயம் ஏற்பவர் இரண்டு ஆண்டுகள் வரை ஸ்ரீ கிருஷ்ண பூஜையையும் அதை யொட்டிய அலுவல்களையும் நடத்த ஒப்புக்கொண்டு தீட்சையும் பெற்று விடுகிறார். தீட்சை பெற்றது முதல் பரியாயம் முடியும் வரையிலும் அவர் தேர்வீதியைத் தாண்டி வெளியே போக மாட்டார். 'படகு மளிகெ'யில் இந்திய சர்க்கார், மைசூர் சர்க்கார் ஆகியோரின் பிரதிநிதிகளும் வித்துவான்களும் மற்றச் சபையோரும் நிறைந்திருக்க, பரியாயப் பட்ட மகோற்சவம் நடைபெறுவது சம்பிரதாயம். ஆனால் இப்பொழுது அந்த இடம் பற்றாமையால் சம்பிரதாயப்படி பட்டம் மட்டும் அங்கே கட்டுகிறார்கள். சபை சம்பந்தப்பட்ட மற்ற எல்லா நிகழ்ச்சிகளும் விசாலமான வசந்த மகலில் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. இங்கே ராஜ்யப் பிரதிநிதிகள், அறிஞர்கள், மற்றும் பல பிரமுகர்கள் நிறைந்திருப்பார்கள். காணிக்கைகள், பாராட்டுப் பத்திரங்கள் முதலியவற்றைச் சமர்ப்பிப்பார்கள். பிரசங்கங்கள் நிகழும்; வாழ்த்துச் செய்திகளைப் படிப்பார்கள். பரியாயம் ஏற்றவர் மற்ற ஸ்வாமிகளுக்குச் சந்தன புஷ்பம் வழங்குவார்.

பூஜை ஏற்கும் ஸ்வாமிகள் அங்கிருந்து எழுந்திருந்து கிருஷ்ணர் கோவிலுக்குப் போவதற்குள், தம் பட்டத்து விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு பரியாயத்திலிருந்து விடுபடும் ஸ்வாமிகள், சிம்மாசன அறையிலிருந்து வெளியேறுவார். புதியவருடைய பட்டத்து விக்கிரகம் அங்கே குடியேறும். பரியாயத்தை விட்ட ஸ்வாமிகளை வழியனுப்பும்பொழுது, மேலே கண்ட

ஆறு மடத்து ஸ்வாமிகளும் கலந்து கொண்டு ஊர்வலம் செய்வித்து அவரை மடத்துக்கு அழைத்துப் போவார்கள். அவர் தம் சொந்த மடத்தில் வந்த ஆறு பேரையும் மாலை, ஆரத்தி முதலியவற்றால் மரியாதை செய்து அனுப்புவார். அன்று பரியாய ஸ்வாமிகளை உத்தேசித்துப் பூஜையும் சந்தர்ப் பணையும் தேர் விழாவும் நடை பெறும்.

இப்படி இரண்டு ஆண்டு வரை யில் பரியாயப் பட்டம் ஏற்றவர்கள் அரை பர்லாங் சதுக்கமான பரப் புள்ள பிரதேசத்தில் கட்டுப்பட்டு இருக்கவேண்டும். தினசரி விசேஷ நிகழ்ச்சிகளில் பல பொறுப்புக்களை யும் லட்சக்கணக்கான பண வரவு செலவுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். ஒரு நாளில் இவர்கள் அதிக நேரம் நித்திய பூஜையிலே ஈடுபட வேண்டியிருக்கும். எந்த ராஜா எந்தப் பட்டணம் போனா லும் கிருஷ்ணனுடைய பூஜை வரு ஷம் 360 நாளும் ஒரே மாதிரி குறைவில்லாமல் நடந்தேறவேண் டும். கிருஷ்ணன் கோயிலின் ஒவ் வொரு பகுதியும் யந்திர சக்தியி னால் அமைக்கப் பெற்றது. பூஜை, நைவேத்தியம் தொடங்கிச் சாப் பாடு, ஆராதனை முடியும் வரை யில் எல்லாம் நியமப்படி நடப்பதில் உடுப்பி புண்ணிய க்ஷேத்திரங் களில் தலை சிறந்து விளங்குகிறது.

இப்பொழுது பரியாயத்தி லிருந்து விலகிய ஸ்ரீ விசுவேச தீர்த்த ஸ்ரீபாதங்கள் என்பவர் தம் முறைக் காலமாகிய இரண்டு ஆண்டுகளில் தானதர்மங்களைச் செய்வதில் உதார குணமும் உற் சாகமும் காண்பித்தார். இவர் வயது இருபத்தைந்துதான் இருக் கும். ஒற்றை நாடியானவர். பாண் டித்தியம், கொடை, ஆசாரம், நிஷ்டை, தேஜஸ், தைரியம் முதலி யவை அமைந்திருப்பதால் மக்க ளுக்கு அன்பை வழங்கி அன்பைப் பெற்றிருக்கிறார். நியாயம், வேதாந் தம் இவற்றைப்பற்றி எப்பொழுதும் பிரசங்கம் செய்தும் இவற்றைப் பாடம் சொல்லியும் வந்தார்.

பரியாயப் பட்டம் ஏற்ற பலி மாரு மடத்து ஸ்வாமிகளாகிய ஸ்ரீ ரகு வல்லப தீர்த்தர் முன்னவரை விட வயதில் சிறியவர். இப் பொழுதுதான் மேஜராகிய இவர், புகழ்பெற்ற அதமாரு மடத்து விபுதேச தீர்த்தரின் சீடராகை யால், மக்களின் அன்பைப் பெறு வதிலும் பூஜை முதலிய பொறுப் புக்களில் ஈடுபடுவதிலும் மிக ஊக் கம் உள்ளவராகவே இருப்பார்.

## இந்திய பாஷையில் முதல் பத்திரிகை

முதல் முதல் இந்திய பாஷை அடங்கிய பத்திரிகை 'மெட்ராஸ் கெஜட்' என்பதுதான். 1795-ஜனவரியில் இது தொடங்கியது. 1796-இல் இதன் மானேஜர்கள் மி. ஆர். வில்லியம்ஸ் என்பவரும் மி. ஈ. சாமுவேல் என்பவரும் சர்க்காருடைய வேண்டுகோளின் பேரில், தமிழில் சர்க்கார் அறிக்கைகளை 'மெட்ராஸ் கெஜட்'டில் வெளியிட முன்வந் தார்கள்.

இந்தியாவிடம் மோகம் கொண்டுவிட்டதால்,
மீண்டும் விஜயம் செய்திருக்கிறார் மெனுஹின்.


# வயலின் மேதை

★

எகுடி மெனுஹின் தம் மகள் சமிராவுடன் இரண்டாவது முறை இந்தியாவுக்கு வந்திருக்கிறார். இசை விருந்தளித்துக்கொண்டு இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். இந்தியாவிடம் அவர் கொண்டுள்ள அன்பு இணையற்றது. இந்தியா அவருக்கு முற்றும் பிடித்துவிட்டது.

"மீண்டும் இந்தியாவுக்கு வந்ததற்குக் காரணம் என்ன?" என்று கேட்டதற்கு, "நாங்கள் இந்தியாவிடம் அளவிறந்த அன்பு கொண்டுவிட்டோம். இங்கு வராமல் இருக்க எங்களால் முடியவில்லை" என்று அவர் சொன்னார்.

இந்தியரின் ஒழுக்க நிலையும், மெய்யுணர்வும், நித்தியத்தைப் பற்றிய அறிவும் தம்மைக் கவர்ந்தன என்று அவர் கூறுகிறார்.



"இங்குள்ளவர்களைப் போல உலக காரியங்களைப்பற்றி அதிகக் கவலை கொள்ளாமல் இருக்கும் மக்கள் வேறு எந்த நாட்டிலும் இல்லை; தூய்மை மிக்க அருளாளரை நான் கண்டது, இந்த நாட்டில்தான்" என்று அவர் சொன்னார்.

இந்திய சங்கீதத்தையும் அவர் புகழ்கிறார். வட நாட்டுச் சங்கீதத்தையும் தென்னாட்டு இசையையும் அவர் கேட்டிருக்கிறார். தபேலா, வீணை, சித்தார் என்னும் கருவிகளின் இசையைக் கேட்டு இன்புற்றிருக்கிறார். "முதலில் கேட்கும்போது விநோதமாயிருந்தாலும், இந்திய சங்கீதம் மன நிலையை உயர்த்தி, தியான நிலை கூட்டுவித்து, கற்பனா சக்தி அளிக்கும் தன்மையுடையது. அது சிறந்த பண்புகளை உணர்த்துகிறது" என்று மெனுஹின் சொல்கிறார்.

மெனுஹினுக்கு யோகாப்பியாசத்தில் பற்று மிகுதி. மூன்று வருஷங்களுக்கு முன் நியூயார்க் நகரில் அதைக் கற்றார். இப்போது நாள்தோறும் அவர் யோகாப்பியாசம் செய்கிறார். "வயலினையாவது தொடாமல் இருந்துவிடுவேன்; ஆனால் யோகாப்பியாசம் செய்யாமல் என்னால் இருக்

காப்பிரைட்: அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (தமிழ்: 2-4-'54), சென்னை.

கவே முடியாது'' என்று அவர் ஒரு முறை சொன்னார்.

இந்திய சங்கீதம், யோகாப்பியாசம் ஆகிய இரண்டுந்தான் மெனுஹினுக்குப் பிரியமானவை என்று சொல்லிவிட முடியாது. இந்திய உடையும் அவருக்குப் பிரியமானதுதான். இந்தியத் தத்துவக் கலையும் அவருக்குப் பிரியமானதே.

1952-இல் அவர் இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து இசை விருந்துகள் நடத்தினர். அதனால் பிரதம மந்திரியின் நிவாரண நிதிக்கு $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் கிடைத்தது. இப்போது சேரும் தொகையை இந்தியாவிலுள்ள பரோபகார நிதிகளுக்கு வழங்குவார்.

இசைத் துறையில் அவர் புதிதாய்க் கண்ட நுணுக்கங்களை இந்த முறை நாம் கேட்கலாம். பெர்லின் நூல் நிலையத்தில் அவர் கண்ட கையெழுத்துப் பிரதியிலிருந்து அந்த நுணுக்கங்களை அவர் அறிந்தார். ஐரோப்பிய இசையுலகம் அதைக் கேட்டு அவரை வியந்துரைத்தது. கீழ் நாடுகளில் அதை முதல்முதல் கேட்கப்போவது இந்தியாவே. அந்தப் பழஞ்சுவடியிலிருந்து புதுமை கண்ட பெருமை தமக்குரியதென்று அவர் கருதவில்லை.

அவரோடு வந்துள்ளவர் லூயி கான்ட்னர். அவரும் உலகப் புகழ் பெற்ற இசைக் கலைஞரே. அவர் பியானோ மீட்டுகிறார்.

மெனுஹின் 1916-இல் நியூயார்க்கில் பிறந்தவர்; மூன்று வயதாயிருந்தபோதே வயலின் மீட்டத் தொடங்கினர். பாரிஸிலும் கார்னீஜி மண்டபத்திலும் அவர் தம் பத்தாவது வயதில் பெரும் புகழ் பெற்றுவிட்டார்.

அவர் தம் 11-ஆவது வயதில் வயலின் மீட்டியதைக் கேட்ட ஐன்ஸ்டீன், "எகுடி, வானில் ஒரு கடவுள் உண்டென்று மீண்டும் எனக்குக் காட்டிவிட்டாய்'' என்று சொன்னார். உணர்ச்சி மிகுந்த டாஸ்கானினி என்பவருங்கூட, "அதிமேதைகள் என்றால் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. ஆயினும், எகுடி, நீ தெய்வத்தன்மை வாய்ந்தவன்'' என்று முதல் முறை அவருடைய இசையைக் கேட்டபோதே சொல்லிவிட்டார்.

## எத்தனை பேருடன் கை குலுக்குவது!

அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த தியோடோர் ரூஸ்வெல்ட் என்பவரின் மனைவி, எங்கே போனாலும் ஏராளமான ஜனங்களுடன் கை குலுக்க நேரிடுவதைக் கண்டு சலிப்புற்றாள். அதற்குத் தப்புவதற்காக ஒரு யுக்தி செய்தாள். பிரமாண்டமான பூச்செண்டு (பொகே) ஒன்றைக் கையில் எப்போதும் தாங்கிக்கொண்டே கூட்டங்களுக்குப் போகத் தொடங்கினாள். "செண்டைக் கீழே வைத்துவிட்டு என்னுடன் கை குலுக்குங்கள்'' என்று யாரும் கேட்க மாட்டார்கள் அல்லவா!

—இர்விங் ஹாஃப்மான்

# இருதயத்துக்கு ரஜா

★

'என் சாண் உடம்புக்குச் சிரஸே பிரதானம்' என்பார்கள். அந்தச் சிரஸும்கூட இருதயத் துடிப்பையே சார்ந்திருக்கிறது. இருதயத் துடிப்பு மூன்றே மூன்று நிமிஷ நேரம் நின்றுல், மூளை செயலற்றுப் போகும். கருவிலிருந்து சாகும்வரையில் ஓய்வின்றி வேலை செய்வது மூளை. அதற்குக்கூட ஓய்வு கொடுக்க ஸர்ஜன்கள் இன்று வழி கண்டு பிடித்திருக்கிருர்கள். இந்தக் கட்டுரைக்கு ஆதாரம் 'இல்லஸ்ட்ரேட்டட்' தந்துள்ள ஒரு விவரம்.

மனிதனுடைய உடம்பில் வேறு எந்த இடத்தில் ஆபரேஷன் செய்ய முடிந்தாலும் சரிதான்; இருதயத்தில் மாத்திரம் அப்படிச் சிகிச்சை செய்ய முடியாமல் இருந்தது. ஒரு நூற்றுண்டுக்கு மேலாக, இந்தச் சிகிச்சை செய்யக் கூடிய காலமும் வராதா என்று ஸர்ஜன்கள் எல்லாம் கனவு கண்டுகொண் டிருந்தார்கள். இப்போது அந்தக் கனவு பலித்து விட்டது.

லண்டனில் அபூர்வமான ஒரு யந்திரத்தைப் புதிதாக அமைத்திருக்கிருர்கள். 'இருதய-சுவாசப்பை யந்திரம்' (ஹார்ட் - லங் மெஷின்) என்று அதைக் குறிப்பிடுகிருர்கள். அது இருதயத்துக்குக் கொஞ்ச நேரம் ரஜா கொடுத்துவிட்டு, இருதயத்தின் வேலையைத் தானே ஏற்றுக் கொண்டு செய்கிறது. அந்த நேரத்தில் இருதயத்துக்குள் தங்கள் சஸ்திரங்களை ஸர்ஜன்கள் பிரயோகிக்கலாம். உடம்பைக் குளிர்வித்து மரத்துப் போகச் செய்யும் வேறொரு முறையை இதே சஸ்திர சிகிச்சைக்காகப் பாரிஸ் நகர நிபுணர் சிலர் கண்டு பிடித்திருக்கிருர்கள்.



உலகெங்குமே கோடிக் கணக்கான பேர் இருதயக் கோளாற்றிஞல் கஷ்டப்படுகிருர்கள். சில குழந்தைகள் பிறக்கும் போதே, அவைகளுடைய இருதயம் பலவீனமாக இருந்துவிடுகிறது. அவைகள் ஜீவித்திருக்க வேண்டுமானுல், அசாதாரணமான சில வழக்கங்களைக் கடைப்பிடித்தே வாழவேண்டியிருக்கிறது. கீல் வாயுக் காய்ச்சலால் வாலிபருடைய இருதயத்தில் கோளாறு ஏற்பட்டு விடுகிறது. வயதாக ஆகச் சில பேருடைய இருதயம் பழுதடைகிறது.

இப்படி இருதயத்திலே கோளாறு ஏற்பட்டால் அதைச் சீர்திருத்த வழி தெரியாமலே, ஸர்ஜன்கள் எல்லாரும் இன்று வரைக்கும் தவித்தார்கள். இருதயத் துடிப்பை நிறுத்த அவர்களுக்குப் பயம். இருதயத் துடிப்பே, தேகத்தில் ரத்தச்

சுழற்சி நிகழ்வதற்குக் காரணம். அந்த ரத்தச் சுழற்சி மூலம் மூளைக்கு ரத்த ஓட்டம் எட்டாமல் மூன்றே மூன்று நிமிஷம் தடைப்பட்டால் போதும்; மூளை அடியோடு கெட்டுப் போய் விடக் கூடும். ஆகவே, சிறிது நேரம் கூட உடலிலே ரத்தச் சுழற்சி தடைப்படக் கூடாது. இந்த நிலையில் இருதயத்தில் எப்படி ஆபரேஷன் செய்வது? இதற்குப் பரிகாரமாகத்தான் மேலே சொன்ன யந்திரம், முறை இரண்டும் தோன்றி யிருக்கின்றன.

1953 டிசம்பர் 9-ஆம் தேதி மாலை 4 - மணிக்கு லண்டன் ஹாம்மர்ஸ்மித் ஆஸ்பத்திரியில் ஆச்சரியமான அந்த யந்திரத்தின் உதவி கொண்டு ஓர் ஆபரேஷன் நடந்தது. நோயாளி ஒரு பெண். வயது 38. அவளுடைய இருதயத்தின் 'வால்வு'கள் பழுது பட்டிருந்தன.

ரண சிகிச்சையின் சரித்திரத்திலேயே ஒரு புதுமை என்றுதான் இந்த ஆபரேஷனைச் சொல்ல வேண்டும். நிபுணர்கள் ஐந்து வருஷ காலம் சிரமப்பட்டு அமைத்த இருதய - சுவாசப் பை யந்திரத்தின் பயனும் பெருமையும் இதனால் நிரூபணமாகிவிட்டன. இரண்டு மணி நேரம் அந்த யந்திரத்தை உப


இருதயத்துக்குப் பதிலாக, ரத்த ஓட்டம் உண்டாக்கும் யந்திரம். அவசியமானால் வலதுபுறம் உள்ள 'ப்ளாஸ்மா' சீசாவிலிருந்து அதிகப்படி ரத்தமும் செலுத்தும். 'ஸிலிண்டர்' உருவமுள்ள சுவாசப் பை, பிராணவாயு அளிக்கிறது.

யோகித்தார்கள். சில நிமிஷத்துக்கு ஒரு முறையாகப் பல தடவை இருதயத்தின் வேலையை அந்த யந்திரம் ஏற்றுக்கொண்டு, 'பம்பு' அடிப்பது போல் ரத்தத்தை இறைத்து, உடலில் ரத்தச் சுழற்சி உண்டாக்கியது. ஸர்ஜன்கள் அந்த இடை வேளைகளில் நோயாளியின் இருதயத்தைத் திறந்து ஆபரேஷன் சிகிச்சையை நடத்தினார்கள்.

கடைசியாக, யந்திரத்தை அகற்றிவிட்டார்கள். அதற்குப் பின் ஒன்றரை மணி நேரம் கழிந்ததும், நோயாளிக்கு மயக்க மருந்தின் மயக்கம் தெளிந்தது. அடுத்த நாள் காலையில் அவள் எழுந்திருக்க விரும்பினாள். இப்போது அவள் தன் வீட்டிலே சௌக்கியமாக இருக்கிறாள்.


இந்த இருதய யந்திரத்தை அமைத்தவர் டாக்டர் டெனிஸ் மெல்ரோஸ். அவருக்கு இதில் உற்சாக மூட்டியவர் ப்ரொஃபஸர் அயான் ஏர்டு.

இதே சமயத்தில் பாரிஸ் நகரத்து வால் டி கிரேஸ் என்ற ராணுவ ஆஸ்பத்திரியில் இருதயத்துக்கு ஓய்வு கொடுத்து ஆபரேஷன் செய்ய, மற்றொரு முறையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். சில பிராணிகள் மாரிகாலம் முழுவதும் சில்லிட்டு உறக்கம் போன்ற ஒரு மயக்கத்தில் ஆழ்ந்துவிடுகின்றன. இதை 'ஹைபர்னேஷன்' என்று சொல்லுவார்கள். 'ஹைபர்னேஷன்' என்ற இந்த உறக்க மயக்க நிலையில், பிராணிகளின் தேக உஷ்ணம் பெரிதும் குறைந்து விடுகிறது; மூச்சின் கதி மெதுப்படுகிறது; ரத்த அமுக்கம் (ப்ளட் ப்ரஷர்) குறைகிறது. அப்போது இருதயம் செய்ய வேண்டிய வேலை மிகவும் அற்பமாகி விடுகிறது. சில மருந்துகளின் சேர்க்கையை உபயோகித்து, இந்த 'ஹைபர்னேஷன்' நிலையைச் செயற்கை ரீதியில் உண்டாக்க முடியும் என்று இப்போது நம்புகிறார்கள். இந்த நிலையில் பெரிய ஆபரேஷன் சிரமங்களை யெல்லாம் நோயாளிகள் அநாயாசமாகத் தாங்கிக்கொள்வார்களாம். 'ஹைபர்னேஷன்' என்ற இந்த உறக்க மயக்க நிலையை நாய்களுக்குச் செயற்கையாக உண்டாக்கிப் பார்த்திருக்கிறார்கள் ஸர்ஜன்கள். அப்போது நாய்களின் இருதயத்திலுள்ள ரத்தத்தைக் காலி செய்துவிட்டு, இருதயத்தில் விரல்களை



வலதுபுறம் உள்ளவர் பிரெஞ்சு டாக்டர் குன்லின். ஒரு நாய்க்கு உறக்க மயக்க நிலை உண்டாக்கி இருதய ஆபரேஷன் செய்கிறார்.

விட்டுத் துழாவி யிருக்கிருர்கள். நாய்களின் உடல் உஷ்ணம் சாதாரணமாக 38 - டிகிரி ஸெண்டிகிரேடு இருப்பது வழக்கம். இந்த 'ஹைபர்னேஷன்' நிலையில் அது 27 டிகிரியாகக் குறைந்துவிட்டது. இருபது நிமிஷ நேரம் ரத்தச் சுழற்சியை நிறுத்தி, இருதயத்தைத் தனிப்படுத்திச் சோதனை செய்தார்கள். இதனல் நாய்களின் மூளைக்கோ இருதயத்துக்கோ எந்த விதமான கெடுதலும் நேரவில்லை. உடல் உஷ்ணம் சாதாரண நிலையில் இருக்கும் போது, இப்படி ரத்தச் சுழற்சியை மூன்று அல்லது ஐந்து நிமிஷத்துக்கு மேல்பட நிறுத்தினல் அபாயம் நேர்ந்துவிடும். மருந்துகளின் மூலம் செயற்கை 'ஹைபர்னேஷன்' நிலையில் ஆழ்த்தி இப்படிப் பரிசோதித்த நாய்களைப் பல நாளைக்குப் பின்னல் பார்த்தபோதும் தேக ஆரோக்கியத்தோடு இருந்தன.



நாயின் இருதயத்திலிருந்து ரத்தத்தையெல்லாம் அடியோடு வெளியேற்றிவிட்டு, இருபது நிமிஷ நேரம் டாக்டர் இஷ்டப்படி இருதயத்தை ஆராய்கிருர்.

இப்போது பிரிட்டனில், இந்த இரண்டு முறைகளையும் ஏக காலத்தில் கைக் கொண்டு, இருதய ஆபரேஷன் செய்ய முயன்று வருகிருர்கள். இருதய யந்திரத்தை உபயோகிக்கும் போதே, தேக உஷ்ணத்தையும் குறைப்பது மிகவும் நல்லது என்று பிரிட்டிஷ் நிபுணர்கள் கருதுகிருர்கள்.

## ஏழையும் கோடீசுவரனும்

ஏழைக்கும் கோடீசுவரனுக்கும் உள்ள வேற்றுமை ஒன்றே ஒன்றுதான்: ஏழை அடுத்த வேளை உணவைப்பற்றித் தொல்லைப்படுகிருன்; கோடீசுவரன் சென்ற வேளை உணவைப்பற்றித் தொல்லைப்படுகிருன்.

—'ஐரிஷ் டைஜெஸ்ட்'


## எதுவும் பழக்கமே

பழகிய யானையையே போருக்கு அழைத்துச் செல்வார்கள்; பழகிய யானைமீதே அரசர்கள் ஏறிச் செல்வார்கள். மக்களிலும் நல்வழியில் பழகியவனே - நிந்தை மொழிகளைப் பொறுத்துக்கொள்கிறவனே - சிறந்தவன்.

—'தம்ம பதம்'

# விஞ்ஞானியின் விநோத வாழ்வு

**பி. ஜி. கிருஷ்ணையா**



**உலகத்திலேயே மிகச் சிறந்த விஞ்ஞானி என்று கீர்த்திபெற்ற ஆல்பெர்ட் ஐன்ஸ்டீன் ஒரு குழந்தையைப் போன்றவர். அவருடைய வாழ்க்கைத் துணுக்குகளைக் கேட்டால், நமக்குச் சிரிப்புத்தான் வரும். அவ்வளவு சரளமான சுபாவம்.**

பொதுவாக, அணுச் சக்தியைப்பற்றி, அதுவும் அணுக் குண்டு, ஹைட்ரஜன் குண்டு இவைகளின் நாச சக்தியைப்பற்றி நமக்குத் தெரிந்திருப்பதற்கே ஐன்ஸ்டீன் போட்டு முடித்த ஒரு கணக்குத்தான் காரணம். அவருக்கு 20 வயது இருக்கும்போதே ஜடப் பொருளிலிருந்து சக்தியை உண்டுபண்ணலாம் என்று அவர் வாதித்து வந்தார். அது சாத்தியம் என்று ஹிரோஷிமாவில் அணுக் குண்டு வெடித்தபோது உலகத்துக்குத் தெரிந்துவிட்டது.

தம் கொள்கையில் மிகவும் உறுதி உள்ளவர் ஐன்ஸ்டீன்; பிடித்த பிடியை விடாமல் தீவிரமாக வாதாடுவார். இதுவரை உலகில் தோன்றியிருக்கும் நாலைந்து பிரபல விஞ்ஞானிகளுக்குள் அவர் ஒருவர்; இன்று உலகில் இருக்கும் விஞ்ஞானிகளில் தலை சிறந்தவர். அமெரிக்காவில் பிரின்ஸ்டன் என்ற ஊரில்தான் அவர் இப்போது இருந்து வருகிறார். இன்னும் அவரை ஏதோ விநோதப் பிரகிருதியாகவே அங்கே இருப்பவர்கள் கருதி வருகிறார்கள். பொதுவாக எல்லாருக்கும் ஐன்ஸ்டீன் பெரிய தத்துவ ஞானி, விஞ்ஞானி என்று தெரியுமே தவிர அவருடைய அன்றாட வாழ்க்கையைப்பற்றி யாருக்கும் தெரியாது.

அவர் வசிக்கும் வீடு, ஓர் அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஸ்தாபனம் அவருக்கு அளித்தது. 1933-இல் நாஜிகளின் அட்டகாசத்தைத் தாங்க முடியாமல் ஐன்ஸ்டீன் இங்கே வந்துவிட்டார். இந்த ஸ்தாபனத்தின் காரியாலயம் இரண்டாம் மாடியில் இருக்கிறது. இப்போது அவர் வேலையிலிருந்து விலகி ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்று பெயரே யொழிய இன்னும் ஸ்தாபன அலுவல்களில் பங்கெடுத்துத் தான் வருகிறார்.

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 3-4-'54), சென்னை.

பிரின்ஸ்டன் நகரில் அநேகம் பேருக்கு அவரைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியாது. ஏதோ இரண்டொரு சம்பவங்களைப் பற்றிக் கேட்டுவிட்டு எல்லாவற்றையும் முடி போட்டு ஆசாமி எப்படிப்பட்டவர் என்று யோசித்து யோசித்துப் பார்க்கிறார்கள். அப்படியும் ஒன்றும் தெரிந்தபாடில்லை. அவர் இங்கே வந்த புதிதில் அநேகம் பேர் அவரைப் பிரமாதமாகக் கொண்டாடலானார்கள்; ஆனால் அவர் ஒருபோதுமே ஆடம்பரத்தை விரும்புவதில்லை. அதனால் எதிலும் கலந்துகொள்வதில்லை. இருந்தாலும் ஒரு சமயம் கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது தெருப் பையன்கள் சிலர் அவர் வீட்டுக்கு எதிரில் பாடி அவரை வெளியே வரவழைத்துவிட்டார்கள். "ஏதாவது காசு போடுங்கள், ஐயா!" என்றார்கள்.

டாக்டர் ஐன்ஸ்டீன் உள்ளே போய் ஒரு ஜாக்கெட்டும் தொள தொளவென்றிருக்கும் ஒரு குல்லாயும் போட்டுக்கொண்டு கையில் ஒரு பிடிலுடன் திரும்பி வந்தார்; "சரி; வாருங்கள்; நானும் உங்களோடு வருகிறேன். உங்களுக்கு வருகிற வரும்படியில் ஏதோ கொஞ்சம் கொடுங்களேன், போதும்" என்று அவர்களோடு புறப்பட்டு விட்டாராம். பணம் என்றால் அவருக்குத் துரும்புக்குச் சமானம். முன் சொன்ன ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் சேரும்போது அவர் வாயாலேயே சம்பளம் இவ்வளவென்று சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் "5,000 டாலர்" என்றார். அப்புறம் ஸ்தாபன நிர்வாகிகள் மிஸஸ் ஐன்ஸ்டீனிடமே பேசி ஓர் ஏற்பாட்டுக்கு வந்தார்கள். இல்லாவிட்டால் அவர் குடும்பமே பட்டினி கிடந்து மிகவும் சிரமப்பட்டிருக்கும், பாவம்!

ஒரு நாள் ராக்ஃபெல்லர் அவருக்கு 1,500 டாலருக்கு ஒரு செக் அனுப்பினாராம். அதை அவர் மிஸஸ் ஐன்ஸ்டீனிடம் கொடுக்க மறந்துவிட்டார். ஏதோ ஒரு புத்தகத்தில் பக்க அடையாளமாக அதை வைத்தார். கடைசியில் அந்தப் புத்தகமே தொலைந்து விட்டதாம். இப்படி ஒரு கதை அவரைப் பற்றி உள்ளூரில் வழங்குகிறது. அவர் மனைவி அடிக்கடி, "சரியாக உடுத்துக்கொள்ளுங்களேன்" என்று சொல்லுவாளாம். ஒரு நாள் அவர் காலில் ஸாக்ஸ்கூட இல்லாமல் சுற்றிக்கொண்டிருந்தாராம். உடனே அவள், "இதென்ன கூத்து!" என்றாள். அதற்கு அவர், "பையில் சரக்கு இருக்கிறது. அதைவிடப் பை பகட்டாக இருந்துவிட்டால் உள்ளே இருக்கும் சரக்கின் மதிப்பு மட்டுப்பட்டுவிடுமே!" என்று ஸ்பிநோஸா என்ற தத்துவஞானி சொன்னதை அப்படியே எடுத்துச் சொன்னாராம்.

ஐரோப்பாவில் ஒவ்வொன்றாகப் பல சர்வகலாசாலைகளில் வேலை பார்த்துக்கொண்டே பல நாட்டு எல்லைகளைத் தாண்டிப் பல மனிதர்களுடன் பழகினார். 'ரிலேடிவிடி' என்ற தம் சித்தாந்தத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்துகொண்டு வந்தார். அப்போதெல்லாம் ரெயிலில் மூன்றாம் வகுப்பில்தான் அவர் பிரயாணம் செய்வது வழக்கம். மிஸஸ் ஐன்ஸ்டீன், "இதென்ன, சுத்தமாக நன்றாகவே இல்லையே!" என்றாளாம். மனைவியிடத்தில் அவருக்கு அபார அன்பு. அதனால் சரி என்று சொல்லி அதுமுதல்

இரண்டாம் வகுப்பு வண்டியில் பிரயாணம் செய்யத் தொடங்கினர்.

சமீபத்தில் குடும்ப நண்பர் ஒருவரின் கல்யாணத்துக்குப் போயிருந்தார் ஐன்ஸ்டீன். எல்லாரும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி வெள்ளை டை, கவுன் இப்படி எல்லாவற்றையும் ஒழுங்காகப் போட்டுக்கொண்டு வந்தார்கள்; ஆனால் நம் ஐன்ஸ்டீன் தொள தொள என்று இருக்கும் பழைய குல்லாய் ஒன்றைப் போட்டுக்கொண்டு ஏதோ அன்றாடம் கூலி வேலை செய்யும் பண்ணையாள் போல் உடுத்துக்கொண்டு வந்து விட்டார். இருந்தாலும் எல்லாருடனும் சர்வ சகஜமாகத்தான் பழகினர்.

இன்னொரு சமயம், அவருக்குத் தெரிந்த ஒரு சிறு பெண், ஒரு கணக்குப் போடத் தெரியாமல் அவரிடம் வந்து சொல்லித் தரச் சொன்னள். 'பிரபஞ்சத்திலேயே மிகப் பெரும் மேதை' என்று பெர்னர்ட் ஷா பாராட்டிய டாக்டர் ஐன்ஸ்டீன், ஒரு பென்ஸிலைச் சீவி எடுத்துக்கொண்டு அந்தக் கணக்கைத் தெளிவாகப் புரியும்படி போட்டுக் காட்டினராம். உடனே அந்தப் பெண் குச்சியில் செருகிய சின்ன மிட்டாய் ஒன்றை அவருக்குக் கொடுத்தாள். அவரும் அதைக் குச்சி வரைக்கும் சப்பிச் சப்பிச் சாப்பிட்டுத்தான் விட்டாராம்.

முன் ஒரு சமயம் அவர் பிறந்த நாளின்போது உள்ளூர்த் தினசரி நிருபர் ஒருவர் அவரிடம் வந்து, "பிறந்த நாள் கொண்டாட்டம் எப்படி?" என்று விசாரித்தாராம். அதற்கு அவர், "பூ! பிறந்த நாளாவது, மண்ணாங் கட்டியாவது! குழந்தைகளுக்குத்தான் பிறந்த நாள் கொண்டாடுவார்கள். எனக்கெதற்கு?" என்று சொல்லி விட்டாராம்!

**பிறர்மீது தீர்ப்பு**

மனிதன் தன்னிடம் அன்புகொண்டவனுக்குச் சலுகை காட்டுகிறன்; தன்னைப் பகைப்பவனுக்கு அநீதி இழைக்கிறன்; தன்னிலும் உயர் நிலையில் உள்ளவனுக்குப் பணிந்து போகிறன்; தனக்குக் கீழ்நிலையிலோ துன்பத்திலோ வறுமையிலோ உழல்கிறவனிடம் இரக்கம் காட்டுகிறன். ஆகவே, மற்ற மனிதர்களின் குணுதிசயங்களை உள்ளபடி மதிப்பிடக்கூடிய ஒரு மனிதனைக் காண்பது மிகவும் கடினமாயிருக்கிறது.

—கன்ஃப்யூஷஸ்

**பரீட்சைத் தாள்**

காலேஜில் பரீட்சை நெருங்கிவிட்டது. பேராசிரியர் கடைசிப் பிரசங்கம் செய்தார்.

"பரீட்சைக்குச் சில நாளே இருக்கிறது. நன்றாய்ப் படியுங்கள். பரீட்சைத்தாள் அச்சுக்குப் போய்விட்டது. உங்களில் யாருக்காவது ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள்; சொல்லுகிறேன்" என்றார்.

கொஞ்சநேரம் மௌனம் நிலவியது. கடைசியில் மெல்லிய குரல் ஒன்று, கடைசி பெஞ்சிலிருந்து கேட்டது: "அது எந்த அச்சுக் கூடத்தில், ஸார்?"



# குரங்கிடம் கண்ட அம்சம்

★

குழந்தைகள் அகாரணமாய் நோயுற்றுச் சாவதற்கும் கர்ப்பச் சிதைவுகளுக்கும் பெரும்பாலும் காரண மென்ன என்று நிபுணர்கள் சமீபத்தில் கண்டு பிடித்தார்கள். அதுவே ஆண் - பெண் ரத்தத்தில் உள்ள 'ஆர். எச். அம்சம்' என்பது. அதை வட இந்தியக் குரங்கு ஒன்றின் ரத்தத்தில்தான் முதல் முதல் கண்டார்களாம். அந்த அம்சம்பற்றிய ரசமான விவரங்கள் அடங்கிய இதற்கு ஆதாரம் 'ஸைக்காலஜி'யில் கே. ஆர். கம்மிங்ஸ் என்பவர் எழுதியுள்ள கட்டுரை.

"ரத்த தானம் புரிவதற்காக இங்கே ஏற்பட்டிருக்கும் 'ப்ளட் பாங்'கில் என் சிநேகிதி ஒருத்தி வேலை பார்க்கிறாள். அந்த பாங்குக்கு நான் ரத்தம் வழங்கினேன். என் ரத்தத்தைப்பற்றி டாக்டர் எழுதியுள்ள விவரத்தில், என்னை 'ஆர். எச். நெகடிவ்' என்று குறிப்பிட்டிருக்கிறாராம். இதை எனக்கு அந்தச் சிநேகிதி சொன்னாள். அப்படி என்றால் என்ன என்று அவளைக் கேட்க எனக்கு வெட்கமாயிருந்ததால், கேட்கவில்லை. ஆனால், இது என் மனத்தை அலட்டிக்கொண்டிருக்கிறது.

" 'ஆர். எச். ஃபாக்டர்' என்று சொல்லுகிறார்களே, இந்த அம்சம் பற்றி என்ன என்னவோ கேள்விப்படுகிறேன். எதை நம்புவது என்று எனக்குத் தெரியவில்லை. 'ஆர். எச். நெகடிவ்' என்றால், நான் குழந்தையே பெறக் கூடாதா? பெற்றால், அதற்கு ஏதாவது ஊனம் ஏற்பட்டிருக்குமா? என் காதலன், 'ஆர். எச். பாஸிட்டிவ்' என்றால், அவனை நான் மணக்கக் கூடாதா?

"எது எப்படியானாலும் சரி; இந்த 'ஆர். எச். அம்சம்' என்பது தான் என்ன? இதைக் குணப்படுத்த முடியுமா? என் வம்சத்திலே வழி வழியாய் இது வந்திருக்குமா? இந்த வம்சத்தினருக்குப் பைத்தியம் பிடிக்கக்கூடும் என்பதையே இது குறிக்கிறது என்று ஒருத்தி சொன்னாள்.."

-இப்படி அமெரிக்கப் பெண் ஒருத்தி ஒரு நிபுணருக்குக் கடிதம் எழுதினாள். அவள் என்ன, உலகம் எங்குமே வேறு எத்தனையோ

பேருக்கு இந்த விஷயம் பெரிய புதிராகத்தான் இருக்கிறது.

இந்த 'ஆர். எச். அம்சம்' என்ற வார்த்தையைச் சில வருஷங்களுக்கு முன்பு யாருமே கேட்டிருக்க முடியாது. திடீரென்று இப்போது இது வந்து குதித்துப் பிரபலம் பெற்றுவிட்டது. இதைப் பற்றி எத்தனையோ கதைகள் வேறே கிளம்பிவிட்டன. அவைகளில் பல சரி அல்ல.

'ஆர். எச். அம்ச'த்தைக் கண்டு பிடித்ததால், கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள உறவில் புதிய சிக்கல் ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை. இதற்கு மாருக, பல தம்பதிகளுக்கு இது நன்மையே விளைத்திருக்கிறது.

சில வருஷங்களுக்கு முன்பு, பல குழந்தைகள் செத்துப் பிறந்தன. சில குழந்தைகள் பிறக்கும் போது மிக ஆரோக்கியமாயிருந்தாலும், சீக்கிரமே அகாரணமாக நோயுற்று நலிந்து மாண்டன. விஷயம் என்னவென்றே டாக்டர்களுக்குப் புரியவில்லை. 'மஞ்சள் காமாலை'யில் என்ன குறிகள் ஏற்படுமோ அதே மாதிரி சின்னங்கள் தென்பட்டன. இந்த மாதிரி குழந்தையின் ரத்தத்தில் ஏதோ கெடுதல் நேரிட்டிருக்கிறது என்றுமட்டும் தோன்றியது. மர்மம் துலங்காத இந்த அதிசய வியாதிக்கு 'எரித்ரோ - ப்ளாஸ்டோஸிஸ்' என்று பெயர் வைத்தார்கள். இதற்கு அர்த்தம் வேறு ஒன்றும் அல்ல; 'சிவப்பு ரத்த அணுக்களின் நோய்' என்பது தான்.

வைத்திய ஆராய்ச்சி நிபுணர்கள், 'ரீஸஸ்' (Rhesus) என்ற இனத்தைச் சேர்ந்த குரங்குகளின் ரத்தத்தை ஆராய்ந்த போது, ஒரு விசேஷத்தைக் கண்டார்கள். இந்தக் குரங்குகளுக்கு 'ரீஸஸ்' என்ற பெயரை 1797-இல் ஆடிபெர்ட் என்பவர் தான் வைத்தார். 'ரீஸஸ்' என்பதற்கு அர்த்தம் என்ன என்று அவரைக் கேட்டதற்கு, 'ஓர் அர்த்தமும் இல்லை' என்று அவரே சொல்லிவிட்டாராம். வட இந்தியாவில் மிக அதிகமாகத் தென்படும் குட்டை வால் குரங்கு (மெக்காக்கஸ்) இனமே இது.

இந்த வட இந்திய 'ரீஸஸ்' குரங்குகளின் ரத்தத்தை விஞ்ஞானிகள் ஆராய்ந்தார்கள். சிலவற்றின் ரத்தத்தில் மட்டும் இன்னதென்று புரியாத ஏதோ ஓர் அம்சம் (ஃபாக்டர்) இருந்தது; மற்றவற்றின் ரத்தத்தில் இந்த அம்சம் இல்லை. இதற்குத் தான் 'ரீஸஸ்' (Rhesus) என்ற வார்த்தையின் முதல் இரண்டு எழுத்துக்களால் 'ஆர். எச்.' (Rh) என்று குறித்தார்கள். இதற்குப் பிறகு சிறிது காலத்துக்கெல்லாம் இன்னேர் உண்மை தெரிய வந்தது. இந்த 'ஆர். எச். அம்சம்' காரணமாகவே 'சிவப்பு அணுக்களின் நோய்' தோன்றிப் பல சாவுகள் நேர்கின்றன என்று அறிந்தார்கள். அதற்கு எப்படிச் சிகிச்சை செய்வது என்று ஆராய்ந்து வழி கண்டார்கள்.

மனிதர்களில் சுமார் நூற்றுக்கு 85 பேரின் ரத்தத்தில் 'ஆர். எச். அம்சம்' இருக்கிறது. அவர்களை 'ஆர். எச். பாஸிட்டிவ்' என்று குறிக்கிருர்கள். மீதி 15 பேரின் ரத்தத்தில்தான் இந்த அம்சம் இல்லை. அவர்களை 'ஆர். எச். நெகடிவ்ஸ்' என்று குறிக்கிருர்கள். 'ஆர். எச். அம்சம்' மனிதர்களுக்குப் பரம்பரையாக

வருகிறது. நமக்கு நம் பெற்றோரிடமிருந்து இது வருகிறது; நாம் இதை நம் குழந்தைகளுக்குத் தந்து விடுகிறோம். 'ஆர். எச். அம்சம்' உள்ள ஒருவர் இது இல்லாத ஒருவரை மணந்தால், பிறக்கும் குழந்தைகளிடம் இந்த அம்சம் இருந்தாலும் இருக்கலாம்; இல்லாதும் போகலாம். ஆனால், தாயின் ரத்த இயல்புக்கும் கருப்பையில் உள்ள குழந்தையின் ரத்த இயல்புக்கும் சில சமயம் போராட்டம் நேர்வதுண்டு. அப்போதுதான் அபாயம் உண்டாகிறது.

தாய், தகப்பன் இருவரின் ரத்தத்திலும் 'ஆர். எச். அம்சம்' இருந்தால், குழந்தையின் ரத்தத்திலும் இந்த அம்சம் இருக்கும். அப்போது போராட்டமோ அபாயமோ இல்லை. இருவருடைய ரத்தத்திலும் 'ஆர். எச். அம்சம்' இல்லாதபோதும் அபாயம் இல்லை. இந்த இரண்டும் போக இன்னொரு நிலையிலும் அபாயம் இல்லை என்று சமீபத்தில் கண்டு பிடித்திருக்கிறார்கள். 'ஆர்.எச்.அம்சம்' உள்ள பெண், இந்த அம்சம் இல்லாத ஓர் ஆணை மணந்தால், தாயின் ரத்தத்துக்கும் தாயின் வயிற்றில் உள்ள குழந்தையின் ரத்தத்துக்கும் என்ன காரணத்தாலோ போராட்டம் நேர்வதில்லை. இதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

'ஆர். எச். அம்சம்' இல்லாத பெண், இந்த அம்சம் உள்ள ஆணை மணக்கும்போது மட்டுமே அபாயம் விளைகிறது. அப்போதுங்கூட, கருவில் உதித்த குழந்தைகளில் குறைந்த பட்சம் பாதியாவது அபாயமின்றிப் பிறந்து வளர்கின்றன. ஏனென்றால், பாரம்பர்ய (heredity) இயற்கையின்படி, பாதிக் குழந்தைகள் 'ஆர். எச். அம்ச'த்தோடும் மறு பாதி இந்த அம்சம் இல்லாமலும் பிறக்கின்றன. 'ஆர். எச். அம்சம்' இல்லாத குழந்தைகள் தாயைப்போலவே இருப்பதால் சௌக்கியமாய் இருக்கின்றன. 'ஆர். எச். அம்சம்' இல்லாத தாயின் வயிற்றுக் கரு இந்த அம்சம் உள்ளதாயிருக்கும் போதுதான் அபாயம் நேரக்கூடும்.

'ஆர். எச். அம்சம்' இல்லாத தாயின் ரத்தத்தில், இந்த அம்சம் உள்ள கருவின் ரத்தம் பெரும்பாலும் கசிந்து கலக்கிறது. அப்போது இதை எதிர்த்துப் போராடுவதற்காகத் தாயின் ரத்தத்தில் ஒருவகைத் தற்காப்புப் பொருள்கள் (ஆண்டி-பாடீஸ்) தோன்றுகின்றன. இந்தத் தற்காப்புப் பொருள்கள் அடங்கிய ரத்தம், திரும்பவும் கருவுக்குள் செல்லுமானால், கருவின் ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்கள் (ஸெல்ஸ்) போரிட்டு மாய்ந்து போகின்றன. இப்படிக் கருவின் சிவப்பு ரத்த அணுக்கள் ஏராளமாக மாய்ந்தால், குழந்தை செத்துப் பிறக்கிறது. அதிருஷ்ட வசத்தால், அது சில சமயம் உயிரோடும் பிறக்கக்கூடும். உடனே அதைக் காப்பாற்ற ஏதாவது செய்தாக வேண்டும். இல்லையானால், மஞ்சள் காமாலை (ஜாண்டிஸ்), சிவப்பு அணுக்களின் நோய் (எரித்ரோ - ப்ளாஸ்டோஸிஸ்) ஆகிய நோய்களுக்கு ஆளாகிக் குழந்தை மாண்டு போகும்.

இப்படிப்பட்ட எல்லாக் குழந்தைகளின் விஷயத்திலுமே இந்த மாதிரி நடப்பதில்லை. 'ஆண்டி-பாடீஸ்' என்ற தற்காப்புப் பொருள்கள் தாயின் ரத்தத்தில் ஒரேயடியாக உண்டாகி விடுவதில்லை. அநேகமாக முதல்

குழந்தை பிறக்கும்போது சொற்பமாகவே அவை உண்டாகியிருக்கும்; குழந்தைக்கு அபாயம் இராது. இரண்டாவது குழந்தையும் அபாயமில்லாமல் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால், 'ஆர். எச். அம்சம்' இல்லாத தாய்க்கு, இந்த அம்சம் உள்ள ஒவ்வொரு கருவும் தரிக்கும்போது, தாயின் ரத்தத்தில் தற்காப்புப் பொருள்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. ஆகவே, 'ஆர். எச். அம்சம்' உள்ள மூன்றுவது அல்லது நாலாவது குழந்தைக்கு அபாயம் நேரலாம்.

'ஆர்.எச்.அம்சம்' இல்லாத ஒரு பெண்ணுக்குச் சில வருஷங்களுக்கு முன்பு கடுமையான விபத்து ஏதாவது ஏற்பட்டிருக்கலாம். அப்போது அவள் 'ரத்த தானம்' (ப்ளட் ட்ரான்ஸ்ஃப்யூஷன்) பெற்றிருக்கலாம். அந்த நாளில் 'ஆர். எச். அம்சம்' பற்றி டாக்டர்களுக்கே ஒன்றும் தெரியாது. ஆகவே, அவள் உடம்பில் அவர்கள் செலுத்திய ரத்தம் 'ஆர். எச். அம்சம்' உள்ளதாக இருந்திருக்கக் கூடும். இந்த நிலையில் 'ஆண்டி-பாடீஸ்' என்ற தற்காப்புப் பொருள்கள் அவள் ரத்தத்தில் உண்டாகியிருக்கும். அவள் கணவன் 'ஆர்.எச்.அம்சம்' உள்ளவனாக இருந்துவிட்டால், அவள் கருவுறும் முதல் குழந்தைக்கே அபாயம் நேரலாம்.

'ரத்த தான' விஷயத்தில் இந்த மாதிரி தவறு நேர இந்த நாளில் இடமில்லை. எந்தப் பெண்ணுக்காவது ஆணுக்காவது ரத்த தானம் தேவைப்பட்டால், அவள் அல்லது அவனுடைய ரத்தத்தில் 'ஆர். எச். அம்சம்' உண்டா, இல்லையா என்று ஆராய்ந்து பார்த்து, அதற்குப் பொருத்தமான ரத்த ரகத்தையே உடம்பில் செலுத்துகிறார்கள்.

'ஆர். எச். அம்ச'ப் பிழை நூற்றுக்கு 13 விவாகங்களில்தான் ஏற்படுகிறது. அப்படி விவாகமான பெண்கள் கருத் தரிக்கும்போதும் படிக்குப் பாதி குழந்தைகளுக்குத்தான் அபாயம் நேர்கிறது. என்றாலும், ஒரு பெண் கருத்தரித்தவுடனேயே, அவள் 'ஆர். எச். அம்சம்' உள்ளவளா, இல்லாதவளா என்பதை ஆராய்ந்தறிய வேண்டியது பிரசவ டாக்டரின் கடமையாகும். அவளிடம் 'ஆர். எச். அம்சம்' இல்லாவிட்டால், அவள் கணவனுடைய ரத்தத்தையும் ஆராய வேண்டும். அதில்மட்டும் இந்த அம்சம் இருந்தால், அப்போதுதான் அபாயத்துக்கு இடமாகிறது. நிலைமை இதுவானால், பெண்ணின் ரத்தத்தை மறுபடியும் ஆராய்ந்து, அதில் முந்திய கர்ப்பங்களாலோ ரத்த தானங்களாலோ தற்காப்புப் பொருள்கள் அதிகமாய்த் தோன்றியிருக்கின்றனவா என்று பார்க்கவேண்டும். அப்படித் தோன்றியிருந்தால், குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதற்குரிய முன்னேற்பாடுகளைக் கைக்கொள்ளவேண்டும். இந்தக் காரியம் ஒன்றும் அப்படிப் பிரமாதம் அல்ல. 'ஆர். எச். அம்சம்' இல்லாத ரத்தத்தைப் போதிய அளவு கையிருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வளவுதான். பிறகு, குழந்தை பிறந்ததும், சற்றும் தாமதிக்காமல் அதன் ரத்தத்தை ஆராய வேண்டும். அதில் 'ஆர்.எச். அம்சம்' இருந்தால் உடனே அதற்கு 'ரத்த தானம்' புரிய வேண்டும்; அதாவது, குழந்தையின் ரத்தம் முழுவதையும் வெளி

யேற்றி, அதற்குப் பதிலாக 'ஆர். எச். அம்சம்' இல்லாத ரத்தத்தைக் குழந்தையின் உடம்பில் உள்ள சுத்த ரத்தக் குழாய்கள் (ஆர்ட்டெரீஸ்), அழுக்கு ரத்தக் குழாய்கள் (வேன்ஸ்) அனைத்திலும் செலுத்திவிட வேண்டும். இப்படி வெகு விரைவில் சுளுவாக நடவடிக்கை எடுப்பதன் மூலம் அநேகம் குழந்தைகளைச் சமீபத்தில் காப்பாற்றியிருக்கிறார்கள்.

குழந்தைகள் விஷயத்தில் மட்டும் அல்ல; பெரியவர்கள் விஷயத்திலும் சில சமயம் இந்த 'ஆர். எச். அம்ச'த்தைக் கவனிக்க வேண்டி வருகிறது. இந்த அம்சம்பற்றித் தெரியாத நாளில், காயமுற்ற ஸோல்ஜர்களும் சாதாரண மக்களுமாகப் பலர் ரத்த தானம் பெற்றிருக்கிறார்கள். அப்போது இந்த அம்சம் இல்லாத சிலர் உடம்பில் இது உள்ள ரத்தத்தைச் செலுத்தியிருக்கக் கூடும். அப்படிச் செலுத்திய உடனே இதனால் அபாயம் எதுவும் ஏற்படுவதில்லை. ஆனால், இப்படி மாறிய ரத்தம் பெற்றவரை 'உணர்வு மிக்கவர்' (ஸென்ஸிட்டைஸ்டு) என்று சொல்லுகிறார்கள். அவர்கள் உடம்பில் தற்காப்புப் பொருள்கள் தோன்றியிருக்கும். அவர்களுக்கு மறுபடியும் விபத்து ஏற்பட்டு, ரத்த தானம் செய்ய வேண்டி வந்தால், 'ஆர். எச். அம்சம்' உள்ள ரத்தத்தை மறுபடியும் அவர்கள் உடம்பில் செலுத்தக் கூடாது. செலுத்தினால் அதுவே அவர்களைக் கொன்றாலும் கொன்றுவிடும்.

'ஆர். எச். அம்சம்' உள்ளவர் உடம்பில் இது இல்லாத ரத்தத்தைச் செலுத்தினால், இப்படி அபாயம் பெரும்பாலும் நேர்வதில்லை. அவர்கள் 'ஸென்ஸிடைஸ்டு' (உணர்வு மிக்கவர்) ஆவது அபூர்வம். தவிர, இந்த மாதிரி பிழை நேர்வதே அருமைதான். ஏனென்றால், 'ரத்த பாங்'குக்கு ரத்தம் வழங்குவதற்கு 'ஆர். எச். அம்சம்' இல்லாதவர்கள் மிகவும் அரிதாகவே கிடைக்கிறார்கள்.

மொத்தத்தில் 'ஆர். எச். அம்சம்' பற்றி எல்லாரும் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இவ்வளவுதான். சுலபமான ஏதோ சில முன்னெச்சரிக்கைகள் எடுத்துக் கொண்டால் போதும். இதைப் பற்றி வீணே கிலியும் கவலையும் கொள்ளத் தேவையில்லை.

## அணுவும் கடவுளும்

"நான் எத்தனையோ ஸயின்ஸ் படித்திருக்கிறேன். எந்த ஸயின்ஸூம் கடவுள் இருக்கிறார் என்று காட்டவில்லை" என்றார் ஒரு ஸயின்ஸ் நிபுணர்.


"இருக்கலாம். நானும் எத்தனையோ மத நூல்களைப் படித்திருக்கிறேன். ஒன்றாவது அணு (ஆட்டம்) இருப்பதை எனக்குக் காட்டவில்லை" என்றார் பாதிரியார்.

"மத நூலிலே அணுவைப்பற்றி எப்படி அறிய முடியும்?" என்றார் ஸயின்ஸ் நிபுணர்.

"அதுதான் விஷயம்" என்றார் பாதிரியார்.


—'ஃபெயித்'

# கார்ட்டூன் கதம்பம்



பாலன்ஸ் நிபுணர்கள்.

—'காரவான்'





இந்தியாவின் கையில்—

—'ப்ளிட்ஸ்'



ஹிந்திச் சீமாட்டி.

—'சங்கர்ஸ் வீக்லி'




வங்காளி மாமா புத்திமதி.

—'நேஷனல் ஹெரால்டு'

**நடைச் சித்திரம்:**

# கோமாளி

**எம். எம்.**



லோகல் ரெயில் வண்டிகளில் தாராளமாக அமர்ந்து பிரயாணம் செய்து வந்த காலம். ஆபீஸ் போகும் நேரத்தில் இப்போது இருப்பது போல் கும்பல் நெரிபடுவதில்லை. ஒவ்வொரு ரெயில் வண்டியும் ஒவ்வொரு சமுதாய அமைப்பைப் பிரதிபலிப்பதாக இருந்தது; ஒவ்வொரு பெட்டியிலும் பிரயாணம் செய்பவர்கள் ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் போல் விளங்கினுர்கள். ஒவ்வொரு பிரயாணியிடத்திலும் ஒவ்வொரு விசேஷம் இருந்தது. இதனுல் பிரயாணத்தின்போது அலுப்புத் தட்டுவதில்லை. இன்ன ஆசாமி இன்ன வர்க்கத்தைச் சேர்ந்தவர் என்றுகூடச் சொல்லிவிடலாம். 7-35 வண்டி என்ருல், அதில் ஆலைத் தொழிலாளர்களும், 8-35 வண்டி என்ருல் கடைக் குமாஸ்தாக்களும், 9-35 வண்டி என்ருல் வக்கீல்களும் புரொபஸர்களும் ஆபீஸ் சின்ன உத்தியோகஸ்தர்களும் போவார்கள். பத்து ஸ்டேஷனுக்கு ஒரு தரம் மட்டுமே நின்று போகும் 9-45 வண்டி, அங்கங்கே பலவிதத் தொழிலில் ஈடுபட்ட பிரயாணிகளை இறக்கிவிட்டும் ஏற்றிக்கொண்டும், புகை விடவோ, கூ என்று கூவவோ கூட நேரம் இல்லாமல் வேகமாகப் போகும். பிரயாணிகள், வண்டியில் அவசரப்படாமல் ஏறுவார்கள். அவர்கள் அன்ருடம் உட்காரும் இடம் அப்படியே காலியாகத்தான் இருப்பது வழக்கம். இந்தக் காலத்தில் கொஞ்சங்கூட மரியாதை இல்லாமல் முன்னும் பின்னும் முட்டி முழங்கையால் தள்ளிக்கொண்டு ஏறுகிறதே, அந்த மாதிரி மோசமான கும்பல் இன்னும் தலையெடுக்கவில்லை.

எங்கள் கோஷ்டியில் சுமார் 20-இலிருந்து 25 வயதுக்குட்பட்ட ஆசாமிகள்தான் அதிகம். விம்மி ஹக்கீம்தான் எங்களுக்குள் நடுநாயகமாக விளங்குபவன்; நாங்கள் அவனைச் சுற்றிக் கொம்மாளம் அடிப்பது வழக்கம். தினசரி படிக்கும் மற்றப் பிரயாணிகளுக்கு இதெல்லாம் தொந்தரவாகத்தான் இருக்கும். விம்மிக்கு அதிக உற்சாகம்; பேச்சில் ஹாஸ்யம்- கோமாளிப் பேச்சிலிருந்து உயர்தர ஹாஸ்யம் வரை - இருக்கும். அவன் பள்ளிக்கூட நாள் பிரதாபத்தையெல்லாம் கேட்டால்,

மூலம்: ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் (ஆங்கிலம்: பிப்ரவரி '54), சர்ச் கேட், பம்பாய்.

அதுவே பெரிய ராமாயணமாக விரிந்துவிடும்.

பள்ளிக்கூட வாத்தியார்கள் நாலு பேரையும், காலேஜ் பிரின்ஸிபால் ஒருவரையும் மட்டந் தட்டிச் சுத்த அசடுகளாக்கிவிட்டான். நவஸாகரைச் சேர்ந்தவர்கள் அவனுடைய பெற்றோர்; பையன் அங்கே இருந்த கொஞ்ச நாளில் அக்கம் பக்கம் எல்லாருக்குமே பைத்தியம் பிடித்துவிடும்போல் ஆகிவிட்டது. அதனால் அவனைச் சிறு வயதில், வட்னிதல் என்ற ஊரிலுள்ள போர்டிங் ஸ்கூலுக்கு மூட்டை கட்டி அனுப்பிவிட்டார்கள். அவன் அங்கே வந்து சேர்ந்த அன்றே ஸ்கூலுக்கு எதிரில், ராணுவத்தார் உபயோகிக்கும் கோவேறு கழுதைகளை ஓட்டிக்கொண்டு போனான் ஓர் ஆள். இதைப் பார்த்ததும் நம் விம்மி, அந்த ஆளுக்குத் தட்டுத் தட்டி விட்டு ஒரு கோவேறு கழுதையின்மேல் ஏறி ஊர் முழுவதும் ஜாம் ஜாமென்று சுற்றி வந்தான். அதைப் பார்த்தவர்கள் எல்லாரும் அப்படியே ஒடுங்கி அயர்ந்துவிட்டார்கள். அப்புறம் அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டுமே; அது ஓட, இவன் சமாளித்துப் பார்க்க, அது திமிறிக்கொண்டு பாய, இவன் திணற - இப்படிக் கொஞ்ச நேரம் ஆயிற்று. கடைசியில் அது, தான் எந்தப் பூர்விகப் பிராணியின் சந்ததி என்பதை-தன் பரம்பரைக் குணத்தை - அப்படியே காட்டிவிட்டது. ஊர்க் கோடியில் இருந்த ஒரு பள்ளத்தில் கொண்டு போய் அவனைத் தள்ளியது. எரிச்சலுடன் விம்மியை எதிர்பார்த்துக் காத்திருந்த சலித்துப் போனார்



ஹெட்மாஸ்டர். அப்புறம் அவர் அனுப்பிவைத்த சாரணச் சிறுவர்கள் தம் புதிய தோழனைத் தேடிக் கண்டு பிடித்து மூர்ச்சை தெளிய வைத்தார்களாம்.

ஹெட்மாஸ்டர் படிப்பில் அதிகமாக ஆழ்ந்திருப்பவர்; அதனால் மற்ற விஷயங்களில் கவன மறதி அதிகம். மென்மையான சுபாவம். அதுதான் முதல் தடவையானதால், விம்மியை அவர் திட்ட மட்டும் திட்டினாரேயொழியத் தண்டனை ஒன்றும் அவனுக்கு விதிக்கவில்லை. ஆனால் விம்மி சும்மா இருந்தால்தானே!- புது வருஷப் பிறப்பன்று ஹெட் மாஸ்டருக்கு மெழுகினால் செய்த பழங்களை ஒரு கூடை நிறையக் கொண்டு போய்க் கொடுத்து அவரை ஏமாற்றிவிட்டானாம். ஸ்கூலில் சாப்பாடு, விடுதி வசதிகளைக் கவனித்துக்கொள்ளும் பெரியம்மாளுக்கு ஒரு சமயம் ஏதோ பச்சிலையைக் கொடுத்துவிட்டானாம். அப்பா! அவள் வெறி பிடித்ததுபோல் ஆடிய ஆட்டமுண்டே; அதைச் சொல்லி முடியாது. அதைப் பார்த்து எல்

லாரும் திகைத்துவிட்டார்கள். ஸ்கூலில் பலவிதமாகக் குரலை மாற்றிப் பேசியும் நடித்தும் காட்டு வான். அகசியத்தில் நல்ல பழக் கம் உண்டு, அவனுக்கு. தான் இருக்கும் விடுதியின் ஜன்னலரு கில் நடுராத்திரியில் நாய்போல் தாழ்ந்த குரலில் கூவ ஆரம்பித் தானுனல் போதும்; உடனே அக்கம் பக்கம் இருக்கும் நாய்கள் எல்லாம் ஒரே மொத்தமாகக் குரைக்க ஆரம்பித்துவிடும்.

ஒரு சமயம் விடுமுறையின் போது மலைப் பக்கமாக ஓர் இடத் துக்குப் போனுர்களாம், அவனும் மற்றவர்களும். அங்கே ஒரு ஹோட்டலில் தங்கினுர்கள். விம்மி, அந்த எல்லையில் ஒரு சிறுத்தையைப் பார்த்ததாகவும் அது உறுமும் சத்தங்கூட அடிக் கடி கேட்பதாகவும் ஒரு சரடு திரித்துவிட்டான். இரவு வேளை யில் திட்டிக் கதவு வழியாக வெளியே வந்து கேட்பவர் குலை நடுங்கும்படி உறுமுவான். பின்னு லேயே, "ஐயோ! ஐயோ!" என்று கத்துவான். அங்கே தங்கி யிருந்த பிரயாணிகளில் சிலர் மேல் துணி இல்லாமலும், சிலர் சட்டை இல்லாமலும் அரை குறையாய் உடுத்த நிலையில், கோல்ஃப் தடி, ஹாக்கி தடி, டார்ச்சு விளக்கு, குடை - இப்படிக் கையில் கிடைத்ததையெல்லாம் தூக்கிக்கொண்டு ஓடி வந்தார்கள். ஹோட்டல் முதலாளியிடமிருந்த பழைய துப்பாக்கி ஒன்றை ஓர் ஆசாமி எடுத்து வந்துவிட்டார். அதுவோ துருப் பிடித்து உபயோக மற்றுப் போய் 50 வருஷத்துக்கு மேலாகியிருக்கும். அப்படியும் அதை வைத்துக்கொண்டுகூடச் சமாளித்து விடலாம் என்று சிலர் எண்ணினுர்கள். புலியைத் தேடிக் கொண்டு புறப்பட்டவர்களுக்குப் பல் கிடு கிடுவென்று அடித்துக் கொண்டது. அதற்குக் குளிர்மட்டு மல்ல; திகில் கூடத்தான் காரணம். 'சரி: இனிமேல் படுக் கப் போகலாம்' என்று யாராவது சொன்னுல் போதும்: சற்று நேரத் துக்கெல்லாம் மறுபடியும் ஒரு மூலையிலிருந்து புலி உறுமுவது கேட்டது!

விம்மி புதுப் புது யுக்திகளைக் கையாள்வதில் சமர்த்தன். ஒரு தரம் ஸ்கூல் நாள் முடியாமல் நீண்டுகொண்டே போகிற மாதிரி படவே, அவன் தன் தோழர்கள் இரண்டு பேரைக் கலந்துகொண்டு ஒரு யுக்தி செய்தான். ஸ்கூல் தோட்டத்தின் ஒரு மூலையில் அடர்ந்த சவுக்கஞ் தோப்பு ஒன்று இருந்தது. அதில் இரண்டு எலிப்பொறிகளில் பாலேடு வைத்து விட்டு வந்தார்கள். இரண்டே நாளில் பெரிது பெரிதாக இரண்டு எலிகளைப் பிடித்துவிட்டார்கள். அவைகளைக் கொன்று அவை நாற்றம் எடுக்கிறவரை அப்படியே வைத்திருந்தார்கள். ஒரு நாள் ஹெட்மாஸ்டர் நடத்தும் வகுப்பில் யாருக்கும் தெரியாமல் செத்த எலியில் ஒன்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டார்கள். அவர் அறையில் நுழையும்போதே மோப்பம் பிடித்துக்கொண்டு வந்தார். அப்புறம் அங்கே நன்ருக மூலைமுடுக்கெல்லாம் கவனிக்கச் சொன்னுர். செத்த எலி இருப்பது தெரிந்தது. இதே மாதிரி இன் னும் ஒரு வகுப்பிலும் விம்மி இன் னேர் எலியைக் கொண்டு வந்து வைத்துவிடவே ஹெட் மாஸ்ட ருக்குத் திகிலாகிவிட்டது. 'பிளேக் எங்கே வந்து விடுமோ?' என்று

பயந்து போய் உடனே ஸ்கூலை மூட உத்தரவிட்டுவிட்டார்.

ஸ்கூலில் சாப்பாடு ஒரே விதமாக இருக்கவே விம்மிக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. தோட்டக்காரனின் குடிசையில் உட்கார்ந்து பல விதமாகச் சமையல் செய்து பழகிக்கொண்டான். அங்கே யாராவது வாத்தியார் வந்து கவனித்துவிடப் போகிறாரே என்று சில பையன்களைக் காவலுக்கு வைத்திருந்தான். கடைசியில் விளக்கெண்ணெயிலேயே பண்டங்களைத் தயார் செய்யும் விதத்தைப் பழகிக்கொண்டு, சமையலிலும் தனக்குத் திறமை உண்டு என்று காட்டிவிட்டான். இதனால் அநேகம் பேருக்குப் பேதி கண்டு விட்டது. இன்னொரு சமயம் இறைச்சியைக் கறி செய்து போட்டுவிட்டான் விம்மி. அப்புறம் 'சுத்திச் சடங்கு' செய்வதற்குள் போதும் போதும் என்றாகி விட்டது. பலவிதமாகக் குரலை மாற்றிக்கொண்டு பேசுவதில்தான் கெட்டிக்காரனாயிற்றே! அதோடு டெலிஃபோனும் கைக்கு அகப்பட்டு விட்டால் கேட்க வேண்டுமா? ஹைட்ரஜன் குண்டைவிடப் பேராபத்தை விளைப்பதாக அந்த டெலிஃபோன் மாறிவிட்டதென்றால் பாருங்களேன். யாரும் இராத சமயத்தில் அதை ஒரு கை பார்த்து விடுவதென்று அவன் தீர்மானித்தான். சைத்தான்தான் காதில் இப்படி ஓதியிருக்குமோ என்னவோ? இதனால் பல பேருக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பேச்சு வார்த்தைகூட முறிந்து விடும் போல் ஆகிவிட்டது!

ஒருவேளை விம்மி நடுராத்திரியில் எழுந்து அன்றாடம் தினசரிப் பத்திரிகைகளில் வெளியாகும் தமாஷ்களை நெட்டுருப் போடுகிறானோ என்றுகூட எங்களில் சில பேருக்குச் சந்தேகந்தான். வேடிக்கைப் பாட்டுக்களிலிருந்து வசன கவிதை வரை கடகடவென்று ஒப்பிப்பான் விம்மி. அப்போது அவன் அதற்கேற்ற மாதிரி குரலை வைத்துக்கொண்டு பாவத்துடன் கையையும் காலையும் ஆட்டுவதைப் பார்க்க வேண்டும். சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிவிடும். "போதுமப்பா நிறுத்து" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டு அவனை நிறுத்த வேண்டியிருக்கும்.

## அவ்வளவு வேகம்!

எட்கார் வாலஸ் என்ற பிரபல துப்பறியும் கதாசிரியர் அதிவேகமாகக் கதைகள் எழுதிவிடுவார். இதை விளக்க ஒரு துணுக்கு உண்டு:

ஒரு நண்பர் ஒரு சமயம் டெலிஃபோனில் ஆசிரியரைக் கூப்பிட்டார். ஆசிரியரின் குமாஸ்தா, "வாலஸ் இப்போது தான் ஒரு கதையைத் தொடங்கியிருக்கிறார்" என்று பதிலளித்தார்.

"பரவாயில்லை; டெலிஃபோனிலேயே கொஞ்ச நேரம் காத்திருக்கிறேன்" என்றார் நண்பர். —லியோ கில்டு

பல கோடி பவுன் மதிப்புள்ள வைரங்களை ஆண்டு தோறும் ஏற்றுமதி செய்கிறது தென்னாப்பிரிக்கா.

# வைரம் விளையும் நாடு


★

தென்னாப்பிரிக்காவின் பொருளாதார வளமே பெரும்பாலும் அந்த நாட்டின் தாதுப் பொருள்களைப் பொறுத்துத்தான் அமைந்திருக்கிறது. அந்த நாட்டின் வருமானத்துக்கும் வெளிநாட்டுப் பரிவர்த்தனைக்கும் வைரத்தொழில் மிகவும் முக்கியமாக விளங்குகிறது. 1867-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தென்னாப்பிரிக்கக் குடியானவன் ஒருவனுடைய குழந்தைகள், ஆரஞ்சு நதிக் கரையில் பளபள வென்றிருக்கும் ஒரு கல்லைக் கண்டெடுத்தார்கள்; அதிலிருந்து தென்னாப்பிரிக்கா, வைரங்களுக்குப் பெயர் போன நாடாகி விட்டது. அந்தக் கல் பலர் கைக்கு மாறிக் கடைசியில் 1,000 மைல்களுக்கு அப்பாலுள்ள கிராஹம்ஸ் டவுன் என்ற நகரத்தை அடைந்தது. அங்கே அதைப் பரிசோதித்தபோது அது 'அசல் வைரம்' என்று தெரிந்தது.

அந்த நாட்டில் பெருவாரியில் வைரம் கிடைக்கும் என்று முதலிலே தெரியாது. சிற்சில இடங்களில் அவ்வப்போது வைரம் அகப்பட்டதாகத் தகவல் வரவர 1870-வாக்கில் இதைப்பற்றித் தீவிரமாக ஆராயத் தொடங்கினார்கள். இரண்டு ஆண்டுகளுக்கெல்லாம் கிம்பர்லியில் எரிமலைச் சுரங்க




ஒரு நாள் கிடைத்த வைரங்களை நிபுணர் ரகவாரியாகப் பிரிக்கிறார்



வைரத்துக்குப் பட்டை தீர்க்க மிகுந்த கைத்தேர்ச்சி வேண்டும்


மூலம்: காமன்வெல்த் டுடே (ஆங்கிலம்: நம்பர் 25), லண்டன்.




5,000 பவுன் பெறுமானமுள்ள தென்னப்பிரிக்க வைரக் குவியல்

களைக் கண்டுபிடித்தார்கள். கண்டவர்களெல்லாம் கண்டபடி முதவில் இந்தத் தொழிலில் ஈடுபடலானார்கள். ஒவ்வோர் இடத்தில் தோண்டி எடுத்த ஒவ்வொரு கற்குவியலுக்கும் மொத்தம் இவ்வளவு விலை என்று தங்களுக்குத் தோன்றினபடியெல்லாம் நிர்ணயித்தார்கள். ஆனால் இந்தத் தொல்லைகள் 1888-இல் தீர்ந்து விட்டன. இந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்த பலரும் அது முதல் இணைந்து வேலை செய்யத் தொடங்கினார்கள். இருந்தாலும், கிம்பர்லியைச் சேராத பிற ஜில்லாக்களில் வைரம் தேடி எடுத்துத்தான் வந்தார்கள்.

தென்னப்பிரிக்காவின் வைரச் சுரங்கங்களில் மிகவும் விலை மதிப்புள்ளது கிம்பர்லி எரிமலைச் சுரங்கக் 'குழாய்கள்' தான். கேப் ஜில்லாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து டிரான்ஸ்வால் வரையில் அங்கங்கே சிற்சில இடங்களில் இவை அமைந்திருக்கின்றன. ஆரஞ்சு, வால் நதிப் பள்ளத் தாக்குகளில் வண்டல் மண் ஏராளமாகப் படிந்திருக்கும் இடங்கள் பல உண்டு. இங்கெல்லாம் வைரம்



மினிட்டுக்கு 2,500 தடவை சுழலும் இரும்புச் சக்கரத்தில் 'பாலிஷ்' கொடுக்கிறார்



மணம் புரியப்போகிற காதலர்கள் வைரக் கணையாழியைப் பார்த்து மகிழ்கிறார்கள்

கிடைக்கும். இந்த மாதிரி இடங்களில் மிக முக்கியமானது தென் மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதிதான்.

இங்கே கிடைக்கும் வைர மணிகளைப்பற்றி ரசமான பல கதைகள் உண்டு. ஆப்பிரிக்கக் கடற்கரையோரம் மணல் மேடுகளில் இப்படி ஏராளமான வைரம் புதைந்து கிடக்கலாம்என்று தோன்றுகிறது. இந்த மணல் மேடுகளைத் தோண்டினால் பாறைகளுக்குக் கீழே வைரங்கள் கிடைக்கலாம்; இருந்தாலும் பெருவாரியில் முயற்சி எடுத்துக் கொண்டால்தான் அது சாத்தியம். 4,50,00,000 பங்கு மணலையும் பாறையையும் தோண்டி எடுத்தால் ஒரு பங்கு வைரம் கிடைக்கலாம். இதவும் வைரம் இதுவரைக்கும் கிடைக்கும் என்று தெரிந்திருக்கும் பகுதியில்தான்.

பத்து ஆண்டுகளுக்கு முன் பொடிக் கற்களும் மரு உள்ள கற்களும் பயன்பட மாட்டா என்று எறிந்துவிடுவது வழக்கம். இப்போதெல்லாம் உலகத்து மொத்த வைரங்களில் மூன்றில் இரண்டு பங்கு எடையுள்ள வைரங்கள் பற்பல கைத்தொழில்களுக்குப் பயன் படுகின்றன. வைரம் உறுதியான பொருளாகையால் பொடியாகவும் பிசின் போலவும் செய்யப்பெற்று உலோகங்களின் மேல் தேய்க்கப் பயன் படுகிறது. பாறைகளைக் குடையும் துரப்பணத்தின் நுனியில் வைரம் பதிக்கிறார்கள். அதோடு சுரங்க வேலையிலும், கம்பிகள் இழுக்கும் துளையுள்ள அச்சை வைரத்திலேயே தயாரிக்கிறார்கள். வைரத்தைக் கொண்டு நுணுக்கமான பல வேலைகளைச் செய்ய முடியும்.

கிடைக்கும் வைரத்தைச் சரிவரப் பயன்படுத்தவும் வெகு சிக்கனமாக உபயோகிக்கவும் நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டியது அவசியமாகும். சென்ற ஆண்டு ஜோஹான்னஸ்பர்க் அருகில் வைர ஆராய்ச்சிச் சாலை ஏற்பட்ட பின், இந்தத் துறையில் புதிய ஊக்கம் பிறந்திருக்கிறது. உலகத்திலேயே மிகப் பெரிய வைர ஆராய்ச்சிச்சாலை இதுதான்.

ராண்டு என்ற ஸ்தாபனத்துக்குட்பட்ட தங்கச் சுரங்க வேலை நடக்கும் பிரதேசத்தில், 50,000 பவுன் செலவில் இதைக் கட்டியிருக்கிறார்கள். இதற்கு மின்சார வசதியும் சுலபமாகக் கிடைத்து வருகிறது. தொழில் நுணுக்கம் அறிந்த பலர் இங்கே உத்தியோகத்துக்கு மனு போட்டு வருகிறார்கள்.

இங்கே வைரத்தைப் பல திராவகங்களில் போட்டு, அதனால் என்ன என்ன விளைவுகள் ஏற்படுகின்றன என்றும், எப்படியெல்லாம் அதை உபயோகிக்கலாம் என்றும் ஆராய்ந்து பல விஷயங்களைக் கண்டுகொண்டிருக்கிறார்கள். இப்படி வைரத்தைப் பரிசோதிப்பது மட்டுமன்றி, வைரக்கல்லைப் புதைக்கும் அச்சு, வச்சிரம், வைரம் பொருத்தக் கூடிய உலோக வகை இவைகளிலும் அபிவிருத்தி முறைகளைக் கண்டு பிடிக்க ஆராய்ச்சிகள் செய்து வருகிறார்கள். இங்கே அமைந்துள்ள ஆராய்ச்சிக் கருவிகளைக் கொண்டு வைரத்தை எந்த எந்த விதத்திலெல்லாம் பயன்படுத்தலாம் என்று தெரிந்துகொள்ள முடியுமாம்.

நகை நட்டுக்குப் பயன்படும் வைர மணிகள் அவரவர் ருசியை

யும் நாகரிகத்தையும் பொறுத்து விலை சரசமாகவோ, அதிகமாகவோ இருக்கலாம். ஆயினும் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வைரக்கற்களுக்கு எப்போதுமே கிராக்கி இருந்துகொண்டுதான் இருக்கிறது. இதனால் தென்னுப்பிரிக்க வைரத் தொழில் இன்னும் பல ஆண்டுகள் நிலைபெற்றிருக்கும் என்று சொல்லலாம். சென்ற மூன்று ஆண்டுகளாக வைரத்தொழிலுக்கு நல்ல தசை. நகை நட்டுகளுக்காகப் பயன்படும் வைரக்கற்களும் சரி, தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வைரக்கற்களும் சரி, நன்றாகவே விலை போகின்றன.

1952-இல் தென்னுப்பிரிக்காவிலிருந்து சுமார் 2,75,00,000 பவுன் மதிப்புள்ள வைரம் ஏற்றுமதியாகியிருக்கிறதென்றால் பாருங்கள்!

## முஸ்லிம்களின் புனித எண் 786

ஒவ்வோர் எழுத்துக்கும், ஓர் எண்ணைக் குறித்தொகையாகக் கணக்கிட்டு, எழுத்தை எண்ணுக்கும் பழக்கம் பல மொழிகளில் காணப்படுகிறது. அரபி மொழியிலும் இந்த வழக்கு உண்டு. இதற்கு 'அப்ஜது' கணக்கு என்று பெயர். இதன்படி முதல் எழுத்தான 'அலீப்', ஒன்றுக்குச் சமம்; அடுத்த எழுத்தான 'ப', இரண்டுக்குச் சமம்; ஜ— மூன்று. இப்படியே ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு குறித்தொகை உண்டு.

இப்பொழுது 'அஹ்மது' என்னும் பெயருக்குத் தொகை என்ன என்று பார்க்கவேண்டுமானால், 'அப்ஜது' கணக்கில் ஒவ்வோர் எழுத்துக்குமுள்ள குறித்தொகையை எடுத்துக் கொள்கிறோம். அ+ஹ்+ம+து=1+7+30+4=42, ஆக 'அஹ்மது' என்னும் பெயருக்குச் சமமான தொகை நாற்பத்திரண்டு. இந்தப் பெயருடையோர் நாற்பத்திரண்டைத் தம்முடைய அதிர்ஷ்ட எண்ணாக எண்ணிக்கொள்வதும் உண்டு.

இந்த வழக்குப்படி, 'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்னும் திருவாக்கியத்துக்கு ஒவ்வோர் எழுத்துக்கும் அதற்குரிய தொகையைக் கணக்கிட்டுக் கூட்டினால் 786 என்று அதன் கூட்டுத்தொகை வரும்.

ஆகவேதான் 786-ஐ நாம், கடிதங்கள், அமைப்புக்கள் முதலியவற்றின் தொடக்கத்தில் பொறிக்கிறோம்—('ரம்லான்')

'பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்' என்ற அரபி வாக்கியத்துக்கு, 'அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்' என்பது பொருள். இந்த வாக்கியம் அரபியில் 'பஸ்மலா' என்றும், சாதாரணமாக 'பிஸ்மில்லாஹ்' என்றும் சொல்லப் பெறுகிறது—(அல்லாமா, ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி.)

—'மணி விளக்கு'', சென்னை-1.

# பொல்லாத பிரசார நிபுணர்

★

**இன்று உலகத்திலே பிரசார மந்திரிகள் இல்லாத நாடே கிடையாது. இதற்கு வழி காட்டிய மேதை கெப்பல்ஸ்தான் என்று சொல்வதுண்டு. இவருடைய வாழ்க்கை வரலாறு மிகவும் ஆச்சரியமானது. இதற்கு ஆதாரம் 'ஜான் அவ் லண்டன்' பத்திரிகையில் கீத் ப்ரயாண்ட் என்பவர் எழுதியுள்ள ஒரு விவரம்.**

நாஜி ஆட்சியில் ஹிட்லரின் பிரசார மந்திரியாக இருந்த டாக்டர் கெப்பல்ஸைப் பற்றி, சென்ற மகா யுத்தம் முடிந்தபிறகு சாதாரண மக்கள் பொதுவாக என்ன அபிப்பிராயப் படுகிறார்கள் என்று விசாரித்த போது ஒரு விஷயம் தெரிந்தது: 'மனுஷன் நம்மைக் கடைசி வரையில் பொய் சொல்லி ஏமாற்றிவிட்டான் பார்' என்று அவர்களுக்கு ஆத்திரம். அவர் உண்மையிலேயே பிரசாரத்தில் எவ்வளவு நிபுணர் என்பதை அந்த ஆத்திரத்தில் அவர்கள் கவனிக்க வில்லை.

கீத் ப்ரயாண்ட் என்பவர் யுத்தம் முடிந்ததும் அங்கே காவல் இருந்த பிரிட்டிஷ் ராணுவத்தில் உத்தியோகம் பார்த்தவர். அவர் இது சம்பந்தமாக எழுதும் போது, "ஒரு நாள் வீட்டுக்கு வந்துகொண் டிருந்தேன். அப்போது என் மூன்று வயது மகன் காலை மிகவும் சிரமப்பட்டு இழுத்து இழுத்து நடந்துகொண்டே என்னிடம் வந்தான். குழந்தை எங்கேயாவது விழுந்து காயப்பட்டுக்கொண்டு விட்டானே என்று கவலையோடு உள்ளே நுழைந்தேன். ஆனால் அவன் குதூகலத்தோடு, 'அப்பா, நான்தான் கெப்பல்ஸ்' என்றான் ஜெர்மன் பாஷையில். அப்போது தோட்டப் பக்கம் கவனித்தேன். என் கீழ் வேலை பார்க்கும் ஜெர்மன் சிப்பந்திகள் இந்தக் காட்சியைப் பெருமையோடு பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களே இதைச் சிறுவனுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பகைவர்களிடம் சரண் புகுவதைவிடக் குழந்தை குட்டிகளோடு உயிரை விடத் துணிந்த தங்கள் பழைய தலைவர்களில் ஒருவரை எவ்வளவு சாமர்த்தியமாக நையாண்டி பண்ணிவிட்டோம் என்றுதான் அப்படிக் குதூகலப்பட்டார்கள்!" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சமீபத்தில் எரிக் எபர்மேயர், ஹான்ஸ் ஆட்டோ-மீஸ்னர் என்ற இரண்டு ஜெர்மன் ஆசிரியர்கள் டாக்டர் கெப்பல்ஸைப்பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். அந்த நொண்டி எப்படிப்பட்ட விநோதமான ஆசாமி, எவ்வளவு புத்திக் கூர்மை உள்ளவர் என்று இதிலிருந்து தெரிந்து

கொள்ளலாம். கெப்பல்ஸின் தாயும், சகோதரியும், மனைவியின் முதல் கணவனுக்குப் பிறந்த மகனும், இன்னும் அவளோடு நெருங்கிப் பழகிய சிநேகிதி ஒருத்தியும் சொன்ன விஷயங்களை வைத்துக்கொண்டு இதை எழுதியதாகச் சொல்கிறார்கள் ஆசிரியர்கள். அவரைப்பற்றிய விவரம் நாவல்களில் வரும் கற்பனை வரலாறுகளைவிடப் பிரமாதமாக இருக்கிறது.

ரீட் என்ற ஊரில் இருந்த சிறு நெசவாலை ஒன்றில் வேலை பார்த்து வந்தார் கெப்பல்ஸின் தந்தை. அவர் மிகவும் ஏழை. ஆனால் அதிக ஊக்கம் உள்ளவர். அவருடைய மூன்றாம் மகன் ஜோஸப் கெப்பல்ஸ். இவர் 1897-இல் பிறந்தார். தந்தை சாதாரண நெசவாளியாக இருந்து சிரமப்பட்டு முன்னுக்கு வந்தவர். சிறு வயதிலேயே, 'இந்தப் பிள்ளை மிகவும் புத்திசாலியாக இருப்பான்' என்று தந்தைக்குப் பட்டது. முதலில் உற்சாகம் குன்றியிருந்த தந்தைக்கு அது முதல்தான் ஊக்கம் பிறந்தது.

ஜோஸபுக்கு ஐந்து வயது இருக்கும்போது இளம் பிள்ளை வாயு கண்டது. பிறகு உடம்பு தேறினாலும் இடது கால் சற்றுக் குறுகி உடம்பும் ஒல்லியாகி விட்டது. தலை மட்டும் பெரிதாக இருந்தது. முதலில் ஸ்கூலுக்குப் போய் வந்தபோது கண்ணுக்கு லட்சணமாக இருப்பார். நல்ல பெயரும் எடுத்திருந்தார். ஆனால் இளம்பிள்ளை வாயுவிலிருந்து தேர்ந்து திரும்பவும் ஸ்கூலுக்குப் போனபோது மற்றப் பையன்களெல்லாம், "நொண்டி, நொண்டி" என்று கூப்பிட்டு, இவரைக் கேலி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். இவரை ஆட்டத்திலும் சேர்த்துக் கொள்ளவில்லை. இவருக்குப் பாவம் வருத்தம்.

அதிலிருந்து புத்தகங்களைப் படித்தே பொழுது போக்கி வந்தார். தம் அறிவினால்தான் உலகை வெல்ல முடியும் என்று தெரிந்து கொண்டார். கத்தோலிக் பரோபகாரச் சங்கத்தார் மேல் படிப்புப் படிக்க இவருக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தார்கள். ஆனால் ஒரு நிபந்தனையின்மேல் தான் இதைக் கொடுத்தார்கள். மத சம்பந்தமான கல்விப் பயிற்சியில் இவர் ஈடுபடக்கூடாது என்றார்கள். உணர்ச்சியோடு ஜோஸப், "ஏன்?" என்று ஒரு பாதிரியைக் கேட்டபோது, "தம்பி, உனக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லையே! என்ன செய்வது!" என்றாராம் வருத்தத்தோடு.

மெட்ரிகுலேஷன் பரீட்சையில் சிறப்பாகத் தேறினார். பரிசு வழங்கியானதும் ஹெட்மாஸ்டர் இவரைச் சில வார்த்தைகள் பேசச் சொன்னார். இத்தனை நாளாகக் கற்றுத் தேர்ந்த வித்தையையெல்லாம் பேசி இவருடைய நாவன்மையைக் காட்டச் சந்தர்ப்பம் வந்தது. ஆனாலும் இவர் பேசி உட்கார்ந்ததும் ஹெட்மாஸ்டர், "நீ என்னிடம் படித்த பிள்ளைகளுக்குள் மிகவும் கெட்டிக்காரன் தான். இருந்தாலும், நீ பிரசங்கி என்று பெயர் எடுக்க முடியாது" என்றார்.

முதல் உலக மகாயுத்தத்தில் இவர் சேர முடியவில்லை. ஹைடல்பர்க்கில் படித்து வந்தார். அப்போது கையில் காசு இல்லாமல் பட்டினி கிடப்பார்.

இப்படி யாரும் மதிக்காமல், பரிதாபமாக முகத்தை வைத்துக் கொண்டு அலையும் இவரைப் பார்த்து இவரோடு படிக்கும் ஒரு மாணவி இரக்கங்கொண்டாள். அவளுக்கும் இவருக்கும் நாளடைவில் நெருங்கிய பழக்கம் ஏற்பட்டுக் காதலாகப் பரிணமித்தது. ஆனல் இது நீடித்திருக்கவில்லை. அவள் வேறு எங்கோ போய்விட்டாள். அது முதல் கெப்பல்ஸுக்குக் கம்யூனிஸ்ட் கொள்கையில் விருப்பம் மூண்டது. சற்று மட்டரக மாணவர்களுக்குப் பாடம் சொல்லி ஏதோ ஒரு விதமாகப் பிழைத்து வந்தார்; நடுநடுவே யாருக்காவது காரியதரிசியாக இருப்பார்; ஏதாவது சாமானை வீடு வீடாக எடுத்துச் சென்று விற்பார். இதையெல்லாம் பார்த்ததும் அவருடைய தந்தைக்குச் சலித்து விட்டது. கடைசியில் 1922-இல் மியூனிக் என்ற ஊரில் அடால்ஃப் ஹிட்லரின் பிரசங்கம் ஒன்றை இவர் கேட்டார். உடனே அவருடைய கட்சியில் 8762-ஆம் நம்பர் அங்கத்தினராகச் சேர்ந்தார்.

பிறகு ரைன்லாந்தில் உள்ள பீர் தோட்டங்களில் கட்சிச் சார்பாகப் பிரசங்கம் செய்துவந்தார். இருந்தாலும் இவருக்குச் சம்பளம் ஒன்றும் கட்சியிடமிருந்து கிடைக்கவில்லை. மியூனிக்கில் நடந்த கலவரத்துக்குப் பின் ஹிட்லரைச் சிறைப்படுத்தினர்கள். அப்போது கெப்பல்ஸ் அவருக்கு உருக்கமாக நீண்ட கடிதம் ஒன்று எழுதினர். ஆனல் அதற்குப் பதிலே வரவில்லை.

1926-இல்தான் ஹிட்லருக்கு இவருடைய மதிப்புத் தெரிந்தது. ஒரு நாள் 2½ மணி நேரம் கெப்பல்ஸ் பிரசங்கம் செய்தார். அது அபாரமாக இருந்தது. உடனே தம் கட்சியின் முக்கிய அதிகாரியாக இவரை நியமித்துவிட்டார் ஹிட்லர். ஜெர்மன் மக்களின் தொகை அப்போது 45 லட்சம். நாஜி கட்சியின் எண்ணிக்கையோ ஆயிரத்துக்குமேல் இல்லை. இருந்தாலும், கட்சிக் கட்டுப்பாட்டுக்கு அடங்காத 200 பேர்களை இவர் அதிலிருந்து நீக்கிவிட்டார். பிறகு பெர்லினிலேயே போய்ப் பிரசாரம் செய்யத் தொடங்கி விட்டார்.

துணிச்சலோடு தாக்கிப் பேசினல்தான் பெயர் எடுக்க முடியும் என்று தீர்மானித்தார். பெர்லினில் கம்யூனிஸ்டுகள் மிகுதியாக இருந்த பகுதியான பெட்டிங் என்ற இடத்தில் ஒரு பெரிய கூட்டம் நடத்தினர். அப்போது நடந்த கலவரத்தில் 90 பேருக்குக் காயம். ஆனலும் மூன்றே நாளில் கட்சி அங்கத்தினரின் எண்ணிக்கை மூன்று மடங்கு அதிகரித்து விட்டது. அடுத்த ஜெர்மன் பொதுத் தேர்தலில் ரீச்ஸ்டாக் என்ற ஜெர்மன் பார்லிமெண்டில் நாஜி கட்சிக்கு 12 ஸ்தானங்கள் கிடைத்தன. முன்னே அதில் 9 நாஜிகள் மட்டுந்தான் இருந்தார்கள். ஹிட்லர் உடனே கெப்பல்ஸை ரீச்ஸ்டாக்கில் நாஜி கட்சியின் கொறடாவாக நியமித்தார்.

பிறகு விடாமல் நாஜி கட்சிக்காகப் பிரசாரம் செய்யத் தொடங்கினர் கெப்பல்ஸ். இந்தப் பிரசார பலத்தினலேயே 'மூன்ரும் ரீச்' (பார்லிமெண்ட்) உருவாயிற்று. பெரும்பான்மையினரான பொது மக்களை இவர் சட்டையே செய்யவில்லை. மனித சமூகம் பற்றியோ, தனிப்பட்டவர் உரிமைபற்றியோ இவர் மண்டையை உடைத்

துக் கொள்வதில்லை. ஹிட்லரைத் தெய்வமெனப் போற்றிப் புகழ்வதே இவர் கொள்கையாக இருந்தது. இதுவே இவருடைய வெற்றிக்குக் காரணம். பொதுக் கூட்டங்களைக் கூட்டிக் கூட்டி அடிக்கடி இப்படிப் பேசி வந்தார்; 'ஸ்டார்ம் ட்ரூப்பர்ஸ்' என்ற நாஜி தொண்டர்களை நன்ருகப் பயன்படுத்திக் கொண்டார்.

1930-இல் நடந்த ஜெர்மன் பொதுத் தேர்தலில் நாஜிகளுக்கு 107 ஸ்தானங்களும் 1932-இல் நடந்த தேர்தலில் 230 ஸ்தானங்களும் கிடைத்தன. 1933-இல் வேறு வழியின்றி ஜெர்மன் தலைவர் ஹிண்டன்பர்க் ஹிட்லரைப் பிரதம மந்திரியாக நியமிக்க வேண்டியதாயிற்று. ஹிட்லரே பேரும் புகழும் பெற்ருர் என்ருலும் கெப்பல்ஸுக்குத் தம் பிரசாரம் நல்ல பலன் அளித்ததைப்பற்றிப் பரம திருப்தி.

1930-இல்தான் இவர் மணந்து கொண்டார். இவர் மனைவி மக்தா நல்ல புத்திசாலி; அழகாகவும் இருப்பாள். இருந்தாலும் கெப்பல்ஸுக்கு ஏராளமான ஆசை நாயகிகள் உண்டாம். அதுவும் இவர் பதவிக்கு வந்து யுத்தம் ஆரம்பமாகும் வரை இப்படி அநேகம் பேர் இருந்ததாகத் தெரிகிறது.

வெற்றி கிடைத்துவிட்டபின் பிரசார மந்திரியாக இருந்து வந்தாலும் எத்தனை நேரந்தான் பிரசாரம் செய்துகொண் டிருப்பார்? பொழுது போக வேண்டி நாடக, சினிமா நடிகைகளோடு பழகத் தொடங்கினர். இதனல் இவருக்கு 'பாபெல்பர்க் ஆட்டுக்கடா' என்று பெயர் வைத்துவிட்டார்கள் சில பேர்! இவர் மனைவியும் இவரை விலக்கி விவாக ரத்து செய்துகொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்தாள். ஹிட்லருக்கு அவளிடம் ஒருபற்று; அதனல் அப்படிச் செய்ய வேண்டாம் என்று அவரே கேட்டுக் கொண்டாராம்.

1939-க்கு முன் ஹிட்லர் திடீர் என்று எதிர்பாராத விதமாகச் சர்க்கார்களைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றியபோதெல்லாம் முன்னதாகவே தக்கபடி பிரசாரம் செய்து வைத்திருப்பது மட்டுமே கெப்பல்ஸின் வேலையாக இருந்தது.

யுத்தம் தொடங்கிய பின்போ ஹிட்லரிடத்தில் தளராத பக்தியுடன் இருந்து, தம்முடைய திறமை, புத்திசாலித்தனம் எல்லாவற்றையும் காட்டினர் கெப்பல்ஸ். யுத்தகாலத்தில் இவருடைய தோழர்கள் பலவித வசதிகளுடன் வாழ்ந்தாலும் இவர் மட்டும் அவைகளை விரும்பாமலே இருந்து வந்தார். நாளாக ஆக, தோல்வி நெருங்க நெருங்க, இவர் கிளப்பி விட்ட துவேஷத்தின் பலனையெல்லாம் அநுபவிக்க நேர்ந்தது. அப்படியும் ஜெர்மானியரின் உறுதி குலையாதிருக்க அரும்பாடு பட்டார் கெப்பல்ஸ்.

தோல்வி மேல் தோல்வி ஏற்பட ஏற்பட ஹிட்லருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை; திகைத்துக் கிடந்தார். ஆனல் கெப்பல்ஸ் அதற்கெல்லாம் அஞ்சி நடுங்கி விடவில்லை. இன்னும் அதிக ஊக்கத்துடன் தீவிரமான முயற்சியில் ஈடுபடலானர். தோல்விகளினல் மனங் குன்றிய ஹிட்லர், நாஜி கட்சி அதிகாரத்துக்கு வந்த 10-ஆம் ஆண்டு விழாவை உத்தேசித்து நடக்க இருந்த பொதுக் கூட்டத்தில் பேச மறுத்துவிட்

டார். அப்போது கெப்பல்ஸ்தான் நிலைமையைச் சமாளித்தார். 'நாட்டு மக்கள் என்ன என்னவோ தியாகமெல்லாம் செய்யத் தயாராக இருக்கவேண்டும்' என்று ஆணித் தரமாக எடுத்துச் சொன்னார்.

1944 ஜூலையில் ஹிட்லரைக் கொல்ல ஒரு முயற்சி நடந்தது; ஆனால் அது பலிக்கவில்லை. அப்போதுதான் கெப்பல்ஸின் வாழ்நாளிலேயே மகத்தான பதவி ஒன்று இவருக்குக் கிடைத்தது. ஹிட்லர் இவரை 'யுத்த சர்வாதிகாரி'யாக நியமித்தார்.

இருந்தாலும், ஜெர்மனி சீர் குலைந்து அழியும் நிலைக்குத்தான் வந்துகொண்டிருந்தது. உடனடியாக அப்படி நேராதபடி பார்த்து வந்தார் கெப்பல்ஸ் என்று மட்டுமே சொல்லலாம். இவருடைய கடைசிச் சிருஷ்டி 'வெர்வுல்வ்ஸ்' (மனித ஓநாய்கள்) என்ற பின்னணிப் படைதான். இதைச் சேர்ந்தவர்கள், பின்வாங்கிக் கொண்டிருக்கும் ஜெர்மன் ராணுவத்தாருக்குப் பின்னால் தீவிர தேசபக்தியுடன் போர் புரிந்து வந்தார்கள்.

முடிவு நெருங்கிவிட்டதென்று தெரிந்ததும் மக்தாவுக்குப் பழைய படி கணவனிடத்தில் உள்ளூற அன்பு வளரத் தொடங்கியது. கெப்பல்ஸின் புத்திக் கூர்மையும் சக்தியும் திடீரென்று முன்னை விடப் பிரமாதமாகச் சோபித்தன. 14-ஆண்டுகளாக ஹிட்லர் இவருக்கு உற்ற தோழனாக இருந்தார். கடைசியில் ஹிட்லர், ஈவா ப்ரான் என்பவளை நிலக்கரிக் கிடங்கில் மணம் செய்துகொண்டபோது கெப்பல்ஸ் அவருக்கு மாப்பிள்ளைத் தோழனாக இருந்தார்.

ஹிட்லர் தற்கொலை செய்து கொள்ளும்போது கெப்பல்ஸைத் தான் தமக்குப் பின் சர்வாதிகாரியாக நியமித்தார். 24 மணி நேரம் பெர்லினில் ஒரு சிற்றெல்லைக்கு மட்டுமே சர்வாதிகாரியாக இருக்கும் பாக்கியந்தான் கிட்டியது கெப்பல்ஸுக்கு. பிறகு எதிர்காலத்தில் மக்கள் மனத்தில் வீர உணர்ச்சி பரவவேண்டுமென்று தீர்மானித்தார். மனைவி விஷங் குடித்துச் சாகவேண்டும் என்றும், தாம் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு சாகவேண்டும் என்றும் முடிவு செய்தார். அப்படியே செய்யவும் செய்தார்.

கெப்பல்ஸின் கூட்டாளியான ஹான்ஸ் ஃப்ரிட்ஷ் என்பவர் ருஷியர் கையில் சிக்கியதும், கெப்பல்ஸ் இருக்குமிடத்தைக் காட்டச் சொன்னார்கள். கருகிக் கிடந்த இரண்டு பிணங்களை ஓர் இடத்தில் அவர் காட்டினார். ஆராய்ச்சியின்போது அவை கெப்பல்ஸ் தம்பதிகளின் பிணங்களே என்பது சந்தேகமறத் தெரிந்தது. அருகில் விமானக் குண்டிலிருந்து தப்புவதற்காக எழுப்பியிருந்த பாதுகாப்புக் கூடத்திலே அவர்களுடைய ஆறு குழந்தைகளும் இரவுவேளை உடுக்கும் வெள்ளைக் கவுனுடன் இறந்து கிடந்தன. மனைவிக்கு விஷம்; தமக்குத் துப்பாக்கிக் குண்டு; குழந்தைகளுக்கு என்ன பிரயோகித்தாரோ தெரியவில்லை. ஆனால், அவை நிர்ப்பயமாகவே இறந்தன என்று மட்டும் புலனாயிற்று.


ஆசை வசமான மனிதர்கள் வேட்டைக்காரர் விரட்டிய முயலைப்போல் ஓடித் திரிகிறார்கள்.

—புத்தர்

# சதுரங்கத் தோழர்

★

**மல்லர்களுக்குத்தான் தோழர்கள் உண்டா? சதுரங்கம் ஆடுகிறவருக்கும் அவர்கள் ஏற்பட்டிருக்கிறுர்கள். இந்த ரஸமான விவரம், 'செஸ் ரிவ்யூ' பத்திரிகையில் ஜார்ஜ் கோல்டானவ்ஸ்கி, ஹாஜே க்ராமர், ஃப்ரெட் எம். வ்ரென் என்ற மூவரும் எழுதியிருப்பது.**



மேல் நாட்டில் முன் காலத்தில் 'ட் யூ யல்' என்ற ஒரு வகை மல் யுத்தம் நடப்பதுண்டு. இரண்டு கனவான்களுக்குள் எது பற்றியாவது மனஸ்தாபம் வந்தால், ஒண்டிக்கொண்டி சண்டையிட வருமாறு சவால் விடுப்பார்கள். சண்டையின்போது இரண்டு பேருக்கும் ஒவ்வொரு நண்பர் சாட்சியாக வருவார். அவருக்கு 'ஸெகண்டு' என்று பெயர். இந்தக் காலத்தில் கூட மல் யுத்தம் சிலவற்றில், இரண்டு மல்லருக்கும் துணைவர் இருப்பதுண்டு. அவர் மல்லரின் வேர்வையைத் துடைப்பார்; முகத்தில் வழியும் ரத்தத்தைத் துணியால் அகற்றுவார்; காதிலே, "அவனுல் நம்மை அடிக்க முடியாது; பயப்படாதீர்கள்" என்று கிசு கிசுத்த குரலில் தைரியம் கூறுவார். இப்படி மல்லர்களுக்கு 'ஸெகண்டு' என்ற துணைவர்கள் இருப்பதைப் போலவே, சதுரங்க ஆட்டக்காரர்களுக்கும் துணைவர்கள் இருக்கிறுர்கள். சதுரங்க விளையாட்டில் பெரிய 'டூர்ணமெண்டு'களோ, போட்டிகளோ நடைபெறும்போது, இந்த மாதிரி துணைவர்களைப் போட்டிக்காரர்கள் நியமித்துக்கொள்ளுகிறுர்கள். இது நம்மில் பலருக்கு வியப்பளிக்கலாம். "அப்படியா? அந்தத் துணைவர்களுக்கு என்ன வேலை?" என்று அவர்கள் கேட்கக் கூடும். காயை நகர்த்துவதைத் தவிர, மீதி எல்லா வேலையையுமே துணைவர்கள் செய்கிறுர்கள்.

ஆட்டக்காரரின் பிரதிநிதியாக, கமிட்டிக் கூட்டங்களில் துணைவர் கலந்துகொள்ளுவார். ஆட்ட ஆரம்பத்தில் புது மாதிரியாகக் காய்களை நகர்த்தும் வழிகளை (ஓப்பனிங் நாவல்டீஸ்) வகுத்துச் சொல்லுவார். ஒத்திப்போட்ட (அட்ஜர்ண்டு) ஆட்டங்களை அலசி ஆராய்ந்து, ஆலோசனை சொல்லுவார். இந்த உதவிகளை யெல்லாம் புரியக்கூடிய துணைவரை நியமித்துக் கொள்ளும் வழக்கம், சென்ற இருபது வருஷ காலமாகவே இருந்து வருகிறது.

சதுரங்கப் போட்டிக்காரரின் துணைவர் என்ருல், சாதாரண மானவர் அல்ல. நிபுணரின் துணைவரும் ஒரு நிபுணராகவே ('மாஸ்டர்' அல்லது 'கிராண்ட் மாஸ்டர்' ஆகவே) இருப்பார். போட்டிக்காரருடன் இனி ஆடப் போகிறவர்கள், இதற்கு முன்னுல் யார் யாருடன் எப்படியெல்லாம் ஆடியிருக்கிறுர்கள் என்று துணை

வர் ஆராய்வார். தவிர, அப்படி ஆடப் போகிறவர்கள், முன்பு யாரிடமாவது ஏதாவது பேசியிருந்தாலும் சரி, கட்டுரை முதலியவை எழுதியிருந்தாலும் சரி, அவைகளையும் கவனிப்பார். ஆடப்போகிற எதிரியின் ஆட்ட யுக்திகளை ஆராய்வார். தற்காப்பு, தாக்குதல் இந்த இரண்டு தந்திரங்களிலும் எதிரியின் பலாபலத்தை அளந்து வைப்பார். "இன்னார் ஆடும்போது, எதிரியின் 'பவர்'கள் உள்ளே நுழைய முடியாதபடி தடுக்கும் ('ப்ளாக்' செய்யும்) முறையில் ஆட்களை நகர்த்துங்கள். அவர் பொறுமையிழந்து, ஆத்திரத்தோடு காய்களை நகர்த்துவார். தடையை முறித்து, 'பவர்'களைப் புகுத்த முயன்று தோற்றுப் போவார். அவருடன் ஆடும்போது, ஸிஸிலியன் முறையை அநுஷ்டியுங்கள். இதற்கு முந்தி இந்த முறையால் பதினாறு தடவை அவர் தோற்றிருக்கிறார். இன்னார் இன்ன பத்திரிகையில் அல்லி காஷ் தற்காப்புக்குப் பதிலாக 16-PKN 5 ஏற்றது என்று தாம் கண்டு பிடித்திருப்பதாக இவர் சொல்லியிருக்கிறார். நான் ஆராய்ந்த மட்டில் 16... RQ 5 இதற்குச் சரியான பதில். கறுப்புக் காய்கள் வைத்துக்கொண்டு இவரோடு ஆடினால், இப்படி நகர்த்துங்கள். சுலபமாய் ஜயிக்கலாம்" என்றெல்லாம் ஆட்டக்காரருக்குத் துணைவர் சொல்லிக் கொடுப்பார்.

போட்டி ஆட்டம் நடக்கும் இடத்தின் கால வரம்புகள், விதிமுறைகள், பத்திரிகை நிருபர்களின் சந்திப்பு, நிதி ஏற்பாடுகள் இந்த மாதிரியான பல விவரங்களையும் துணைவரே கவனித்துக் கொள்வார். 'டோர்ணமெண்ட்' ஆட்டங்கள் அத்தனையையும் கூட இருந்து பார்த்து ஆராய்வார். தம் தலைவரின் ஆட்டத்தைக் கட்டாயம் பக்கத்திலிருந்து கவனிப்பார். அவர் கையிலே 'பாக்கட்' சதுரங்கப் பலகை ஒன்றும் காய்களும் இருக்கும். தலைவரும் எதிரியும் ஆடுகிற போர்டில் இருக்கிறபடியே தம் கைப் பலகையிலும் காய்களை நகர்த்தி, மனத்துக்குள்ளேயே துணைவர் ஆராய்வார். ஆட்டம் நடக்கிறபோது, தலைவருக்கு அவர் எந்த விதமான யோசனையும் சொல்லக் கூடாது. ஆனால் துணைவரின் யோசனை மானஸத் தந்தி (டெலிபதி) மூலம் தலைவருக்கு எட்டிவிடுமாம். மற்ற எதில் 'டெலிபதி' பலித்தாலும் சரி, பலிக்காவிட்டாலும் சரிதான்; சதுரங்க ஆட்டத்தில் கட்டாயம் பலித்துவிடுகிறதாம். இது பல சதுரங்க நிபுணர்களின் திட அபிப்பிராயம். ஆனால், சில சந்தேகப் பிரகிருதிகள் "டெலிபதியாவது, மண்ணாங்கட்டியாவது! அதெல்லாம் சுத்த ஹம்பக்! ஜாடை காட்டுகிறார்கள். அதுதான், ஸார், ரகஸ்யம்" என்று சொல்லத்தான் சொல்லுகிறார்கள். "நான் சர்வதேச 'டோர்ணமெண்டு'களில் என் வாலிபத்தில் ஆடியிருக்கிறேன். அப்போது ஒரு துணைவர் தம் காதைத் தொடுவார். 'மந்திரியை நகர்த்து' என்று அதற்கு அர்த்தம். உடனே தலைவர் அப்படியே நகர்த்துவார்" என்று கோல்டானவ்ஸ்கி ஒரு முறை சொல்லியிருக்கிறார்.

போட்டி ஆட்டக்காரர்களில் ஒருவர் ஒரு காயை நகர்த்திவிட்டு, எழுந்து சென்று அறைக்குள்ளேயே சற்று உலாத்திவிட்டு

வருவதுண்டு. அங்கே பல பேர் இந்தப் போட்டி ஆட்டக்காரர்களிடம் கையெழுத்து (ஆட்டொக்ராஃப்) வாங்குவதற்காகக் காத்திருப்பார்கள். ஒவ்வொரு 'டேர்ணமெண்டி'லும், போட்டிக்காரரின் படங்கள் ஒரு பக்கமும் அதற்கு எதிரே கையெழுத்திட வெறும் தாளும் அடங்கிய புரோகிராம் புஸ்தகங்கள் தயாரித்து விற்பார்கள். அந்தப் புஸ்தகங்களைப் பல அபிமானிகள் வாங்கி வைத்துக்கொண்டு கையெழுத்து வேட்டையில் முனைந்திருப்பார்கள். தலைவருக்குத் துணைவர் கள்ளத்தனமாக ஆலோசனை சொல்ல, இந்த நிலைமையை உபயோகித்துக் கொள்ளுவதுண்டாம்.

உதாரணமாக, ஒரு போட்டியில் இரண்டு பேர் ஆடிக்கொண்டிருந்தார்கள். 25 தடவை காய்களை இரண்டு பேரும் நகர்த்திவிட்டார்கள். 'இருவருக்கும் வெற்றி தோல்வி இல்லை (ட்ரா)' என ஒப்புக்கொண்டு ஆட்டத்தை முடித்து விடலாம் என்று, ஆட்டக்காரர் பி— சொன்னார். ஆட்டக்காரர் ஏ—அதற்குச் சம்மதிக்கவில்லை. ஒரு காயை நகர்த்திவிட்டு, எழுந்து உலாத்தச் சென்றார். அப்போது கையெழுத்து யாசகர் ஒருவர் வந்து, புஸ்தகத்தை நீட்டினார். ஆட்டக்காரர் ஏ—, கையெழுத்துப் போட்டார். யாசகர் கிர் என்று வெளியே ஓடினார். ஆட்டக்காரரின் உலா இன்னும் முடியவில்லை. சிறிது நேரத்துக்கெல்லாம் அதே கையெழுத்து யாசகர் மறுபடியும் புஸ்தகமும் கையுமாகத் தோன்றி மீண்டும் கையெழுத்து யாசித்தார். மறு கையெழுத்தும் போட்டு விட்டு, மேஜையின் முன்பு உட்கார்ந்தார் ஏ—. அடுத்த தடவை காய் நகர்த்திய பின்பு, "இருவருக்கும் வெற்றி தோல்வி இல்லாமல் ஆட்டத்தை முடிக்க நான் தயார்" என்று அவரே சொன்னார். "எனக்கும் அது சம்மதமே" என்றார் பி—. ஆட்டம் முடிந்தது. விஷயம் என்ன தெரியுமோ? கையெழுத்து யாசகர் முதல் தடவை வந்தபோது, "வெற்றி தோல்வி இல்லாது ஆட்டத்தை முடிக்கலாமா?" என்ற கேள்வியைத் துணைவருக்குச் சங்கேதமாக எழுதியனுப்பினார் ஏ—. "முடிப்பதே நல்லது" என்ற பதிலைத் துணைவரிடமிருந்து வாங்கிக்கொண்டுதான் இரண்டாவது தடவை அதே யாசகர் வந்து சேர்ந்தார். துணைவரின் யோசனையைத் தலைவர் பெறுவதற்கு இப்படியெல்லாம் தந்திரங்கள் நடக்கின்றனவாம்.

ஆட்டம் நடக்கும்போதே துணைவரின் ஆலோசனையைப் பெறுவதில்தான் இந்தத் தொல்லையெல்லாம் நேர்கிறது. ஒத்திப் போட்ட ஆட்டம்பற்றி, இடைவேளையில், தலைவருக்குத் துணைவர் என்ன யோசனை வேண்டுமானாலும் சொல்லலாம். அதற்கு எந்த விதமான தடையும் கிடையாது. சொல்லப் போனால், அந்த இடைவேளையில், ஆட்டக்காரர் குஷியாக ஓட்டலுக்குப் போவார்; தூங்குவார்; டான்ஸுக்குப் போவார். ஆட்டத்தை அடியோடு மறந்து என்ன வேண்டுமானாலும் செய்வார். துணைவர்தான், ஒத்திப்போட்ட ஆட்டத்தைப்பற்றி, காய்களை வைத்துக்கொண்டு விரிவான ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருப்பார். மேலே ஆட்டத்தை எப்படித் தொடர்ந்து

நடத்த வேண்டும் என்பதுபற்றித் தாம் கண்ட முடிவுகளைத் தலைவருக்குச் சொல்லிக் கொடுப்பது அவருடைய கடமை.

சமீபத்தில் ஜெர்மனியில் நடந்த 'சாலஞ்ஜர்ஸ் டேர்ணமெண்'டில் ஆட்டக்காரர்களையும் அவர்களுடைய துணைவர்களையும் இங்கே பாருங்கள்:

| ஆட்டக்காரர் | துணைவர் |
|---|---|
| க்ளிகாரிச் | ட்ரியுனுவிச் |
| டைமனுவ் | ஃப்ளோர் |
| நஜ்டார்ஃப் | போல்போச்சன் |
| பெட்ரஸ்யான் | ஏ.விலியெந்தால் |
| அவெர்பாச் | ஃப்ளோரியான் |
| ஸாபோ | ப்ஜெலின் |
| யூ | வான்டென்பெர்க் |
| ஸ்டால்பெர்க் | ஸ்கோல்டு |
| போலெஸ்லாவ்ஸ்கி | ஸொகலாங்கி |
| கொடாவ் | மாயிஸெஜெவ் |
| கெல்லர் | பண்டாரெவ்ஸ்கி |
| ஸ்மஸ்லாவ் | ஸிமாஜென் |
| கெரீஸ் | டோலுஷ் |

ப்ரான்ஸ்டீன், ரெஷெவிஸ்கி இந்த இரண்டு பேருக்கு மட்டுந்தான் துணைவர்கள் இல்லையென்று அறிவித்தார்கள். முறைப்படி துணைவர்களை இவர்கள் நியமித்துக்கொள்ளவில்லை என்பது உண்மையாக இருக்கலாம். ஆனால், ப்ரான்ஸ்டீன் இஷ்டப்பட்டபோதெல்லாம் ரகோஸின் அளிக்கும் உதவியைப் பெற்றுக்கொள்வார். ப்ரான்ஸ்டீனுக்கு மட்டும் அல்ல; போட்டியில் கலந்த பிற ருஷியர்களுக்குமே, ருஷிய ஆட்டக்காரர் அத்தனை பேரும் சேர்ந்து ஆலோசனை சொல்ல எந்த நேரமும் தயாராயிருந்தார்கள். ஸாம்மி ரெஷவிஸ்கி ஒருவருக்குத்தான் துணைவரே இல்லை. தம் சொந்த யோசனைப்படியே அத்தனை ஆட்டங்களையும் அவர் ஆடினுர்.

## வீரரும் பாடகரும்

ஒரு காலத்தில் உலகத்தையே நடுங்கச் செய்த வெற்றி வீரர் தைமூர். அவருக்கு ஒரு கால் முடம். ஒரு சமயம் அவரை ஷிராஸ் நகரத்துக்கு அழைத்தார்கள். அவர் வருகையை யொட்டி இசை அரங்கு ஒன்று அமைத்தார்கள். இசையரசர் 'தௌலத்' என்பவர் இசையமுதைப் பொழிவதற்கு ஆயத்தமானுர். அவர் ஒரு குருடர். அவரைத் தைமூர், "தங்கள் பெயர் என்ன?" என்று கேட்டார். இசையரசர் தம் பெயரை அறிவித்தார். தௌலத் என்பதற்குச் 'செல்வம்' என்பது பொருள். உடனே தைமூர் சிரித்துக் கொண்டு, "தௌலத் குருடாகவா இருக்கும்?" என்று குத்தலாகக் கேட்டார். உலகத்தையே கிடுகிடுக்கச் செய்த வீரரின் உரை கேட்டு, இசையரசர் நடுங்கவில்லை. "தௌலத் குருடாக இல்லாமல் போனுல் முடவனிருக்கும் இடத்துக்கு வந்திருக்காது" என்று அவர் விடுத்த பதில் வீரரெதிரே அம்புபோல் பாய்ந்தது.

—கா. அப்துல் கஃபூர்

பருவத்துக்குப் பருவம் மாறிக் கொண்டிருக்கும் அழகான உடை-

# கிமோனோ



★

யாராவது அயல் நாட்டு யாத்திரிகர் முதல் முதலாக ஜப்பானுக்கு வருவதாக வைத்துக்கொள்வோம். இங்கே முக்கால்வாசி ஜப்பானியர் அந்நிய நாட்டு உடைகளை அணிந்திருப்பதைக் கண்டு அவர் ஆச்சரியப்படுவார். பத்துப் பேருக்கு ஒன்பது ஆண்களும் பத்துப் பேருக்கு எழு பெண்களும் மேல்நாட்டு முறையில் உடை அணிகிறார்கள்.

ஆனால், இந்த மேல்நாட்டு உடைகளெல்லாம் ஆபீஸ்களில் வேலை செய்வதற்கு மாத்திரமே. வீட்டிலே இருக்கும்போது, அவர்களில் அனேகர் 'கிமோனோ' என்ற ஜப்பானிய உடையையே உடுத்துகிறார்கள். அதை உடுத்தினால்தான் அவர்களுக்கு மிகவும் சௌகரியமா யிருக்கிறது.

கிமோனோ - அதிலும் முக்கியமாகப் பெண்கள் உடுத்தும் கிமோனோ-ஜப்பானியரின் அபூர்வமான சிருஷ்டி. அது அவர்களுக்கே உரியது; அவர்களே நெய்தது; அவர்களே இன்ன மோஸ்தரில் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டது. அதைப் பற்றி ஜப்பானியர் பெருமை கொள்வது மிகவும் தகும்.

வர வர அதிகமான ஜப்பானியப் பெண்கள், மேல் நாட்டு உடைகளை அணிந்து வருகிறார்கள் என்பது உண்மை. என்றாலும், அவர்கள் கிமோனோ அணிந்திருக்கும்போதுதான், மிக்க அழகாயிருக்கிறார்கள்; உற்சாகமாக இருக்கிறார்கள். தேநீர் அருந்துவது, பூக்களைக் கொண்டு அலங்கரிப்பது, ஜப்பானிய டான்ஸ் இந்தக் காரியங்களில் அவர்கள் ஈடுபடும்போது, மிகவும் பாந்தமாக இருப்பது கிமோனோதான்.

இப்போது ஜப்பானியர் உடுத்தும் கிமோனோ மோஸ்தர், சுமார் 200 வருஷங்களாகப் புழக்கத்தில் இருக்கிறது. பல விதமான கிமோனோக்கள் இருக்கின்றன. கிமோனோ மோஸ்தர்கள் (பாட்டர்ன்ஸ்), அதைத் தயாரிக்க உபயோகிக்கும் நூல் முதலிய பொருள்கள் இவையெல்லாம் பருவ காலங்களை அனுசரித்தவையாக இருக்கும்.

வசந்த காலத்துக்கு அவாஸே (கோடிட்ட கிமோனோ) ஏற்றது. கோடையில் கோடுகள் இல்லாத கிமோனோவையே அணிவார்கள். 'யுகாட்டா' என்று அதற்குப் பெயர். அது குளுமையாக இருக்-

**மூலம்: நியூ ஜப்பான் (ஆங்கிலப் பிரசுரம்), மைனிச்சி ப்ரெஸி, டோக்கியோ.**

கும்; கோடைக்குப் பொருத்த மானது; பளிச்சென்று நீலிச் சாய மோஸ்தரில் அமைந்திருக்கும். இலை உதிர் காலத்தில் மீண்டும் அவாஸே வந்துவிடும். ஆனல், அப்போது ஹவோரி என்ற குட்டைச் சட்டை ஒன்றைக் கிமோனேவுக்கு மேல் அணிவார்கள். அந்த அந்தப் பருவத்துக்கு ஏற்ற கிமோனே அணிவதில் ஜப்பானியர் மிகுந்த அக்கறை காட்டுகிருர்கள். ஒரு பருவத்துக்குப் பொருந்தாத கிமோனேவை அதில் அவர்கள் அணிவதேயில்லை.

## மந்திரிகளுக்கு ஒரு யோசனை

புதிதாய் மந்திரி பதவி வகிப்பவர்களுக்கு லார்டு ஸாங்கி சொல்லியிருக்கும் புத்திமதி இது: "சர்க்காரின் நிரந்தர அதிகாரிகளே உங்களுக்குச் சிறந்த உதவி அளிப்பவர்கள். அவர்கள் சொல்லும் ஆலோசனைப்படியே இருபதுக்குப் பத்தொன்பது தடவை நீங்கள் நடப்பதுதான் நல்லது. அந்த மிச்சம் ஒரு தடவை இருக்கிறதே, அதில் உங்கள் சொந்த அபிப்பிராயம் சரியாயிருந்தாலும் சரி, தப்பாக இருந்தாலும் சரி, விட்டுக் கொடுக்கவே கொடுக்காதீர்கள்."

## கிழவி அளித்த பழம்

ஒரு சமயம் வயது முதிர்ந்த கிழவி ஒருத்தி நபிகள் நாயகத்திடம் வந்து சில பேரீச்சம் பழங்களை அன்பளிப்பாக வழங்கினள். தமக்கு வரும் எந்த அன்பளிப்பையும், முதலில் தோழர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துவிட்டுக் கடைசியில் அநுபவிப்பதே நபிகள் நாயகத்தின் வழக்கம். ஆனல் இப்போதோ அவரே முதலில் ஒரு பேரீச்சம்பழத்தை வாயில் போட்டுக்கொண்டார். அன்பளிப்பு வழங்கிய கிழவிக்கு நன்றி கூறினர். மீண்டும் ஒரு பழத்தைச் சாப்பிட்டார். மற்றொன்றையும் உண்டார். இப்படியே அத்தனை பழங்களையும் தின்றுவிட்டார். தன் அன்பளிப்பு முழுவதையும் நாயகமே உட்கொண்டதால், பெருமகிழ்ச்சி கொண்டு கிழவி வீடு திரும்பினள்.

ஆனல் நாயகத்தின் தோழர்களுக்கோ இந்த நிகழ்ச்சி ஒரு புதிராகவே இருந்தது. எனவே, இதன் விளக்கத்தை அவரிடம் கேட்டபோது, "வந்த கிழவி மிகுந்த நல்லெண்ணத்தின்மீது அந்த அன்பளிப்பை வழங்கினள். நான் ஒரு பழத்தை வாயில் போட்டேன். அது கடும் புளிப்பாக இருந்தது. அந்த நிலையில் பழங்களை உங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால், கிழவியின் முன்னிலையிலேயே நீங்கள் ஏதாவது அதிருப்தியாகச் சொல்லியிருப்பீர்கள். இல்லாவிட்டால் கூட, முகத்தையாவது சுளித்திருப்பீர்கள். அது கிழவிக்கு வருத்தமளித்திருக்கக் கூடும். அதற்காகத்தான் நானே எல்லாப் பழங்களையும் தின்றுவிட்டேன்" என்று நாயகம் சொன்னர்.

—ஷிப்லி, 'மணி விளக்கு.'

# புத்தர் வாக்கு

ப. ராமஸ்வாமி

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

**இந்துக்களுக்குப் 'பகவத் கீதை' எப்படியோ அப்படிப் பௌத்தர்களுக்கு முக்கியமான புனிதநூல் 'தம்மபதம்.' இதை அருளியவர் புத்த பகவான். இது பொருள் நிறைந்த பழமொழிக் களஞ்சியம். அரிய நீதிகள் அடங்கியது. இதனோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது தமிழ் மறையாகிய திருக்குறள். 'தம்மபத'த்தை நண்பர் ப. ராமஸ்வாமி மிக அழகாக மொழிபெயர்த்திருக்கிறார். அதோடு ஒவ்வோர் இயலின் ஆரம்பத்திலும் சில குறள்களையும் குறள்களின் கருத்துக்களையும் தந்திருக்கிறார். முகவுரையில் புத்தர் சரித்திரச் சுருக்கத்தை வரைந்திருக்கிறார். அவர் மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்தவை இந்த வசனங்கள்.**

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மனிதனை மனோதர்மமே உருவாக்குகிறது; சிந்தனைகளே அதன் அடிப்படை. சிந்தனைகளாலேயே அது ஆக்கப்படுகிறது. மனிதன் நல்ல எண்ணத்துடன் பேசினாலும், செயல் புரிந்தாலும், நிழல் தொடர்ந்து செல்வதுபோல், இன்பம் அவனைத் தொடர்ந்து செல்லும்.



இந்த உலகத்தில் எக்காலத்தும் பகைமை பகைமையால் தணிவதில்லை; பகைமை அன்பினாலேயே தணியும். இதுவே பழைய அறநெறி.

* * *

மனமாசுகள் நீங்கி, எவன் எல்லாவிதமான ஒழுக்கத்திலும் நிலைத்து நிற்பதுடன், அடக்கமும் உண்மையும் உள்ளவனாயிருக்கிறானோ அவனே காஷாய ஆடை உடுப்பதற்கு உரியவன்.

* * *

கூரை செம்மையாக வேயப்படாத வீட்டினுள் மழைநீர் பாய்வதுபோல், நன்னெறிப் பயிற்சி இல்லாத மனத்தினுள் ஆசைகள் புகுந்துவிடுகின்றன.

* * *

கருத்துடைய ஒருவன் விழிப்படைந்து, நினைவு குன்றாமல், நற்கருமங்களைச் செய்துகொண்டு,

**மூலம்: தம்மபதம் (தமிழ் மொழிபெயர்ப்பு நூல்). பிரசுரித்தவர்: பாரி நிலையம், 59-பிராட்வே, சென்னை. விலை ரூ. 1-4-0.**

ஆலோசனையுடன் வினை புரிந்து கொண்டு, தன்னடக்கத்தோடு தர்மத்தை அநுசரித்து வாழ்ந்தால், அவன் புகழ் ஓங்கி வளரும்.

* * *

நிலையில்லாத சித்தம் உடையவரும், உண்மையான தர்மத்தை அறியாதவரும், மனத்திலே சாந்தி இராதவரும் பூர்ண ஞானத்தைப் பெற முடியாது.

* * *

உறக்கத்தில் ஆழ்ந்துள்ள கிராமத்தைப் பெரிய வெள்ளம் அடித்துக்கொண்டு போகிறது; அதுபோல் மனிதன், வாழ்க்கை இன்பங்களாகிய மலர்களைப் பறித்துக் கொண்டு அதிலே ஈடுபட்டிருக்கும் போதே, மரணம் அவனை அடித்துக்கொண்டு போய்விடுகிறது.

* * *

பேதை தன் மடமையை உணர்ந்தால், அந்த அளவுக்கு அவன் அறிவுள்ளவன். தன்னைப் பண்டிதனாக எண்ணிக்கொள்ளும் பேதை முழு மூடனே ஆவான்.

வானத்தில் பறக்கும் பறவைகளின் சுவடுகளை நாம் காண முடியாது; அதுபோல், சேமித்து வைத்த செல்வங்கள் இல்லாமல், அறிவுக்குப் பொருத்தமான ஆகாரம் அருந்தி, பந்தங்களற்ற பரிபூர்ண விடுதலையான நிர்வாணம் ஒன்றையே லட்சியமாய்க் கொண்டவர்களுடைய வழியைப் புரிந்துகொள்ளுவதும் அரிதாகும்.

* * *

கையில் புண் இல்லாதவன் விஷத்தைக் கையால் தொடலாம்; புண் இல்லாதவனை விஷம் பாதிப்பதில்லை. அதே மாதிரி தீய காரியத்தைச் செய்யாதவனைப் பாவம் பாதிக்காது.

* * *

மந்திரத்தின் குறை பாராயணம் செய்யாமை; வீட்டின் குறை பழுது பாராமை; அழகின் குறை சிரத்தையின்மை; காவலாளியின் குறை கவனக் குறைவு.

## முடியாது! முடியாது!!

ஸர் மால்கோம் ஸார்ஜண்ட் என்பவர் பிரபல பிரிட்டிஷ் சங்கீத வித்துவான்; ஆர்க்கிஸ்ட்ரா கண்டக்டர். ஒரு முறை மேடையில் பெரிய கரகோஷம் வாங்கிவிட்டு உள்ளே சென்றார். அவருடைய வேலையாள் வந்து, "வெளியே சிலர் உங்களிடம் கையெழுத்து (ஆட்டொகிராஃப்) வாங்கக் காத்திருக்கிறார்கள்" என்றான்.

"முடியாது! முடியாது" என்றார் வித்துவான்.

"அப்படிச் சொல்லப்படாது" என்று வேலையாள் கெஞ்சினான்.

"சரி. இந்தத் தடவை இருபது கையெழுத்துக்குமேல் போட மாட்டேன்; இருபதே இருபதுதான்" என்றார் அவர்.

"மூன்றே மூன்று பேர்தான் காத்திருக்கிறார்கள்" என்று பதிலளித்தான் வேலையாள்.

—லியனார்டு லயான்ஸ்

# இதைப் படித்ததுண்டோ?

**'பிரஸ்நோட்'**

★ இன்றைய மோட்டார்களில் சுமார் 9 பவுண்டுக்கு அதிக மான பிளாஸ்டிக் பகுதிகள் உண்டு.

★ கொய்னுவை மனிதன் கண்டுபிடித்தது தற்செயலாக நடந்த ஒரு சம்பவம். பல வருஷங்களுக்கு முன்பு, கொலம்பியாவைச் சேர்ந்த போகோட்டா என்ற இடத்தில் சிங்கோனு மரம் ஒன்று சிறு ஊற்று ஒன்றில் விழுந்து, தண்ணீரைக் கசப்பாக்கியது. மலேரியாக் காய்ச்சல் கண்ட ஒருவன் நடக்க வலுவற்றதால், நல்ல நீரைத் தேடிப் போக முடியவில்லை; இந்தக் கசப்பு நீரைப் பருகிக் குணம் அடைந்தான்.

★ முட்டைக்கோஸ் ரசத்தால் குடல் புண்ணைச் சுகப் படுத்தலாமென்று அமெரிக்க டாக்டர் ஒருவர் கூறுகிருர்.

★ பூரண வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கு வைட்டமின் பி-12 நல்லதாம்.

★ பிரேஸில் வைரக்கல்லையே பலவிதமான கருவிகளில் பெரும்பாலும் உபயோகப்படுத்துகிருர்கள்.

★ பசியைச் சீக்கிரம் தணிப்பதற்காகப் பெரிய ரொட்டி ஒன்றைச் சுவைத்துக்கொண்டு வீதியில் போனுன் இளைஞன் பெஞ்சமின் பிராங்கிளின். டெபோரா என்னும் சிறு பெண் இதைப் பார்த்து இடி இடியென்று சிரித்தாள். ஏழு வருஷத்துக்குப் பின்பு அவளையே பெஞ்சமின் மனைவி யாகக் கொண்டார்.

★ உலகத்தில் 100 பேரில் 60 பேருக்கு எழுதப் படிக்கத் தெரியாது.

★ நீராவியின் சக்தியைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட் என்று அறிவோம். ஆனுல் கிறிஸ்து பிறப்பதற்கு 100 வருஷங்களுக்கு முன்புகூட நீராவியின் சக்தியை அநேகம் பேர் அறிந்திருந்ததாக, கிரேக்க நாட்டு ஹீரோ எழுதி யிருக்கிருர்.

★ உங்கள் கைக் கடிகாரம் ஒரு வருஷத்தில் சுமார் 15 கோடியே 80லட்சம் தடவை 'டிக், டிக்' என்று அடிக்கிறது.

★ டாக்டர் சாமுவேல் ஜான்ஸன் என்ற பிரபல ஆசிரியரின் மனைவிக்கு அவரைவிட இரண்டு மடங்கு அதிகமான வயது.

★ டாக்டர் ராஜேந்திரப் பிரசாத், ஒரு ஹைக்கோர்ட் ஜட்ஜி மகனுக்கு 'டுவிஷன்' சொல்லித் தந்த ஊதியத்தைக் கொண்டே காலேஜுக்குச் சம்பளம் கொடுத்தாராம்.

(காப்பிரைட்)

# என்னைக் கேளுங்கள்


காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

பி. எஸ். நரன், உதகமண்டலம்:

கேள்வி: (விடையிலேயே சுருக்கியிருக்கிறேன்.)

விடை: நரன் அவருடைய அநுபவங்களை எழுதியிருக்கிறார். விசித்திரமான அநுபவங்கள்! அபாயத்திலேயே கொண்டு போய் விட்டவை. 'டெட்டால்' மருந்தை விஷமற்றது என்று எண்ணி உட்கொண்டார்; மூக்கில் விட்டுக் கொண்டார்; சிகரெட்டை அதில் நனைத்துப் புகை பிடித்தார். பெரிய ஆராய்ச்சியாளர் இவர். 'எல்லொ ஃபீவர்' என்னும் கொடிய ஜுரம் கொசுக் கடித்து உண்டாகிறது என்று நிரூபிக்க, தம்மையே கொசுக் கடிக்கச் செய்து அந்தக் கொடிய ஜுரம் தோன்றி இறந்து போன வீரர்களோடு நண்பர் நரனையும் சேர்க்கலாம். வாசகர்கள் அநேகருக்கு 'டெட்டால்' விஷப் பொருள் என்று தெரியாது. அது விஷந்தான் என்று நரன் நிரூபித்து விட்டார். மூக்கிலிருந்து ரத்தம் சுரந்தது; வயிற்றில் வலி ஏற்பட்டு, மலத்தோடு ரத்தம் கழிந்தது; இருமலும் தோன்றியது.




குளிக்கும் நீரிலும் கொப்புளிக்கும் நீரிலும் 'டெட்டா'லைச் சில பேர் விட்டுக்கொள்கிறார்கள். இதுவும் கேடு விளைக்கக் கூடிய செயலே. 'டெட்டால்' புண்களை ஆற்ற உபயோகமானது; 'ஆபரேஷன்' செய்வதற்கு முன் கைகளைத் தூய்மை செய்துகொள்ள நல்லது. ஆனால்

மேலே சொல்லிய வகையில் பயன் படுத்தினால் அபாயம் நேரும்.

**எஸ். வேங்கடேசுவரன், கரூர்.**

கே. 1: வாழைப்பூக் கறி நீரிழிவு வியாதிக்கு நல்லதாமே?

வி: வேறு சாதாரணக் கறி வகைகளைவிட வாழைப் பூவில் சர்க்கரையாக மாறும் பொருள்கள் மிகவும் குறைவு. அதனாலேயே இதை நீரிழிவு நோய்க்கு நல்லதென்று சொல்லுகிறார்களென்று நினைக்கிறேன்.

கே. 2: இளம்பிள்ளை வாதம், 'ப்ளூரஸி' என்னும் நோய்கள் எப்படி உண்டாகின்றன?

வி: இந்த இரண்டு நோய்களையும் சேர்த்துக் கேட்டதால், இந்த நோய்களின் குறிகளைத் தெரிந்துதான் கேட்டிருக்கிறாரோ, தெரியாமலேயோ என்று சந்தேகிக்க நேர்கிறது. இளம்பிள்ளை வாதம், திடீரென்று ஜுரம் தோன்றித் தசைகளைத் தளரச் செய்கிற ஒரு வகை நோய். அணுதரிசினி (மைக்ராஸ்கோப்) கருவியின் உதவியாலும் காண இயலாத ஒரு வகைக் கிருமியே இதற்குக் காரணம். சிறு குழந்தைகளையே தாக்குகிற நோய் இது.

'ஃப்ளூரசி' நோய் ஒருவகைக் கப ஜுரம். இது சுவாச கோசங்களுடைய போர்வையைத் தாக்குகிறது. இதைத் தோற்றுவிக்கும் கிருமிகள் 'பாக்டீரியா' வகுப்பைச் சேர்ந்தவை. இந்த நோய் வெகுவாக முதியோரையே தாக்குகிறது. க்ஷயரோகம் சில வேளை 'ஃப்ளூரசி'யாக ஆரம்பிக்கலாம்.

கே. 3: அடிக்கடி முகக்ஷவரம் செய்துகொள்வதால் தேகத்துக்குத் தீங்கு நேருமா?

வி: முகக்ஷவரம் செய்துகொள்வதால் சருமத்தில் எவ்வளவு



காயம் ஏற்படும் என்று ஆராய்ந்திருக்கிறார்கள். இதைத் தவிர வேறு விதத்தில் உடம்புக்குத் தீங்கு ஏற்படுவதாய்த் தெரியவில்லை.

கே. 4: கரும்பு சாப்பிட்டவுடன் தண்ணீர் குடித்தால் வாய் புண்ணாவதற்கும், நெல்லிக்காய் சாப்பிட்டவுடன் நீர் அருந்தினால் ஜலதோஷம் பிடிப்பதற்கும் காரணம் என்ன?

வி: கற்கண்டுக் கட்டியைத் தின்றவுடன் வாய்ப்புண் ஏற்படும். கற்கண்டு கரையும்போது நீரை வாய் ஜவ்விலிருந்து இழுத்துக் கொள்ளுகிறது. அதனால் புண் உண்டாகும். கரும்பு சாப்பிட்டுப் புண் உண்டாவதும் இந்த மாதிரி காரணத்தாலேயே. தண்ணீரைக் குடிக்கும்போது, புண் உண்டாகியிருப்பதை நாம் உணர்வோம். நெல்லிக்காய் சாப்பிட்ட பிறகு தண்ணீர் அருந்தினால் ஜலதோஷம் பிடிக்குமென்று நான் கேட்டதில்லை.

**மாணிக்கம், மார்க்கம்பட்டி.**

கே: என்னுடைய நான்கு வயதுப் பையனின் கண்கள் சிறிது மஞ்

சள் கலந்த நிறமாக இருக்கின்றன. அடிக்கடி கண்ணில் தண்ணீர் வடிகிறது. இதை நிவர்த்திக்க என்ன செய்வது?

வி: கண்ணில் நீர் கசிந்து விழியைத் தூய்மையாக வைத்துக் கொள்கிறது. கசியும் நீர் மூக்குக்குள்ளே செல்ல ஒரு துவாரம் கண்ணிலிருந்து மூக்குக்குச் செல்லுகிறது. இது தடைப்பட்டால் கண்ணீர் ததும்பி வழிந்துகொண்டிருக்கும். கண் வைத்திய நிபுணரிடம் சென்று பரிகாரம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

**எஸ். நரசிம்மன், கோல்லம்.**

கே. 1: யோகாசனங்களைக் குறித்துத் தங்கள் கருத்து என்ன? பதினெட்டு வயது வாலிபர்கள் யோகாசனப் பயிற்சி செய்யலாமா?

வி: 'யோகாசனங்கள் பொதுவாக உடலுக்கு நன்மை அளிக்கும்; ஆரோக்கியத்தைத் தரும்' என்பது என் அபிப்பிராயம். வாலிபர்கள் மட்டும் அல்ல; முதியவர்களுங் கூடப் பயிற்சி செய்யலாம். ஆனல் தக்க குருவிடம் கற்றுக்கொள்வது அவசியம்.

கே. 2: செயற்கை வைட்டமின்கள், இயற்கையாகக் கிடைக்கும் வைட்டமின்களைப் போல் பலன் தருமா? நோயுற்றவர்கள் உடல் புஷ்டிக்காகச் செயற்கை வைட்டமின்களை உட்கொள்ளலாமா?

வி: வைட்டமின் அடங்கிய இயற்கைப் பொருள்கள் செயற்கை வைட்டமின்களைவிட மேலானவை. ஆனல் நோயுற்றவருக்கு வேண்டிய அளவு வைட்டமின் ஜீரணிக்கும்படி கொடுக்க, செயற்கை வைட்டமின்கள் வெகு உபயோகமானவை.




கே. 3: மாமிச உணவு மனிதனுக்கு அவசியந்தானு? அல்லது அவை 'ரத்த அழுத்தம்' (ப்ளட் ப்ரஷர்) முதலிய நோய்களுக்குக் காரணமாகுமா?

வி: மாமிச உணவு, வேறு உணவுகளைக் காட்டிலும் மிகச் சிறு அளவு இருந்தால் போதும். அதில்லாமல் பால் வகைகளைக் கொண்டு அதே போஷாக்கைப் பெற இயலும். 'ரத்த அழுத்தம்' அதனுல் தோன்ருது.

**ஹைதராபாதுப் பெண் ஒருத்தி:**

கே: (விடையிலேயே சுருக்கியிருக்கிறேன்.)

வி: கல்யாணமாகாத ஒரு பெண்ணுக்கு அகாரணமாக ஸ்தனத்திலிருந்து பால் சுரந்தால் அதை ஒரு வியாதியாகவே கருத வேண்டும். வைத்திய நிபுணரை நேராகக் கேட்டுப் பரிகாரம் தேடிக்கொள்ளலாம். 'பிட்டியூட்டரி' என்னும் அகச்சுரப்புக் கிரந்தியில் கோளாறு ஏற்பட்டிருப்பது இதற்குக் காரணமாயிருக்கலாம்.

# வெளி ஆதிக்கத் திட்டுக்கள்

★

**பெரும் பூதம் போயிற்று; குட்டிச் சாத்தான்கள் போக மாட்டோம் என்கின்றன. வலிமை வாய்ந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் மரியாதையாய் வெளியேறியது; இங்கும் சரி, சொந்த நாட்டிலும் சரி, சாமான்யமான பிரான்ஸும் போர்ச்சுகலும் தங்களிடம் உள்ள சின்னஞ்சிறு திட்டுக்களை விட்டு அகல மறுக்கின்றன. அந்தத் திட்டுக்கள்பற்றிய விவரங்களை இங்கே காணலாம்.**

## பிரெஞ்சிந்தியா

ப்ரொஃபஸர் கே. ஸி. பீட்டர்

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் இவைதான் இன்னமும் பிரெஞ்சு ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கைகளாக இருந்து வருகின்றன. ஆனால், பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆட்சிமுறையோ வேறுவிதமாயிருக்கிறது.

1608-ஆம் ஆண்டில் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி அமைந்தது. தென்னிந்தியச் சிற்றரசர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளையெல்லாம் பிரெஞ்சுக்காரர் பயன்படுத்திக்கொண்டார்கள். அதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக்கொண்டார்கள்.

ஒரு சமயம் இங்கிலீஷ்காரரையே இந்தியாவை விட்டுப் பிரெஞ்சுக்காரர் விரட்டிவிடுவார்களோ என்ற நிலைகூட ஏற்பட்டது. அவ்வளவு தூரம் அவர்களின் அதிகாரம் வலுவடைந்திருந்தது. 1761-இல் நடந்த மூன்ருவது கர்நாடக யுத்தத்துக்கு முன்பு, டூப்ளே என்ற கவர்னரைத் திருப்பி அழைத்துக்கொண்டு விட்டார்கள். அப்படி மட்டும் செய்யாதிருந்தால், இந்தியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தையே அவர் ஸ்தாபித்திருப்பார். அவர் போனதால், யுத்தத்தில் பிரெஞ்சு சேனை அடியோடு தோற்றது.

17-ஆம் நூற்ருண்டில் இந்தியாவில் பிரெஞ்சு சாம்ராஜ்யத்தை முதலில் தாக்கியவர் டச்சுக்காரர்கள்தான். அப்புறம் இங்கிலீஷ்காரர்கள் வந்து, டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர் இருவருக்கும் மேல் தந்திரம் செய்து அவர்களைக் கவிழ்த்தார்கள்; வந்தவாசி என்ற இடத்தில் பிரெஞ்சுக்காரரை முற்றும் முறியடித்தார்கள்.

1673-இல் பிரான்ஸுக்கும் பிரிட்டனுக்கும் பாரிஸ் நகரில் ஓர் உடன்படிக்கை நடந்தது. ஐந்து சிறு மார்க்கட் ஸ்தலங்களை மட்டும் அது பிரெஞ்சுக்காரருக்கு அளித்தது. அவைகளுக்கே புதுச்

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 14-3-'54; 4-4-'54), கல்கத்தா.


சேரி, காரைக்கால், மாஹே, ஏனும், சந்திரநாகூர் என்று பெயர். முதல் நான்கும் சென்னை ராஜ்யத்தின் கடற்கரையில் இருக்கின்றன. சந்திரநாகூர் வங்காள ராஜ்யத்தில் இருக்கிறது. அதுமட்டும் சில வருஷங்களுக்கு முன்பே இந்தியாவோடு சேர்ந்துவிட்டது.

இன்னும் இந்தியாவுடன் சேராத நான்கு இடங்களின் மொத்தப் பரப்பு 200 சதுர மைல். ஜனத்தொகை 4 லட்சம். இந்த நான்கு இடத்து மக்களின் பொருளாதார வாழ்வும் இந்தியாவையே சார்ந்திருக்கிறது. ஆயினும் இந்தியாவுடன் சேர்ந்துவிட இந்த மக்கள் தொடங்கும் இயக்கத்தை யெல்லாம் நசுக்க அடக்கு முறையும் போலீஸ் தடியடியும் பிரயோகிக்கிறார்கள். பிரெஞ்சிந்திய நிர்வாகத்தை நடத்தும் கவர்னருக்குக் 'கமிஷனர் அவ் திரிபப்ளிக்' என்று பெயர். அவரை ஆறு அங்கத்தினர்களைக் கொண்ட பிரெஞ்சு கவர்ன்மெண்ட் கவுன்ஸில் நியமிக்கிறது.

பிரெஞ்சிந்தியாவின் தபால், ரெயில்வே, சுங்கம் இவைகளை யெல்லாம் நட்பு முறையிலே இந்தியாவே நடத்துகிறது. தவிர, பலவித ஒப்பந்தங்களின்படி வருஷம் ஒன்றுக்கு 12-லட்சம் ரூபாயைப் பிரெஞ்சிந்தியாவுக்கு இந்தியா கொடுக்கிறது. மேலும், நெல், கோதுமை, எண்ணெய், பெட்ரோல், பருப்பு வகைகள், மண்ணெண்ணெய் முதலிய பல பொருள்களை அதற்கு இந்தியாவே ஸப்ளை செய்கிறது. பிரெஞ்சிந்தியாவின் தொழிற்சாலை யந்திரங்களை இயக்கும் மின்சாரத்தை உதவுவதும் இந்தியாவே. பிரெஞ்சிந்தியாவில் செலாவணியாவது இந்திய நாணயமே.

இந்தியா 1947-ஆகஸ்டில் சுதந்தரம் அடைந்தது. அப்போது பிரிட்டனைப் பின்பற்றிப் பிரான்ஸும் போர்ச்சுகலும் இந்தியாவில் உள்ள தங்கள் திட்டுக்களைத் தாமாகவே விட்டுவிட்டுப் போகும் என்று பொதுவாக எல்லாரும் எண்ணினர்கள். பிரெஞ்சிந்தியாவின் வருங்கால அந்தஸ்தைப்பற்றி 1948 ஜூனில் பிரான்ஸும் இந்தியாவும் ஓர் ஒப்பந்தத்துக்கு வந்தன. சுதந்தரமான ஜனவாக்கு எடுத்து அதை முடிவு செய்வது என்று இரண்டு நாடுகளும் ஒப்புக்கொண்டன. சுதந்தரத் தேர்தலின் மூலம் அமைந்த முனிஸிபல் கவுன்ஸில்களே அந்த ஜனவாக்கு ஸம்பந்தமான தேதிகளை நிர்ணயித்து விதி முறைகளை வகுக்கவேண்டும் என்பது ஒப்பந்தத்தில் கண்ட நிபந்தனை.

சமாதான முறைகளிலேயே பற்றுடைய இந்தியா, பிரெஞ்சுக்காரரின் அந்தரங்க சுத்தியை நம்பியே இந்த ஒப்பந்தத்தைச் செய்துகொண்டது. ஆனால், காலங்கடத்த ஒரு தந்திரமாகவே பிரெஞ்சுக்காரர் இந்த ஒப்பந்தத்துக்கு வந்திருக்கவேண்டும் என்று இப்போது புலனாகிறது. ஒப்பந்தப்படி முதல் முதலாகச் சந்திரநாகூரில் ஜனவாக்கு எடுத்ததில், 114-க்கு எதிரே 7,473 வோட்டுகளின் மூலம் அந்த இடத்து மக்கள் 1949 ஜூன் 19-ஆம் தேதி இந்தியாவோடு சேர்ந்துவிட்டார்கள். சிறிது காலம் தாமதித்திருந்தால், பிரெஞ்சுக்காரரின் கையாட்கள் அங்கேயும் அட்டகாசம் செய்திருப்பார்கள்; மற்ற இடங்களைப் போலவே




அதையும் இதுவரைக்கும் இந்தியாவோடு சேரவொட்டாமல் தடுத்திருப்பார்கள்.

1947-இல் பிரெஞ்சு இந்திய சர்க்காரின் வருமானம் 40 லட்சம் ரூபாய். இப்போதோ சுமார் 90 லட்சம் ரூபாயாக அது உயர்ந்திருக்கிறது. பிரான்ஸின் பிடியை வலுப்படுத்திக்கொள்வதற்காக அதிகப்படியான செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக நிலவரியை ஒன்றுக்கு இரண்டாக உயர்த்தி இருக்கிறார்கள். தானியப் போக்குவரத்து மூட்டை ஒன்றுக்கு இரண்டு ரூபாயும் வண்டி ஒன்றுக்குப் பன்னிரண்டு ரூபாயும் வரி வசூலிக்கிறார்கள். புதுப் புது வரிகளின் மூலம் விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து வருகிறார்கள். பெரிய தொழிற்சாலைகளில் உள்ள சர்க்கார் ஊழியர்களை நூற்றுக்குப்

பத்து விகிதம் குறைப்பதில் ஒரு கமிஷன் இப்போது ஈடுபட்டிருக்கிறது. பிரெஞ்சிந்திய சர்க்காரின் பட்ஜெட்டில் 30 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. இதை ஈடு கட்டுவதற்காகப் பிரான்ஸ் சர்க்கார் இருபது லட்சம் ரூபாய் கடனாகத் தரத் தீர்மானித்திருக்கிறது. ஆனால் பிரான்ஸ் சர்க்கார் பட்ஜெட்டிலேயே எட்டுக் கோடி பிராங்கு துண்டு விழுந்திருக்கிறது. இதை ஈடுகட்ட அமெரிக்காவை அது வேண்டிக்கொண்டிருக்கிறது.

புதுச்சேரியில் 9,000 தொழிலாளர் வேலை செய்த 3 துணி மில்களை மூடிவிட்டார்கள். எங்கே பார்த்தாலும் தொழிற்சங்க உரிமைகளை நசுக்குகிறார்கள். வேலைச் சுமையை அதிகரித்திருக்கிறார்கள். 8,000 கைநெசவுக் குடும்பங்களுக்குச் சர்க்கார் உதவி செய்ய மறுத்ததால் அவை தவிக்கின்றன. இத்தனைக்கும் காரணம் இந்தியாவுடன் பிரெஞ்சிந்தியா பொருளாதார ரீதியில் இசைந்து உழைக்காததுதான்.

1950-முதல் பிரெஞ்சிந்தியாவுக்கு அமெரிக்கா கடன் கொடுத்து வருகிறது. சுமார் 36 கோடி டாலர் வரைக்கும் இப்படிக் கொடுத்திருக்கிறது. இதனால் டாலர் வழங்கும் நாடுகளின் சாமான்களைப் பிரெஞ்சிந்திய வியாபாரிகள் வாங்கி, இந்தியாவுக்குள் கள்ளத்தனமாக நுழைக்கிறார்கள். இந்த உபத்திரவத்தைத் தடுக்கும் வேலையில் இந்திய சர்க்கார் அவதிப்பட்டு வருகிறார்கள். ஏதோ ரகஸ்ய ஸ்தாபனங்கள் இருந்துகொண்டே இப்படிக் கள்ள வியாபாரம் நடத்துவதாக நம்பத் தகுந்த காரணங்கள் இருக்கின்றன.

பிரெஞ்சிந்தியாவின் விடுதலைக்காக 1947-முதல் தொழிலாளர்கள் போராடி வருகிறார்கள். 1950 ஜூனில் கொடிய அடக்குமுறை தொடங்கியது. விடுதலை இயக்கத் தலைவர் 150 பேரின் வீடுகளையும் 35 பள்ளிக்கூடங்கள், வாசகசாலைகள், தொழிலாளர் சங்கக் கட்டிடங்கள் முதலியவைகளையும் சர்க்காரின் கையாட்களான காலிகள் கொளுத்தினார்கள். ராணுவச் சட்ட அமல் தொடங்கியது. 1,600 தலைவர்கள் சிறைப்பட்டார்கள். 12,000 குடும்பங்கள் பீதியடைந்து இந்திய யூனியனில் வந்து அடைக்கலம் புகுந்தன.

இந்த நிலைமையில், நியாயமான பாரபட்சமற்ற முறையில் ஜன வாக்கு எடுப்பது சாத்தியமல்ல. இன்னுமோர் அநியாயம் நடப்பதாகவும் சொல்லுகிறார்கள். இந்தோ-சீனா யுத்தத்துக்கு, பிரெஞ்சிந்தியத் திட்டுக்களையே மூலதளங்களாகப் பயன்படுத்தி வருகிறார்களாம். மேல்நாட்டு வல்லரசுகளும் இந்தத் திட்டுக்கள் மீது சிரத்தைகொண்டிருக்கின்றனவாம். இவை மிகச் சிறு திட்டுக்களாக இருப்பதால், இவைகளைச் சுலபமாக அடக்கியாள முடிகிறது. உலகெங்கும் யுத்த தந்திர ஏற்பாடுகளைச் செய்து வைக்க இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா மூன்றும் வகுத்திருக்கும் ஏற்பாட்டில் இந்தப் பிரெஞ்சிந்தியத் திட்டுக்களும் முக்கியத்துவம் பெற்றிருக்கின்றனவோ என்றுதான் தோன்றுகிறது.

## கோவா

டாக்டர் எச். எல். ஸக்ஸேனு

கோவா பழமையான ஒரு நகரம். முன்காலத்தில் அதை ஹிந்து ராஜாக்கள் ஆண்டார்கள். சில புராணங்களிலும் சாஸனங்களிலும் கோவ், கோவாபுரி, கோமந்த் என்று அதன் பெயர்கள் காணப்படுகின்றன. கிறிஸ்துவுக்குப் பிந்திய இரண்டாம் நூற்ருண்டிலிருந்து 1312-வரையில் கடம்ப வம்சத்து அரசர்கள் அதை ஆண்டு வந்தார்கள். அதற்குப் பிறகு வட இந்தியாவிலிருந்து படையெடுத்த முஸ்லிம்கள் அதைக் கைப்பற்றிஞர்கள்.

பல வருஷம் அவர்களிடம் இருந்துவிட்டு, 1370-இல் விஜய நகர ஹிந்து ராஜ்யத்தில் அது சேர்ந்தது. 1482-க்குப் பிறகு பாமினி ராஜ்யம் சிதைந்ததால், பிஜாபுர் சுல்தான் யூஸுப் அடில்ஷா என்பவர் கோவாவைப் பிடித்துக்கொண்டார்.

இந்தியாவிலிருந்து மெக்காவுக்குச் செல்லும் ஹஜ் யாத்திரிகர்கள் அந்தக் காலத்தில் கோவாவில்தான் கப்பலேறுவது வழக்கம். தவிர, மேலக்கடற்கரையில் கோவா, கோழிக்கோடு இரண்டுந்தான் அந்த நாளில் சிறந்த வியாபார ஸ்தலங்களாக இருந்தன. இவற்றுடன் போட்டியிட வேறு எதுவுமே இல்லை. முக்கியமாக ஹோர்முஸ் குதிரைகளை இந்த இரண்டிலுந்தான் கொண்டு வந்து இறக்குமதி செய்வார்கள். மத்திய கால அராபிய பூகோள சாஸ்திரிகள் கோவாவை ஸிந்தாபுர் அல்லது ஸாந்தபுர் என்று குறிப்பிட்டார்கள். போர்ச்சுகீஸியர் இதைக் கோவா வேல்ஹா என்று குறிப்பிட்டார்கள்.

மத்திய காலத்திலிருந்தே ஐரோப்பிய மக்களுக்கு இந்தியாவைப்பற்றி மிகுந்த பிரமை. ஆயினும், போர்ச்சுகல் நாட்டைச் சேர்ந்த வாஸ்கோ ட காமா என்பவர்தான் முதல் முதலாக 'குட் ஹோப்' என்ற நன்னம்பிக்கை முனையைச் சுற்றி இந்தியாவுக்குக் கடல்மார்க்கம் கண்டு பிடித்தார். கிறிஸ்துவுக்குப் பின் 1498 மே 20-இல் அவர் கோழிக்கோட்டில் வந்து இறங்கினர்.

தாம் இந்தியாவைக் கண்டுபிடித்ததன் ஞாபகச் சின்னமாகக் கோழிக்கோட்டில் சலவைக்கல் கம்பம் ஒன்றை வாஸ்கோ ட காமா நட்டார். போர்ச்சுகீஸியரின் தொழிற்சாலை ஒன்றையும் அங்கே அமைக்க அவர் விரும்பினர். ஆனல், முஸ்லிம் வியாபாரிகள் அதை எதிர்த்ததால், அவருக்கு அநுமதி கிடைக்கவில்லை. சிறிது காலத்துக்கெல்லாம் மறுபடியும் 13 போர்ச்சுகல் கப்பல்களுடன் பெட்ரோ அல்வாரெஸ் கப்ரால் என்பவர் வந்து இறங்கினர். உடனே தங்கள் தொழிற்சாலை ஒன்றைக் கட்டிவிட்டு, கப்ரால் திரும்பிச் சென்ருர். கோழிக்கோடு மக்கள் இதைக் கண்டு ஆத்திர மூண்டார்கள். பின் தங்கிய போர்ச்சுகீஸியரை யெல்லாம் கொன்றுவிட்டார்கள். இதற்குப் பழி வாங்குவதற்காக, பத்துப் படைக் கப்பல்களுடன் வாஸ்கோ ட காமா திரும்பவும் 1502-இல் வந்து சேர்ந்தார். வந்தவுடனே

கோழிக்கோடு நகரத்தின்மீது குண்டுகளைச் சொரிந்தார். மக்களைக் குரூரமாய் வதைத்தார். பிறகு கொச்சிக்குச் சென்ருர். வழியெல்லாம் கடலிலே எதிர்ப்பட்ட அனைத்தையும் சர்வநாசம் செய்தார். தங்களுக்கு அதிகச் சலுகை தரும் வியாபார ஒப்பந்தங்களைக் கொச்சி நகரத்தோடும் வேறு பட்டணங்களோடும் செய்து கொண்டு, கப்பல்கள் நிறையப் பண்டங்களை எடுத்துக்கொண்டு, 1503-இல் லிஸ்பன் நகருக்குத் திரும்பிச் சென்ருர். அவருக்கு அங்கே பிரமாதமான வரவேற்பு நடந்தது.

வாஸ்கோ ட காமா போகும் போது, தமக்குப் பின்னே அல்ஃபான்ஸோ டி அல்புகெர்க் என்ற மற்றொருவரை இந்தியாவின் கவர்னராக வைத்துவிட்டுப் போனுர். கோழிக்கோட்டில் அவர் 1503-இல் ஒரு கோட்டை கட்டினுர். 1510-இல் அந்த நகரத்தைச் சூறையாடினுர். தங்களுக்கு இடங்கொடுத்து ஆதரித்த ஜாமொரின் அரண்மனையையே சுட்டுக்கொளுத்தினுர்.

பிறகு 1510 பிப்ரவரி 10-ஆம் தேதி கோவா நகரை அல்புகெர்க் தாக்கினுர். அதுவரையில் துப்பாக்கி முதலிய ஆயுதங்களை இந்தியர் கண்டதில்லை. ஆகவே, வெற்றி வீரராகக் கோவா நகருக்குள் அல்புகெர்க் புகுந்தார். இதன் பின்பு, இந்தியாவிலும் இதற்குக் கிழக்கேயும் போர்ச்சுகீஸிய சாம்ராஜ்யம் ஒன்றைப் படைக்கும் வேலையில் அல்புகெர்க் ஈடுபட்டார். கோவா அப்போது மிகச் சிறந்த வியாபார ஸ்தலமாயிருந்தது. மலையாளக் கடற்கரையில் இந்திய அரசர்களை ஒருவருடன் ஒருவர் சேர வொட்டாமல் அல்புகெர்க் சூழ்ச்சிகள் புரிந்தார். கோழிக்கோடு ஜாமொரினுக்குட்பட்ட ராஜ்யங்களெல்லாம் ஐக்கியப்பட்டு அவருக்கு அடங்கியிராதபடி செய்தார். வெகு சீக்கிரத்திலே இந்து மகா சமுத்திரத்தில் ஜப்பான் வரைக்குமுள்ள பல தீவுகளில் போர்ச்சுகலின் வெற்றிக் கொடியை நாட்டிவிட்டார். போர்ச்சுகீஸியருக்கு இந்த வேலையில் கிறிஸ்துவ மிஷனரிகள் உதவினுர்கள்.

1559-இல் டாமன் என்ற இடத்தைப் போர்ச்சுகீஸியர் வென்ருர்கள். கடற்கொள்ளை ஒன்றுக்கு நஷ்ட ஈடாக 1780-இல் நகர் ஹாவேலி என்ற இடத்தைப் போர்ச்சுகீஸியருக்கு மராட்டியர் கொடுத்தார்கள்.

1535-இல் குஜராத் சுல்தான் பகதூர் ஷா ஒரு சங்கடத்தில் சிக்கித் தவித்து அவதிப்பட்டுக் கொண்டிருந்தார். ஹுமாயூன் என்ற மொகலாய சக்கரவர்த்தியின் படைகள் வந்து அவரை நெருக்கிக்கொண்டிருந்தன. இந்த நிர்ப்பந்தம் காரணமாகப் போர்ச்சுகீஸியருடன் சுல்தான் சமரஸத்துக்கு வந்து, ஸால்ஸெட், பாஸீன் ஆகிய இடங்களையும், எலிஃபெண்டா, ட்ராம்பே, கரஞ்ஜா ஆகிய பம்பாய்த் தீவுகளையும் போர்ச்சுகீஸியருக்குத் தந்தார். டையு என்ற தீவில் கோட்டை கட்டும் உரிமைகளையும் அவர்களுக்கு அளித்தார்.

17-ஆம் நூற்ருண்டில் டச்சுக்காரரும் பிரிட்டிஷ்காரரும் இந்தியாவுக்கு வருகிற வரையில், போர்ச்சுகீஸியரின் ஆதிக்கம் பரவிக்கொண்டே வந்தது. ஓர்முஸ், டையு, டாமன், கோவா, கொச்சி, மங்களூர், நாகப்பட்

டினம், ஸிலோன் இவையெல்லாம் அவர்கள் வசமாயின. போர்ச்சுகீஸியர் செல்வத்தில் கொழிக்கத் தொடங்கியதும், அவர்களுடைய கீழ்நாட்டுச் சாம்ராஜ்யம் நலியலாயிற்று. 1545-இல் இதைப் பற்றி அல்ஃபான்ஸோ டி ஸௌஸா என்பவரே இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்: "போர்ச்சுகீஸியர் ஒரு கையில் வாளும் மறு கையில் சிலுவையும் தாங்கி இந்தியாவுக்குள் நுழைந்தார்கள். அங்கே ஏராளமான தங்கம் இருக்கக் கண்டு சிலுவையைக் கீழே போட்டுவிட்டு, பைகளை நிறைக்கத் தொடங்கினர்கள். அவைகளை ஒரு கை கொண்டு தூக்க முடியாது போகவே, வாளையும் கீழே போட்டுவிட்டார்கள். இவர்களுக்குப் பின்னே வந்தவர்கள், இவர்களை இந்த நிலையில் கண்டதும், வெகு சீக்கிரமே வென்றுவிட்டார்கள்."

கிழக்குக் கடல் தீவுகளிலிருந்தெல்லாம் இவர்களை டச்சுக்காரர் விரட்டிவிட்டார்கள்; இவர்களுடைய கப்பல்களை எரித்துக் காலனிகளைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

1622-இல் பிரிட்டிஷ்காரரும் பாரசீக ஷாவும் சேர்ந்துகொண்டு, போர்ச்சுகீஸியரின் ஓர்முஸ் கடல் படைத்தளத்தைப் பிடுங்கிக் கொண்டார்கள். 1641-இல் மலாக்கா, 1656-இல் சிலோன், 1661-இல் கொல்லம், 1662-இல் கொச்சி, கண்ணனூர் இப்படிப் பல இடங்களையும் போர்ச்சுகீஸியரிடமிருந்து டச்சுக்காரர் பிடித்துக் கொண்டார்கள். மராட்டியர் ராஜ்யம் எழுந்து வளர்ந்தபோது, போர்ச்சுகீஸியரின் சாம்ராஜ்யம் பின்னும் நலிந்தது.

1633-இல் பார்டெஸ், ஸால்ஸெட்டி ஆகிய இடங்களை ஸம்பாஜி படையெடுத்தார். கோவாவை அநேகமாக அவர் கைப்பற்றி விடுவார்போல் இருந்தது. இந்த நிலையில் தம் சொந்த ராஜ்யத்துக்குள்ளேயே ஔரங்கசீப்பின் மொகலாயப்படைகள் புகுந்ததால், ஸம்பாஜி திரும்பிவிட நேர்ந்தது. ஆனால், இதற்குப் போர்த்துகீஸியர் ஓர் அற்புதமே காரணம் என்கிறார்கள். அப்போது இனித் தப்ப முடியாது என்று போர்ச்சுகீஸிய கவர்னர் ஆல்வார் எண்ணிவிட்டார். ஸெயிண்ட் ஸேவியர் என்ற மகானின் கல்லறைக்குப் போனார். நீண்ட பிராயச்சித்தம் செய்து கொண்டார். விளக்குகள் ஏற்றினார். மகானின் கல்லறையைத் திறந்தார். ராஜப் பிரதிநிதிக்குரிய தம் செங்கோலையும் நியமன உத்தரவையும் சமர்ப்பித்தார். ராஜ்யத்தை மகானின் பாதுகாப்பில் ஒப்படைப்பதாகப் போர்ச்சுகல் அரசரின் பெயரால் தம் கைப்பட ஒரு பத்திரம் எழுதி அதையும் சமர்ப்பித்தார். பிறகு வெளியேறிக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கடவுளைப் பிரார்த்தித்தார். இதனால் அந்த மகானே கோவாவைக் காப்பாற்றினாராம். இதற்காக இன்றுவரைக்கும் கோவா கவர்னர்களிடம் ஒரு வழக்கம் இருந்து வருகிறது. போகிற கவர்னர் தம் செங்கோலை அந்த மகானின் கல்லறைமீது வைப்பார். வருகிற கவர்னர் அதை அங்கிருந்துதான் எடுத்துக்கொள்வார்.

ஆனால், 1739-இல் ஸால்ஸெட்டி, பாஸீன் இரண்டும் சேர்ந்த வட பகுதி மாகாணம் முழுவதையும் மராட்டிய தளபதி சிம்னாஜி அப்பா பிடித்துத் தம்

ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். டையூ, டாமன் இரண்டும் மாத்திரம் போர்ச்சுகீஸியரிடம் மிஞ்சின.

இங்கேயும் பின்னால் 1852, 1871, 1895, 1912 இந்த வருஷங்களில் மக்கள் புரட்சி செய்திருக்கிறார்கள். 1912-இல் புரட்சி செய்தவர்களை மிகக் கொடுமை செய்து அடக்கினார்கள். வாலிபத் தலைவர் பலரை ஆப்பிரிக்கக் காலனிகளுக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கேயே அவர்கள் இறந்து போனார்கள்.

1946-இல் சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றை ராம் மனோஹர் லோஹியா தொடங்கினார். கடுமையான அடக்குமுறையால் அது பலனற்றது. ராணுவக் கோர்ட்டில் விசாரணை செய்து, பலரை நாடு கடத்தினார்கள்.

கோவாவில் போர்ச்சுகீஸியர் ஆட்சி முடிவடைந்து, இந்தியாவோடு சேரவேண்டுமென்று கோவா தேசியக் காங்கிரஸ் இன்னமும் கிளர்ச்சி செய்துகொண்டேயிருக்கிறது. லிஸ்பன் நகரில் உள்ள நேஷனல் அஸெம்பிளியில் கோவா பிரதிநிதிகள், கோவாவுக்குச் சுய ஆட்சி வழங்க வேண்டும் என்று வாதித்து வருகிறார்கள்.

இந்தப் போர்ச்சுகீஸியத் திட்டுக்களை இந்திய யூனியனுக்கு மாற்றிவிடும்படி லிஸ்பனில் உள்ள போர்ச்சுகீஸிய சர்க்காரை 1950-இல் இந்திய சர்க்கார் கேட்டுக் கொண்டார்கள். ஜனவாக்கு எடுத்து அதன்படியே மாற்றலாம் என்றும் சொன்னார்கள். அப்படி மாற்றிக் கொடுக்கவே முடியாது என்று போர்ச்சுகீஸிய சர்க்கார் பதிலளித்துவிட்டார்கள்.

இன்று போர்ச்சுகீஸிய ஆதிக்கத்தில் உள்ள இந்தியத் திட்டுக்கள் கோவா, பாஞ்சிம், அட்கேடிவா, ஸாவோ ஜோர்கே, மார்லிகோஸ், டாடாரா, நகர் ஹவேலி, டாமன், டையூ, கொகோலா, ஸிம்பார் ஆகிய இடங்கள்தான். காலனியின் மொத்த விஸ்தீர்ணம் 1537 சதுர மைல். ஜனத்தொகை 1941 ஸென்ஸஸ்படி 6,24,177. மாண்டவி, ஜுவாரி என்ற இரண்டு நதிகளுந்தான் கோவாவில் மிகப் பெரியவை.

## சம்பள ரகசியம்

கோடைக்காலத்தின்போதெல்லாம் ஒரு பாங்கியில் பல குமாஸ்தாக்களை வேலைக்கு அமர்த்திக்கொள்வார்கள். அவர்களுடைய சம்பள ரசீதில், 'உங்கள் சம்பளம் உங்கள் சொந்த விஷயம்; ரகசியமான சங்கதி. அதைப் பிறரிடம் வெளியிட வேண்டாம்' என்று அச்சடித்திருக்கும்.

ஒரு வாலிபன் இந்த ரசீதில் கையெழுத்திடும்போது, இந்த வாக்கியத்தையும் எழுதிவைத்தான்: "நான் அதை வெளியிடவே மாட்டேன். அதுபற்றி உங்களைப் போலவே எனக்கும் மிகுந்த வெட்கமாய்த்தான் இருக்கிறது."

—'இல்லஸ்ட்ரேடட் வீக்லி அவ் இந்தியா'

# கல்லா நாகரிகம்

## டிட்ரோ போற்றும் சமுதாயம்

**நாகரிகம் முற்றினால்தான் இன்பமயமான வாழ்க்கை அமையும் என்பது சிலர் கற்பனை. இதற்கு மாறாக இயற்கைச் சமுதாயமே மேல் என்பது அறிஞர் டிட்ரோ (1713 - 1784) கொண்ட கருத்து. இந்தக் கட்டுரை வரிசையை எழுதி வருபவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.**

1713-ஆம் ஆண்டு டிட்ரோ (Diderot) என்பவர் பிரெஞ்சு நாட்டில் லாங்கிரஸ் (Langres) என்ற இடத்தில் பிறந்தார். இவர் பிறந்த சூழ்நிலை நோக்கத் தகுந்தது. ரூசோவுக்குச் சில மாதங்கள் இளையவர். வால்டேருக்கு இருபது வருஷம் சிறியவர். ஹ்யூம் (Hume) இவருக்கு இரண்டு வருஷம் மூத்தவர். காண்ட் (Kant) இவரைவிடப் பதினொரு வயது சிறியவர். உலகத்தில் மிகவும் போற்றக்கூடிய சான்றோர்களிடையே இவர் தோன்றினார்.

இவர் தொடங்கிய 'கலைக் களஞ்சியம்' (The Encyclopaedia) என்ற கட்டுரைக் கோவை ஒரு பெருங்கிளர்ச்சியைத் தோற்றிப் புதிய மாறுதலை உலகத்துக்கு அளித்தது; பண்டைச் சமுதாயத்தின் அமைப்பைக் குலைக்க வந்த ஒரு பெருங் கருவியாய்த் திகழ்ந்தது. பழைய கொள்கைக் கோட்டையை இது தகர்த்தது என்று கூறலாம். இவர் கண்ட நல்லது இதுதான். மாந்தர்கள் இயற்கையில் நல்லவர்கள். உலகத்தை ஓர் அமர நாடாக அமைக்கலாம். கெடுதல் யாவும் கெட்ட படிப்பாலும், கெட்ட சட்டதிட்டங்களாலும் தோன்றியவையே தவிரப் பிறிதில்லை. ரூசோ உணர்ச்சி வேகமுள்ளவர். எல்லாவற்றையும் ஊடுருவும் ஒளிமிக்க அறிவு வால்டேரிடம் மிளிர்ந்தது. உண்மையான பௌதிக மனப்பண்பை இவரிடந்தான் காணலாம். மிகக் கவின்பெற எதையும் சமைக்கக்கூடிய செஞ்சொல் இவரிடத்தில் இல்லை. சொல் ஆற்றலில் இவர் ரூசோவுக்கும் வால்டேருக்கும் கீழ்ப்பட்டவரே. எனினும், விசாலமான நோக்கமும், எதையும் நடுவுநிலையிலிருந்து ஆராயும் பண்பும் இவரிடத்தில் இருந்தன. இந்தக் குணங்களால் அவர்களைவிட இவர் மேம்பட்டவரே.

இவர் இருந்த காலத்தில் பிரெஞ்சுச் சமுதாயம் மிகச் சீர்குலைந்திருந்தது. மாந்தர்கள் அஞ்ஞான இருட்டில் தோய்ந்து கிடந்தார்கள். ஏழை மக்களுக்கு ஒரு நியாயமும், பிரபுக்களுக்கு ஒரு நியாயமும் இருந்த காலம் அது. இவர் எழுப்பிய கிளர்ச்சிகள் கொஞ்சங் கொஞ்சமாக மனிதர்களின் கண்களைத் திறந்தன. இவர் தூண்டிய காற்றுத்தான் பிறகு பெரும் புரட்சிப் புயற்காற்றாக மாறிற்று

என்று சொல்லலாம். இவர் எழுதிய நூல்களே பண்டைய தீய சமுதாயத் திட்டங்களின் அஸ்திவாரங்களை ஆடச் செய்தன.

‘பிறர் துயர் கண்டு உள்ளம் நைகிறவன் தான் வைணவன்’ என்று வைணவனுக்கு இலக்கணம் வகுப்போமானால், டிட்ரோ ஒரு வைணவன் என்று சொல்லத் தடையில்லை. இவருடைய கலைக் களஞ்சிய நூல்களைப் பார்த்த மார்லி வியந்து போய்விட்டார். இந்தப் புத்தகங்கள் ஒரு மலை போல் என்முன் குவிந்து நிற்கின்றன. இனி இவைகளை எவரும் தொடமாட்டார்கள். நானும் இவைகளை இனித் தொடேன். இவை எகிப்து நாட்டின் வேந்தர்க்கு வேந்தனின் இடிந்த அரண்மனைகளை நினைவூட்டவில்லை. ஜன சமுதாயத்துக்காகவும் உண்மைக்காகவும் பாடுபட்ட சான்றோர்கள் எழுப்பிய அறிவுக் கோட்டைகளின் சிதைந்த சின்னங்கள் என்றே இவைகளைச் சொல்லலாம். இப்பொழுது இந்த விரிவான நூல்கள் பயன் தரமாட்டா; இது உண்மையே. ஆனால் அந்தக் காலத்தில் இவை செய்த சேவைகளை மறக்க முடியுமோ?

இவர் மரணத்தைக் கண்டு அஞ்சவில்லை. “எல்லாம் அழிந்து விடுகின்றன. என்னைச் சூழ்ந்த பொருள்கள் எனக்கு ஓர் அறிவை ஊட்டுகின்றன. காலமும் உலகமுந்தான் நிலைபெற்று நிற்கின்றன. உயர்ந்த மலைகள் உதிர்கின்றன. அடர்ந்த காடுகள் என்முன் அழிகின்றன. நானும் உலகத்தை விட்டு நீங்கிவிடுவேன் என்பதில் என்ன வியப்பு இருக்கிறது?” என்று இவர் கூறுகிறார். இவை யாவும் மறையக் கண்ட நாம் ஏன் வருத்தப்படவேண்டும்? இவர் அன்டாயின் பௌகேன்வில் (Antoine Bougainville) என்ற ஆசிரியர் எழுதிய கடல் யாத்திரைப் புத்தகத்துக்கு ஓர் அநுபந்தம் (The Supplement to Bougainville) எழுதியிருக்கிறார். டாஹிட்டி (Tahiti) முதலிய தீவுகளுக்குப் போய் அங்குள்ள மக்களின் நாகரிகத்தைப்பற்றியும் பழக்க வழக்கங்களைப்பற்றியும் பௌகேன்வில் கூறியிருக்கிறார். சட்டதிட்டங்களில்லாத ஒரு பண்டைய சமுதாயத்தை டிட்ரோ நமக்குத் தருகிறார். பௌகேன்வில் செய்த கடல் யாத்திரை உண்மையான யாத்திரையே. ஆனால் டிட்ரோ புரிந்தது ஒரு கற்பனை யாத்திரை ஆகும். இவர் எழுதிய அநுபந்தம் சம்பாஷணை முறையில் அமைந்திருக்கிறது.

அந்தத் தீவில் வாழ்ந்த ஒரு கிழவனின் சொற்களைக் கவனித்தோமானால் உண்மை புலனாகும். இந்தக் கிழவன் ஒரு பெருங் குடும்பத்துக்குத் தகப்பன். ஐரோப்பியர்கள் தன்னுடைய தீவுக்கு வந்தபோது வியப்பு, அச்சம், பொருள்களை அறியும் அவா இவைகளை இவன் காட்டவில்லை. ஐரோப்பியர் இவனை விளித்தார்கள். ஆனால் அவர்களுக்கு யாதொரு பதிலும் இவன் அளிக்கவில்லை. இவனுடைய மௌனமே இவனுடைய எண்ணங்களை உணர்த்திற்று. தன்னுடைய நாட்டுக்கு அழிவுக்காலம் வந்துவிட்டதே என்று அந்த நாட்டு மக்கள் மனம் நைந்தார்கள். பௌகேன்வில் அந்தத் தீவை விட்டு அகலும்போது அந்தத் தீவிலுள்ளோர் சிலர் அவனுடைய உடைகளைப் பிடித்துக் கொண்

டார்கள். வேறு சிலர் அவனுடைய தோழர்களைக் கட்டிக்கொண்டார்கள்.

இந்த நிலையில் அந்தக் கிழவன் இவர்களைப் பார்த்துக் கடிந்து கூறினான்: "இந்தத் தீயவர்கள் வந்ததே போதும். ஊர் திரும்பாமலிருந்தால் நன்றாயிருக்கும். இவர்கள் திரும்புவார்களேயானால், உங்களைக் கெடுத்துவிடுவார்கள்; உங்களை அடிமையாக்கி விடுவார்கள், என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. என்னுடைய வாழ்க்கை யாத்திரை முடியப் போகிறது. உங்களைப்பற்றித்தான் எனக்குக் கவலை மிகுகிறது."

பிறகு பௌகேன்வில்லைப் பார்த்து மொழிந்தான் அம்முதுகிழவன்: "திருடர்களே, எங்கள் கரையை விட்டு அகலுங்கள். நாங்கள் கள்ளங் கபடற்றவர்கள். இன்பமாய்க் காலங் கழிக்கிறோம். இயற்கை காட்டிய வழியைப் பின்பற்றுகிறோம். எல்லாச் செல்வமும் பொதுவே. எங்களிடத்தில் யாதொரு வேறுபாடுமில்லை. 'எனது', 'உனது' என்ற தத்துவ விதையை எங்கள் மனக் கழனியில் விதைக்க ஆரம்பித்துவிட்டீர்கள். எங்களுடைய பெண்கள், மனைவிகளிடத்தில் காணாத உணர்ச்சி அனல்களைத் தட்டி எழுப்பிவிட்டீர்கள். நாங்கள் தூய சுதந்தர வாழ்வு வாழ்கிறோம். இந்தத் தீவை உங்களுக்கு உரிமையாக்கப் பார்க்கிறீர்கள். நாங்கள் உங்கள் நாட்டைக் கைப்பற்றினால், உங்கள் மனம் என்ன பாடு படும் என்பதை உன்னிப் பாருங்கள்.

"எங்களுக்கு எது தேவையோ அதைத்தான் வைத்திருக்கிறோம். நாங்கள் நல்ல வாழ்வு நடத்துகிறோம். உடல் நலத்துக்குக் குறைவில்லை. நீங்கள் நான்கு பேர் சேர்ந்து வளைத்தாலும் வளைப்பதற்கு முடியாத வில்லை என்னால் நாண் ஏற்ற முடியும். என் வயலை நான் உழுகிறேன். மலைகள்மீது தட்டுத் தடங்கலின்றி ஏறுகிறேன். காடுகளைத் துருவிச் செல்லுகிறேன். வயதோ தொண்ணூறு. உங்களால் மாசுபட்ட பெண்கள், மனைவிகள், குழந்தைகள் இவர்களை எங்கள் கைகளால் அழித்துவிடுவது நலமெனத் தோன்றுகிறது. இங்கே குற்றமுமில்லை: தண்டனையுமில்லை. குற்றமும் தண்டனையும் உங்களோடுதான் இந்தத் தீவுக்கு வந்தன.

"உங்களை விருந்தினர்களைப் போலக் கருதினோம். எங்கள் பெண்களையும் மனைவி மக்களையும் உங்களுக்கு அளித்தோம். மலர்ச் சேக்கைகளைச் சுற்றி நடனமாடினோம். இப்படிப் புரிந்த எங்களுக்கு நல்ல பரிசு அளித்தீர்கள். நீங்கள் நுகர்ந்த பெண்களின் உடன்பிறந்தோரையும் தகப்பன்மாரையும் மாய்த்தீர்கள். நீங்கள் இனி எங்கள் ஊர் திரும்பி வராதீர்கள். விரிந்த வெங்கடல் எங்களுக்காக உங்கள்மீது கடும் பழி தீர்க்கும். நீங்கள் கடலில் ஆழ, வெறும் நுரை உங்கள்மீது எழும் என்பதில் ஐயமில்லை."

இப்படிக் கிழவன் சபிக்கிறான்.

கல்லா இளமையில் தோன்றுகிற நாகரிகந்தான் சாலச் சிறந்தது என்று டீட்ரோ மொழிகின்றார். தற்கால நாகரிக மிருக வாழ்வுக்கு டீட்ரோ சமைத்த உலகம் எவ்வளவோ மேல் என்பது நமக்கு விளங்காமல் போகாது.

**இன்று சர்வசகஜமாயிருக்கும் இது எவ்வளவு காலமாக எப்படியெல்லாம் வளர்ந்திருக்கிறது!**



# தபால் வளர்ச்சி

**குமாரி எஸ். நீலாயதாட்சி**

தபால் அனுப்பும் முறை எத்தனையோ நாளாக இருந்து வருகிறது. கி. மு. 6-ஆம் நூற்றாண்டிலே பர்ஷியாவைச் சைரஸ் என்ற மன்னன் ஆண்டுவந்த காலத்திலேகூட இந்த முறை பழக்கத்தில் இருந்தது. அப்போது சிதியப் போர் நடந்து வந்தது. குதிரைகளை வெவ்வேறு இடங்களில் தயாராக வைத்திருப்பார்கள். அவைகளில் ஆட்கள் ஏறித் தபாலை அங்கங்கே கொண்டு சேர்ப்பார்கள். இதுவரையில் தபாலைப்பற்றிக் கிடைத்த விவரங்களுள் இதுதான் மிகப் பழமையானது. சீனாவிலும் இப்படித் தபால் அனுப்பும் முறை இதையும்விட நெடுநாளாக இருந்துவருகிறதென்று மார்க்கோ போலோ என்ற இத்தாலிய யாத்திரிகர் குறிப்பிட்டிருக்கிறார்; அப்போது சீனாவில் 25 மைல்களுக்கு ஒரு தபால் நிலையம் விகிதம் மொத்தம் 10,000 நிலையங்கள் இருந்தனவாம்; 2,00,000 குதிரைகள் இதற்காகப் பயன்பட்டு வந்தன. ரோம் சாம்ராஜ்யம் தழைத்திருந்த காலத்திலும் இந்த மாதிரி தபால் முறை இருந்தது.

ஐரோப்பாவில் கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் சார்லிமான் என்ற சக்கரவர்த்தி காலத்தில், இந்த மாதிரி முறை பழக்கத்தில் இருந்து வந்தது. வட ஐரோப்பாவில் வியாபாரிகளும், லம்பார்டி, ஆஸ்திரியா இவைகளின் சிற்றரசர்களும் இப்படியே தபால் அனுப்பத் தம் தம் எல்லைகளில் ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு மன்னனான 11-ஆம் லூயி பழைய தபால் முறையை மீண்டும் புதுப்பித்தான். இங்கிலாந்திலும் கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் ஜான் என்ற மன்னன் காலத்தில் இந்த முறை அமலில் இருந்தது.

1683-இல் ராபர்ட் மர்ரே என்பவர் லண்டனுக்குள் பென்னித் தபால் பட்டுவாடா முறையை ஆரம்பித்தார். ஒரு ராத்தலுக்கு மேற்படாத கனமுள்ள கடிதம், பார்ஸல் இவைகளையும் பத்துப் பவுனுக்கு மேற்படாத தொகையையும் அனுப்பத் தபால் செலவு ஒரு பென்னி என்றும், அங்கிருந்து 10 மைல் வட்டாரத்துக்குள் அனுப்புவதாக இருந்தால் இரண்டு பென்ஸ் என்றும் நிர்ணயித்திருந்தார்கள்.

**மூலம்: சென்னை ஜில்லா ஆபரேட்டர்ஸ் ஃபோரம் (ஆங்கிலம்: 1953), சென்னை.**

1830-இல் ரெயில் பாதை போட்டதும் அந்த அந்த ஜில்லாவைச் சேர்ந்த தபால்களை அங்கங்கே ரெயில்மூலம் அனுப்பிப் பட்டுவாடா செய்யவேண்டியதாயிற்று. 1838-இல் இதற்கென்றே ஒரு சட்டம் விதித்தார்கள். தபால் ஆபீஸ் அதிகாரிகளுக்கு இது பிடிக்கத்தான் இல்லை. ஆனால் வேறு வழி இல்லை என்று தெரியவே ரெயில் மூலமே அனுப்ப இசைந்தார்கள்.

1837-இல் ஒரு கடிதத்துக்குச் சராசரி $9\frac{1}{2}$ பென்ஸ் தபால் செலவாயிற்று; 18-ஆம் நூற்றாண்டில் இருந்ததற்கு இது இரண்டமடங்கு அதிகமாகும். இப்படிக் கட்டணம் ஏராளமாக இருக்கவே தனிப்பட்டவர்களுக்கு அதிகமாகக் கடிதம் எழுத உற்சாகம் ஏற்படவில்லை. வியாபாரிகள்கூட ஆட்களை அமர்த்திக்கொண்டு அவர்கள் மூலம் தபால் அனுப்பி வந்தார்கள். இது சட்டத்தை மீறிய செயல் என்றாலும் மும்முரமாக நடந்து வந்தது. சர்க்கார் இதை எப்படித் தடுப்பது என்று தெரியாமல் திகைத்தார்கள். பொது மக்கள் அங்கங்கே கூடித் தபால் முறையைச் சீர்திருத்த வேண்டும் என்று கிளர்ச்சி செய்யலானார்கள்.

கடைசியில் 1837-இல் ரோலண்டு ஹில் என்பவர் இது சம்பந்தமாக ஆராய்ந்து, 'தபால் ஆபீஸ் சீர்திருத்தம்' என்று ஒரு புத்தகம் வெளியிட்டார். இதில் புள்ளி விவரங்களை மிகவும் நன்றாகவும் ஒழுங்காகவும் தெளிவாகவும் கொடுத்திருந்தார். 'ஒரு கடிதத்தைத் தபாலில் அனுப்பச் சராசரி $\frac{1}{10}$ பென்னியே ஆகிறது; 200 மைலுக்கு மேற்பட்டால் இன்னும் அதைவிடச் சற்றேதான் செலவு மிகுதியாகும். தபாலை ஒன்றாகத் திரட்டுவதற்கும் பட்டுவாடா செய்வதற்குந்தான் இப்படிச் செலவாகிறது' என்று நிரூபித்துக் காட்டினார். ஓர் அவுன்ஸ் கனத்துக்கு மேற்பட்ட கடிதங்களுக்கெல்லாம், எங்கே அனுப்பினாலும் ஒரே அளவு கட்டணந்தான் வேண்டும் என்று அதில் யோசனை சொல்லியிருந்தார். அதற்குமுன் தூரத்துக்குத் தக்கபடி கட்டணத் தொகை வேறுபட்டு வந்தது. இப்படியெல்லாம் செய்தால் தபால் இலாகாவில் வீண் செலவு எவ்வளவோ குறையும் என்று சிக்கன முறைகளையும் எடுத்துக் காட்டினார். பொது மக்கள் இதை மிகவும் உற்சாகத்தோடு வரவேற்றார்கள். ஆனால் அதிகாரிகள், 'இது நடக்கவே நடக்காது. மனக் கோட்டை' என்றெல்லாம் சொல்லி அதைத் தாக்கினார்கள். ஆனால் அநுபவமுள்ள வியாபாரிகளுக்கு ஹில் சொல்வது சரி என்றே பட்டது. அவர்கள் கிளர்ச்சி செய்யவே 1840-இல் இங்கிலாந்து முழுவதும் ஒரே மாதிரி பென்னித் தபால் முறை அமலுக்கு வந்தது.

முதல் பென்னித் தபால் ஸ்டாம்புக்குரிய அமைப்பைத் தயாரித்தவர்கள் மெஸ்ஸர்ஸ் பேகன் பெட்சு என்ற கம்பெனியார். சார்லஸ் ஹெல்த் என்பவர் இதை எஃகில் செதுக்கித் தர 60 கினி செலவாயிற்று. முதலில் கறுப்பு நிறத்திலும், பிறகு பழுப்பாகவும், பின்னால் சிவப்பு நிறத்திலும் இதை அச்சிட்டார்கள். 1860 - இலேயே ஸ்டாம்புகளைச் சேகரிப்பதில் சிலருக்கு மோகம் ஏற்பட்டது; பழைய ஸ்டாம்புகளை இப்படிச் சேகரித்து விற்றுச் சில பேர் அப்

போதே ருசி கண்டுவிட்டார்கள்.

1874-இல் ஐரோப்பாவுக்கு அனுப்பும் கடிதங்களுக்கு ஒரே மாதிரியாக $2\frac{1}{2}$ பென்ஸ் என்று தபால் கட்டணம் விதித்தார்கள். 1892-இல் உலகிலுள்ள பிற நாடுகளுக்கும் அதே கட்டணந்தான் என்று நிர்ணயித்தார்கள். 1881-இல் போஸ்டல் ஆர்டர் மூலம் தொகை அனுப்புவது, 1883-இல் பார்ஸல் தபால் அனுப்புவது, 1885-இல் 6 பென்னி தந்தி முறை இவைகளை அமலுக்குக் கொண்டுவந்தார்கள். முதல் உலக மகாயுத்தத்தினால் தபால் கட்டணம் அதிகரித்தது. 1919-இல் $1\frac{1}{2}$ பென்ஸாக இருந்த கடிதக் கட்டணம் 1920-இல் 2 பென்ஸாகி விட்டது. ஆனால் 1922-இல் மறுபடியும் $1\frac{1}{2}$ பென்னியாகக் குறைந்தது.

1846-இல் முதல் முதலாகப் பிரிட்டிஷ் தந்திக் கம்பெனியை நிறுவினார்கள். 1863-இல் தந்திக் கருவிகளைத் தயாரிப்பதைச் சர்க்காரின் ஏகபோக உரிமையாக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். விரைவில் இதற்கான மசோதா ஒன்றைக் கொண்டு வந்தார்கள். தனிப்பட்ட கம்பெனிகளுக்கு இதற்காக 72,00,000 பவுன் தரவேண்டியிருந்தது.

1876-இல் கெல்வின் பிரபு அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு முதல் முதலாக டெலிஃபோன் ஒன்றைக் கொண்டு வந்தார். 1880-இல் லண்டன் ஹைகோர்ட்டு உத்தரவுப்படி 'டெலிஃபோனும் தந்தியைப்போல் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் அதிகாரத்துக்கு உட்பட்டதே' என்று முடிவாயிற்று. 1878-இல் தான் மைக்ரோஃபோன் கண்டுபிடித்தார்கள். முதலில் பிரிட்டிஷ் தபால் ஆபீஸ் தன் அதிகாரத்தைச் செலுத்தத் தீவிர முயற்சிகள் ஒன்றும் எடுக்கவில்லை. ஆகவே, தனிப்பட்ட பல டெலிஃபோன் கம்பெனிகள் முளைத்தன. அவைகளைக் கட்டுத் திட்டப்படுத்தப் போய் எல்லாம் குழப்பமாக முடிந்தது. 1912-இல் தான் இங்கிலாந்திலுள்ள எல்லா டெலிஃபோன் கம்பெனிகளையும் ஒன்றாக இணைத்துத் தபால் இலாகா அதிகாரத்தின்கீழ்க் கொண்டு வந்தார்கள். அதுமுதல் ஒழுங்காகவும் அதிகச் செலவில்லாதபடியும் எல்லா வேலைகளும் நடந்து வருகின்றன.

1895-இலேதான் பிரிட்டிஷ் தபால் ஆபீஸ்களில் முதல் முதலாகத் தந்தியில்லாக் கம்பிப் போக்கு வரத்துக்கான வசதிகளை ஏற்படுத்தினார்கள். 1901-இல் மார்க்கோனி அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு அப்பால் முதல் முதலாக வொயர்லஸ் சமிக்ஞைகள் அனுப்ப முடியும் என்று நிரூபித்துக் காட்டினார். 1904-இல் இதையெல்லாம் சர்க்காரே முழுவதும் ஏற்று நடத்த வேண்டும் என்று வொயர்லஸ் டெலிகிராபி சட்டம் ஒன்றை அமலுக்குக் கொண்டு வந்தார்கள். இதனால், 'தபால் ஆபீஸின் அநுமதி இல்லாமல் யாரும் வொயர்லஸ் கருவி வைத்திருக்கக்கூடாது; அப்படி வைத்திருந்தால் அது சட்டவிரோதம்' என்று முடிவாயிற்று. பின்னால் முக்கியமான எல்லா நாடுகளும் கூடி, இது சம்பந்தமாக ஒத்த முடிவுக்கு வந்தன.

இப்போது டெலிவிஷன் வந்துவிட்டது; இது சம்பந்தமான

பொறுப்புக்களையும் தபால் ஆபீஸ் ஏற்க வேண்டியிருக்கும்.

இந்தியாவிலும் இதே ரீதியில் தான் தபால் இலாகா வளர்ந்தது. 1854-இலேயே இங்கேயும் அதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்துக்கொண்டார்கள்.

இந்தியாவில் இன்று மொத்தம் 30,000 தபால் ஆபீஸ்களுக்கு மேலே இருக்கின்றன. 1914-18-இல் இந்தியாவுக்குள் கடிதப் போக்குவரத்துக்குக் கார்டு ஒன்றுக்குக் காலணுவும், ஒரு தோலா கனத்துக்கு மேற்படாத கவர்களுக்கு அரை அணுவும் தபால் கட்டணம் என்று ஒரே அளவாக நிர்ணயித்தார்கள். ஆனல் பின்னல் செலவு அதிகமானதால் கார்டுகளுக்கு ½ அணு, கவர்களுக்கு ¾ அணு, 1 அணு, 1½ அணு, 2 அணுவும் கட்டணமாக விதித்தார்கள். அதே மாதிரி மணியார்டர் கமிஷனையும் உயர்த்தினர்கள். 1943 வரையில் தனிப்பட்ட பல டெலிஃபோன் கம்பெனிகள் இருந்து வந்தன. பிறகு சர்க்காரே இவைகளை எடுத்துக் கொண்டார்கள். இப்போது சர்க்கார் தபால் தந்தி இலாகா டைரக்டர்-ஜெனரலே அவைகளைக் கவனித்து வருகிறர்.

இப்போது இந்தியா முழுதும் 10,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட எல்லா நகரங்களுக்கும் டெலிஃபோன் வசதி ஒழுங்காக அமைந்திருக்கிறது. மத்திய டிரங்க் டெலிஃபோன் மூலம் இந்திய யூனியனிலுள்ள நகரங்களில் வசிப்பவர்களோடெல்லாம் பேசலாம். அதேமாதிரி பிரிட்டன், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, மலாயா முதலிய இடங்களுக்கும் இங்கிருந்து டெலிஃபோன் வசதி உண்டு.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ்த் தபால் இலாகா பின்னும் அபிவிருத்தி அடையும். 2000-க்குக் குறையாத ஜனத்தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு தபால் ஆபீஸ் ஏற்படுத்துவது என்றும், 5000-க்குக் குறையாத ஜனத்தொகை கொண்ட கிராமங்களுக்குத் தந்தி - டெலிஃபோன் வசதிகளைச் செய்து கொடுப்பதென்றும் தீர்மானித்திருக்கிறர்கள்.

## மனைவியின் புகார்

கோர்ட்டில் ஜீவனும்ச வழக்கு ஒன்று வந்தது.

"இந்தப் புருஷனுடன் நான் வாழ முடியாது. எனக்கு ஜீவனும்சம் வேண்டும். வீட்டில் உள்ள சட்டி பானைகளையெல்லாம் போட்டு உடைத்துவிட்டார் இவர்" என்ருள் பிராது செய்த பெண்.

"பின்னல் இவர் உன்னிடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டாரா? மனம் மாறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டாரா? ஒன்றுமே சொல்லவில்லையா?" என்று விசாரித்தார் ஜட்ஜி.

"ஒன்றுமே சொல்லவில்லை. உடனேதான் ஆம்புலன்ஸ் கார் வந்து இவரைத் தூக்கிக்கொண்டு போய்விட்டதே" என்ருள் பெண்.

**உருவகக் கதை:**

# விடுதலை

மூலம்: **ரவீந்திரநாதர்**
தமிழ்: **த. நா. ஸேனுபதி**

பழைய வைஷ்ணவ பதாவளி இலக்கியத்தின் சுவையில் இளவயது முதல் ஈடுபட்டவர் கவியரசர். அவருடைய கவிதைமணம் கமழும் இந்தக் கதையை அநுமதி பெற்று இங்கே மொழிபெயர்த்துத் தந்திருக்கிறோம்.

தன் கனவில் கண்ட கண்ணனை எதிர்நோக்கியிருந்தாள் ஒரு பேதைத் தலைவி. பூந்தோட்டத்தின் மூலையிலே ஒரு மேடை அமைத்தாள்; அதிலே அவன் உருவத்தை மண்ணிலே அமைக்க உட்கார்ந்தாள். அவள் மனத்தில் இருந்த அந்த உருவத்தைக் கொஞ்சங் கொஞ்சமாக எண்ணிப் பார்க்கும்போது அவள் கண்களில் நீர் வரும். ஆனால் மண்பொம்மை உருவாக உருவாக மனத்தில் இருந்த கண்ணன் உருவம் மங்கி வந்தது. தன் மேலேயே அவளுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. பின்னும் கடுமையாக உடலை வருத்திக் கொண்டாள். பழமும் நீருமே உட்கொண்டாள்; புல்லையே படுக்கையாகக் கொண்டு நோன்பு நோற்ருள். உள்ளத்தில் இருந்த அந்த உருவத்தைச் செய்து முடிக்க முடிக்க உள்ளம் வெறிச்சென்று ஆகிவந்தது. 'அப்படி ஒன்றும் நாம் பிரமாதமாகச் செய்து முடித்துவிடவில்லை' என்று அவளுக்குத் தோன்றியது. இன்னும் சிறப்பாகச் செய்து விடவேண்டும் என்று முயன்ருள். ஆனாலும் கனவில் கண்ட உருவுக்கும் அதற்கும் உள்ள வேற்றுமை மிகுதியாகிக் கொண்டே வந்தது.

அந்த உருவத்துக்குத் தன் நகைகளை எல்லாம்போட்டுப் பார்த்தாள். நூறு தாமரை மலர்களுக்கு மேல் எடுத்து வந்து அதனை அர்ச்சித்தாள். மாலை நேரத்தில் அதன் எதிரே மணமிகுந்த தைலவிளக்கு ஏற்றினாள். அது தங்கக் குத்து விளக்கு. தைலத்தின் விலையோ அதிகம். நாளுக்கு நாள் உருவத்தின் கழுத்தில் நகைகளை மிகுதியாகப் போட்டுக் குவித்தாள். பூஜைப் பொருள்கள் மேடையை மட்டும் என்ன, உருவத்தையே மறைத்துவிட்டன.

## 2

ஒரு சிறுவன் அப்போது அந்தப் பக்கம் வந்தான். "என்னுடன் விளையாட வருகிருயா?" என்ருன்.

"எங்கே?"

"இங்கேதான். இந்த மேடையின் அருகில்."

பேதை பரபரப்போடு, "ஊஹூம், இங்கே யாரும்

விளையாடவே கூடாது'' என்றாள். அவன் போய்விட்டான்.

இன்னொரு பையன் அங்கே வந்தான்; ''பூப் பறித்துக்கொள்கிறேனே'' என்றான்.

''எங்கே?''

''இதோ இந்த மேடை அருகில் இருக்கும் சண்பக மரத்திலிருந்து தான்.''

பேதை அந்தப் பையனை அடித்து, ''இங்கே யாரும் பூப் பறிக்கக்கூடாது. போ!'' என்று விரட்டினாள். அவன் போய் விட்டான்.

மற்றொரு பையன் அங்கே வந்தான். ''மாலைநேர மாகிவிட்டது. இருட்டி வருகிறது. வழி தெரியவில்லை. இந்த விளக்கைக் கொஞ்சம் கொடு'' என்றான்.

''எந்த விளக்கு?''

''இதோ, இந்த மேடையில் இருக்கிறதே; இதுதான்.''

பேதைத் தலைவி சீறி எழுந்து அந்தப் பையனையும் அடித்து, ''சீ, போ! நான் ஒன்றும் தர மாட்டேன்'' என்று விரட்டி விட்டாள்.

## 3

அந்தச் சிறுவர்கள் எல்லோரும் போனதும் இன்னொரு சிறுவர் கூட்டம் அங்கே வந்தது. அவர்கள் ஆடியும் பாடியும் வருவதைச் சற்று நேரம் கண் கொட்டாமல் பேதை பார்த்துக்கொண்டிருந்தாள். பிறகு திடுக்கிட்டு, ''ஐயோ! இவரை மறந்தே போய்விட்டேனே!'' என்று, தான் செய்த தலைவனின் உருவத்தைப் பார்த்து நாணித் தலை குனிந்து கொண்டாள்.

தேர்த் திருநாள் நெருங்கியது. அந்த ஊரில் வயதான தாத்தா ஒருவர் இருந்தார். அவர் அந்தப் பெண்ணைப் பார்த்து, ''என் அம்மா, தேர் பார்க்க வரவில்லையா?'' என்றார்.

பேதை, ''ஊஹூம். நான் எங்கேயும் போகப் போவதில்லை'' என்றாள்.

தாத்தா போய்விட்டார்.

பிறகு அவள் தோழி வந்தாள். ''திருநாள் பார்க்க வரவில்லையாடி?'' என்றாள்.

''ஊஹூம். எனக்கு வர நேரமில்லை'' என்றாள் பேதை.

அவள் தம்பி வந்து கூப்பிட்டான். ''என்னையும் தேர்த் திருநாளுக்கு அழைத்துக்கொண்டு போயேன், அக்கா'' என்றான்.

''ஊஹூம். முடியாது. நான் பூஜை செய்ய வேண்டும்.''

## 4

இரவு அங்கேயே கண் அயர்ந்தாள் பேதை. அதற்கிடையே கூட ஜனங்கள் போய் வரும் இரைச்சல் கேட்டுக்கொண்டிருந்தது. சில பேர் வண்டியில் போனார்கள்; சில பேர் நடந்து போனார்கள்; சிலபேர் முதுகில் மூட்டை இருந்தது. சிலர் கை வீசிக்கொண்டு போனார்கள்.

விடியற்காலை. அவள் தூக்கம் கலைந்து எழுந்திருந்தாள். வழிப் போக்கரின் பாட்டும் சரி, பறவைகளின் இன்னொலியும் சரி, அன்று ஏனோ அவள் காதில் விழவில்லை.

சட்டென்று, ''நாமும் புறப்பட்டுப் போகலாம்'' என்று கொஞ்ச தூரம் போனாள். ஆனால் உடனே, 'ஐயோ! பூஜை பண்ணவேண்டுமே! அதை விட்டு எப்படிப் போவது?' என்ற நினைவு வந்தது. திரும்பி வந்தாள், மேடைக்கு அருகே. ஆனால் அங்கே அவள் செய்து

வைத்த கண்ணனின் உருவமோ மேடையோ இருந்தால்தானே! வழிப்போக்கர் போய்ப் போய், அது ஒற்றையடிப் பாதையாகி விட்டது!

'ஐயோ! அது போய்விட்டதே!' என்று முதலில் தோன்றியது அவளுக்கு. உடனே, 'போனால் போகட்டுமே! நாம் நினைத்த மாதிரியே அது அமையவில்லை. தொலையட்டும்' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டாள்.

அப்போது அவள் சின்னஞ்சிறு தம்பி வந்தான்; "என்னைத் திருநாளுக்கு இப்போதாவது அழைத்துக்கொண்டு போயேன்" என்றான்.

"சரி, வா" என்று சொல்லிக் கொண்டே மேடையும் உருவமும் இருந்த வழியாகவே அவள் புறப்பட்டாள்.

அவள் தன் கனவில் கண்ட கண்ணன் உருவம் இப்பொழுது எங்கே பார்த்தாலும் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. அவள் மனத்தில் ஏதோ பெரிய தளையிலிருந்து தான் விடுதலை பெற்றது போல் மகிழ்ச்சி பொங்கியது.

## க்விஸ் விடை

(1) மேல் வரிசைப் பல். (2) நிலக்கரியிலிருந்தே 'கோக்' வருகிறது. (3) சிறிது கூர் ஏற்படும்; தோலில் தீட்டுவதுபோல் கூராகாது. (4) தூசி, நூல் பிசிர் இவைகளைக் காற்று அடித்துக்கொண்டு வரும்போது, சாமான் இருக்குமிடத்தில் தடை ஏற்படுகிறது; அங்கேயே அவை அழுக்குருண்டையாகத் திரள்கின்றன. (5) 9-வயதில் சிம்மாசனம் ஏறி 18-வயதில் காலமான பையன். (6) ஸர்வேயரின் 'தியாடலைட்' போன்ற பல கருவிகளில் 'மயிரிழை' (ஹேர்-லைன்) என்ற அமைப்பாகச் சிலந்தி வலை நூல் உபயோகமாகிறது. (7) நெருப்புக் கோழி. (8) டெட்ராயிட். (9) மாறுது. (10) வாட்டிகன்; அங்கே நூற்றுக்கு நூறுபேர் ரோமன் கத்தோலிக்கரே. (11) எதிரொலி தரை மட்டத்துக்குப் போய்த் திரும்பி வரும் நேரத்தைக் கணக்கிடும் நூதனக் கருவியைக் கொண்டே அளக்கிறார்கள். (12) சமம். (13) வெங்காயத்தில் ஒரு வித எண்ணெய் இருப்பதனால்தான்; வெங்காயத்தை நீருக்கடியில் வைத்து உரித்தால், இப்படிக் கண்ணீர் வராது. (14) மஞ்சூரியா. (15) பிரேஸில். (16) ரேடியம், தோரியம், யுரேனியம் போன்ற பல மூலப் பொருள்களுக்கு உள்ள ஒரு விசேஷ குணம் இது. இவைகளிலிருந்து ஆல்ஃபா, பெடா, கம்மா என்ற கதிர்களாகச் சக்தி வெளியாகிக்கொண்டேயிருக்கிறது. இப்படிப் பல காலம் கதிர் வீசிய பிறகு, இவை இந்தக் குணம் இல்லாத வேறு மூலப் பொருள்களாக மாறிவிடுகின்றன. உதாரணமாக, யுரேனியம் ஈயமாக மாறிவிடும். (17) 7 காலன் தண்ணீர். (18) மாரியில் 20 முதல் 52 பவுண்டு; கோடையில் 25 முதல் 30 பவுண்டு.

# நடிகை

மூலம்: இல்யா எர்ன்பர்க்
தமிழ்: கே. எஸ். பி.

**இன்று பிரபலமாக விளங்கும் முக்கிய ஸோவியத் எழுத்தாளருள் ஒருவர் இந்த ஆசிரியர். விறு விறுப்பும் ஓட்டமும் நிறைந்திருக்கும் இவர் நடையில்.**

'உன்னைப் போர்முகத்துக்கு மாற்றியிருக்கிறோம்!' என்று நாடகக் காரியதரிசி சொன்னதும் லிசாவின் கண்கள் அகல விரிந்தன. அவள் முகத்திலே சந்தேகக் குறிகள் தோன்றி மறைந்தன.

தினமும் அழகிய நகரங்களும் நூற்றுக்கணக்கான தாய்மார்களும் குழந்தைகளும் கண்ணீர் விட்டுக்கொண்டே சாகும் இடத்தில் லிசா நடனமாடவேண்டும்! 'கடமைக்காக இதை நான் ஒப்புக்கொள்கிறேன்!' என்று அவள் தன் டயரியில் குறித்துக் கொண்டாள்.

அவள் அப்போது ஒரு சின்ன நகரத்திலே நாட்டியம் ஆடி வந்தாள். சாந்தம் நிறைந்த அந்த இடத்திலே இப்போது ஈ காக்கை கூடப் பயத்தால் தலை நீட்டவில்லை. நகரத்திலிருந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அவர்களுடைய உற்றார் உறவினர்கள் போர்முகத்திலே இருந்தனர். தபால்காரர்களின் காலடிச் சத்தத்தைக் கண்டு, 'எந்த நிமிஷம் எந்தக் கெட்ட செய்தி வருமோ?' என்று அவர்கள் நடுங்கினர். சேனை பின்வாங்கிக் கொண்டிருந்தது. மக்கள் செய்தி இலாகா ஆபீசைச் சூழ்ந்துகொண்டனர். மனைவி மக்கள், மேஜர்களின் மனைவிகள், பள்ளிக்கூடத்தில் படிக்கும் குழந்தைகள் - எல்லாருடைய முகத்திலும் பீதியும் நடுக்கமுமே தெரிந்தன.

நாடகக் கொட்டகையில் பழைய கதைகளையே நடித்தார்கள். 'ஏன்?' என்று விசா தன்னையே கேட்டுக்கொண்டாள்.

'உலகத்தை அறிந்தால், எல்லாரும் உன்னை மதிப்பார்கள். உனக்குச் சாவே கிடையாது!' என்ற அமர வாக்கியத்தை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். இரவில் ஒழிந்த நேரங்களில் லிசா கொட்டகைக்குச் சென்று மக்கள் என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று உற்றுக் கேட்பாள். பல பேருடைய பேச்சு ஒரே மாதிரியாக இருந்தது. 'என் கணவர் போர்முகத்திலே என்ன ஆனாரோ!' என்றுதான் பல பெண்கள் புலம்பினர். லிசா தள்ளாடிக்கொண்டே தன் அறைக்குச் சென்றுவிடுவாள்.

அப்போதுதான் அவளுக்குத் தன்னைப்பற்றிய நினைவு வரும். இந்தத் தொழிலுக்கு அவள் எப்படி வந்தாள்?

எங்கும் உள்ளத்தோடு அவள் பழைய நிகழ்ச்சிகளை எண்ணுவாள். அவள் பிறக்கும்போதே நாட்டிய மங்கையாகத்தான் தோன்றினாளா?

இல்லவே இல்லை. எத்தனையோ முறை ஆசையோடு அவள் தாய், "லிசா, கொஞ்சம் நாட்டிய மாடேன்!" என்று கெஞ்சியிருக்கிறாள். அப்போதெல்லாம் பிகு செய்துகொண்டு வாசற்புறம் சென்றுவிடுவாள் லிசா. சிறு வயது முதலே அவள் நாட்டியக் கலை பயின்றது என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் வாழ்க்கை முழுவதுமே நாட்டியமாட நேரிடும் என்று அவள் அப்போது நினைக்கவில்லை!

லிசாவைத் தனியே விட்டுவிட்டு, அவள் தாய் கண் மூடினாள். லிசாவுக்கு அப்போது மண வயது. யுத்தத்துக்கு முன்பு புரோனின் என்ற எஞ்சினியரை அவளுக்குக் கொடுப்பதாகப் பேச்சு நடந்தது.

ஒரு நாள் மாலை லிசா அவனைப் பார்க்கிலே சந்தித்து, அவன் அழகிலே மயங்கினாள். அவன் அவள் கரங்களைத் தாங்கிக் கொண்டபோது, அவள் உள்ளத்திலே அமிர்தம் பாய்ந்தது. அவள் குறும்புப் புன்னகையோடு அவனைப் பார்த்தாள். 'நாட்டியமாட நேரிடும்!' என்று அவள் அப்போது எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதற்கப்புறம் அவனை அவள் சந்திக்கவே இல்லை!

துயரம் நிரம்பிய அவள் உள்ளத்துக்கு நாட்டியம் ஆறுதல் அளித்தது. ஆனால் உண்மையிலே நடிகையாக அவள் விரும்பவில்லை. எத்தனையோ முறை மேடையை அவள் சபித்திருக்கிறாள். ஆனால் நாட்டியமாடத் தொடங்கியதும் அவள் முகத்திலே பரவசம் தாண்டவமாடும். துயரம் எங்கோ ஓடி ஒளிந்துகொள்ளும்!

நாடகக் கம்பெனியார் அவளுக்குத் திறமை இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் தான் எதையோ பறிகொடுத்து விட்ட நினைப்புத்தான் லிசாவுக்குத் தோன்றும். தன்னுடைய வறண்ட வாழ்க்கைச் சம்பவங்கள் அவள் கண்முன்னே தோன்றி, 'காதல் பனித்துளியைப்போல, இளம் பெண்ணின் வாழ்க்கை அபாயம் நிறைந்தது!' என்று எச்சரிக்கும். உலகத்திலே 'காதல்' என்ற சொல்லுக்கு இடமே இல்லை என்று லிசாவுக்குத் தோன்றும். கலையிலே அவளுக்கு விருப்பம் குறைந்தது. 'உண்மையான கலைக்கு இடமில்லை!' என்று அவள் டயரியில் குறித்துக்கொண்டாள்.

* * *

இப்போது அவள் போர் முகத்துக்குப் போயாக வேண்டும்! உதட்டிலே புன்னகையைப் படரவிட்டுக்கொண்டு அவள் நடந்தாள். அவள் இதயம் கனத்தது. 'போரிலே மன்றுடும் வீரர்களுக்கு என் நாட்டியம் மகிழ்ச்சியூட்ட முடியுமா?' - லிசாவுக்கு உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டியது.

நடிகர் கூட்டம் கிளம்பியது. குதிப்பும் கொம்மாளமுமாகக் கிளம்பினவர்கள், அமைதியோடு நடந்தனர். பாழடைந்த வீடுகள், கருகி உதிரும் மரங்கள், மூடுபனி, சாம்பலாகும் உடல்கள் - இவற்றைக் கண்ணெதிரே அவர்கள் கண்டார்கள்.

அருகிலிருந்த ஒரு குடிசையில் அன்றிரவு அவர்கள் முகாம் போட்டார்கள். கண் தசைகள் சுருங்கிப்போன வயதான கிழவி ஒருத்தி நடிகர்களுக்குத் தன் சோகக் கதையைச் சொன்னாள்.

''பாழும் பனியிலே இரவு படுத்தவன்தான் என் மகன். காலையிலே விறைத்துப் போயிருந்தது அவன் உடல். மூச்சு எப்போதோ நின்றுவிட்டது!'' - கிழவி கும்மட்டியை மூட்டினாள்.

விசாவுக்கு வயிற்றைக் குமட்டி எடுத்தது. கிழவியின் மகனைப் பற்றிய செய்தி அவளை உலுப்பி விட்டது. 'என்ன யுத்தம், என்ன கொடுமை! மனிதத்தன்மைக்கு இங்கே இடமே இல்லையா?' என்று அவள் தன்னையே கேட்டுக் கொண்டாள். அவளுக்கு அன்றிரவு சரியான தூக்கமே வரவில்லை.

மறுநாள் காலையில் எழுந்தபோது ஒரு புறம் பிணங்களின் குவியலும், மறுபுறம் பாழடைந்த வீடுகளும் முடங்கிப்போன குதிரைகளும் அவள் கண்களில் பட்டன. காயமடைந்தவர்களை 'ஸ்ட்ரெச்சரி'ல் தூக்கிச் சென்றார்கள். குளிர் தாங்காமல் உஷ்ணத்துக்காகத் தன் இரு கைகளையும் ஒரு சோல்ஜர் உரசிக் கொண்டான். அவனுடைய உதடுகள் வெலவெலவென்று நடுங்கின. விசாவுக்குக் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது. நடிகர் கூட்டம் கிளம்பியது.

அன்று ஒரு பள்ளிக்கூட ஹாலில் நாட்டியம் நடந்தது. ஜெர்மானியர்கள் அந்த இடத்தில் தங்கள் ஆயுதங்களைப் பத்திரப் படுத்தி வைத்திருந்தனர். நடிகர்கள் உடையணிந்து கொள்ளும் அறைகளில் துப்பாக்கிகள் தொங்கின. பூட்சையும் ஜாக்கெட்டையும் கழற்றிவிட்டு, நீண்ட கவுனை விசா அணிந்துகொண்டாள். அவள் கரங்கள் நடுங்கின. உதட்டை அவள் கடித்துக் கொண்டாள்.

அவளுடைய நாட்டியத்தைக் கண்டு மக்கள் வியந்தனர். அதில் முக்கால்வாசிப் பேர்கள் தொழிலாளிகள். யுத்தத்தில் பல வேலை அவர்களுக்கு. நாளைக்கு அவர்களுடைய உயிர் சாசுவதமில்லை!

விசாவின் மெய் சிலிர்த்தது. காதலுக்கும் மனிதத்தன்மைக்குமுள்ள வேற்றுமையை அவள் உணர்ந்தாள். காதலைப் பற்றி இனி அவளுக்குக் கவலையில்லை. அவள் எதிரே கைகட்டி உட்கார்ந்திருக்கும் கூட்டத்திலே அவள் மனிதத் தன்மையைக் கண்டாள்.

சடசடவென்று அவர்கள் கைதட்டினார்கள். விசா மெல்ல நகைத்தாள். அவள் உள்ளத்திலே மகிழ்ச்சி நிரம்பியது. ரத்தம் தேவையான உடலுக்குத் தன் உடலிலிருந்த ரத்தத்தைக்கொடுத்தாற்போல அவள் மகிழ்ந்தாள். அறைக்குத் திரும்பியபோது முந்திய நாள் அவ்வளவு சோர்வு இல்லை. உடல் முழுவதும் லேசாக இருந்தது.

நாட்கள் ஊர்ந்தன. விசா ஆஸ்பத்திரிகளிலே, காட்டின் மத்தியிலே, விமான நிலையத்திலே - பல இடங்களிலே நடனமாடினாள். துப்பாக்கிச் சத்தமும் பீரங்கிகளின் இடி முழக்கமும் அவளுக்கு மரத்துவிட்டன. வழக்கப்படி ஒரு 'கிளப்'பில் அவள் தேநீர் குடித்துக்கொண்டிருந்தாள்.

வயதான ஒரு ஜெனரல், "நான் ஒரு பழைய நாட்டிய ரசிகன். பட்டினத்திலே ஒரு நடனம் பார்க்க நான் தவறியது கிடையாது!" என்ருன்.

எதிர்பாராத விதமாக ஒரு வாலிபனை அவள் அன்று சந்தித்தாள். போரிலே 'பைலட்'டாக அவன் வேலை செய்பவன்.

"நீங்கள் என் முதற் காதலை ஞாபகப்படுத்துகிறீர்கள்?" என்ருன் அவன், விசாவின் முகத்தைப் பார்த்தபடியே. விசாவுக்கு அவனைப் பிடித்துவிட்டது. அவர்கள் எல்லையின்றிப் பேசினுர்கள்.

"உங்கள் பெயரென்ன?" என்று கேட்டாள் விசா.

"டோரனின்!"

நாட்டியம் முடிந்ததும் வழக்கப்படி டோரனினைச் சந்திப்பது அவள் வழக்கமாகிவிட்டது.

கொஞ்சங் கொஞ்சமாக அவனைப்பற்றிய தகவலை அவள் அறிந்தாள். போருக்கு முன்பு அவன் ரசாயனம் பயின்றவன். அவர்கள் பல விஷயங்களைப்பற்றி அலசி அலசிப் பேசினுர்கள். தாய்மை, குழந்தைப் பருவம், காதல், இலக்கியம் எல்லாம் அவர்கள் பேச்சிலே குறுக்கிட்டன.

விசா டோரனினைச் சந்தித்து ஒரு வாரந்தான் ஆயிற்று. நடிகர்களுக்கு ஒதுக்குப் புறத்தில் நல்ல இடமாக ஒன்று பார்த்துக் கொடுத்தான் டோரனின். அவன் முகத்திலே நல்ல களை சொட்டவில்லை என்ருலும், விசாவுக்கு அவனைப் பிடித்துவிட்டது.

'என் வாழ்க்கையிலே எத்தனையோ மனிதர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனல் டோரனினைப்போல் ஒருவரை..! அவர் நடிகரல்ல, உண்மைதான்! நல்ல அழகர் என்றும் அவரைச் சொல்ல முடியாது. ஆனல் ஆழம் நிரம்பிய அந்தக் கண்கள், அவருடைய சரளமான பேச்சு!' விசா தன் நினைப்பை உறுதியாக்கிக்கொண்டாள்.

"உன்னை விசா என்று அழைத்தால் கோபித்துக்கொள்ள மாட்டாயே?" என்றே ஒரு நாள் அவன் கேட்டுவிட்டான்.

"என்ன, நாளைக்கு நீங்கள் வெளியூர் போகிறீர்களாமே!" என்று அவள் கவலையோடு கேட்டாள்.

அகன்ற அவன் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினுள் விசா.

தன் இருப்பிடத்துக்குத் திரும்பியபோது விசாவுக்கு உலகமே சூனியமாகத் தென்பட்டது. இப்போது போர் மும்முரங்கூட ஓய்ந்திருந்தது.

"என்ன விசா, என்னவோ போல இருக்கிருய்? போர்கூட நின்றுவிட்டதாமே!" என்று ஒரு நடிகன் கேட்டான்.

விசா ரோஷத்தோடு, "மனிதர்கள் உயிருக்கு அங்கே மன்ருடுகிருர்கள்! உனக்கு எவ்வளவு திமிர், இப்படிச் சொல்ல?" என்ருள். நாடகக் கொட்டகை சோபையற்று விளங்கியது. கை தட்டலும் மக்களின் ஆரவாரமும் விசாவுக்கு அடியோடு வெறுத்துவிட்டன. ஒரு காலத்தில் அவள் இந்தக் கை தட்டலுக்காகத் தவங்கிடந்தாள்! ஆனல் இன்று-அவளுக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. எதையாவது எழுதலாமே என்று அவள் பேனவைக் கையிலெடுத்தாள்.

'எதை எழுதுவது, யாருக்கு எழுதுவது?' அவளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தன் உணர்ச்சிகள் அனைத்தையும் கொட்டி அவள் ஒரு கடிதம் எழுதினாள். என்ன தோன்றியதோ, அடுத்த கணமே அதை அவள் சுக்கு நூறாகக் கிழித்து எறிந்தாள்.

அன்று அவளுக்கு டோரனி னிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

"வாழ்க்கை விசித்திரமாக இருக்கிறது, விசா! நீ என்னைப் போர்முகத்திலே சந்தித்ததால் மயங்கியிருக்கிறாய். ஆனால் போர் முடிந்து நான் அங்கே வந்தால் உன் கருத்து வேறு விதமாக இருக்கும் என்று நினைக்கிறேன். நீ ஓர் உயர்ந்த நடிகை. நான் சாதாரண ரசாயன நிபுணன்..!"

கடிதத்தை மேலே படிக்கவில்லை அவள்!

அவளுடைய மார்பு விம்மியது. 'டோரனின் எழுதியிருப்பதும் உண்மைதான். நான்தான் அவரைக் கண்டு ஏமாந்து போயிருக்கிறேன்' என்று அவள் சமாதானம் கூறிக்கொண்டாள். ஆனால் அடுத்த கணமே, 'என்னை அவருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அதனால்தான் இப்படிக் கடிதம்...!' என்ற எண்ணம் தோன்றியது.

இந்த மனப் போராட்டத்திலேயே விசா ஒரு வாரத்தைக் கடத்தினாள். விசாவால் மன வேதனையைத் தாங்க முடியவில்லை. பரபரவென்று அவள் டோரனினுக்கு எழுதலானாள்:

"அன்புள்ள..

நான் உங்களை மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். உங்கள் காதலுக்காக நாட்டியத் தொழிலை வேண்டுமானாலும் விட்டுவிடுகிறேன். கலை இல்லாமல் என்னால் வாழ முடியும். ஆனால் உங்களைப் பிரிந்து..!"

'கலைக்கும் எனக்கும் அவ்வளவுதான் சம்பந்தம்!' என்று கடிதத்தை அவள் தபாலில் சேர்த்தாள்.

**பொ**றுமை ஒரு பெரிய கலை. கடிதத்துக்குப் பதில் வருமென்று விசா நாள் கணக்கில் காத்திருந்தாள். தபால்காரன் வெறுங் கையை விரித்துக்கொண்டே சென்றான். அவள் தவித்தாள்; கண்ணீர் விட்டாள்.

அன்று அவளுக்கு நாட்டியமே பிடிக்கவில்லை. மிகவும் மோசமாகவே நடித்தாள். டோரனின் செத்துவிட்டான் என்று அவள் தீர்மானித்தாள். வாழ்க்கை அவளுக்கு வெறுத்துவிட்டது. மனித யந்திரம்போல அவள் உடையணிந்தாள்; நடித்தாள்; சாப்பிட்டாள்!

கடைசியில் தபால்காரன் அவளைத் தேடிக்கொண்டு ஒரு நாள் வந்தான். விசா பரபரவென்று கடிதத்தைப் பிரித்துப் படிக்கலானாள்:

"உனக்குக் கெட்ட செய்தி வருகிறது. உன் காதலன் டோரனின் ஆஸ்பத்திரியில் குத்துக் காயங்களோடு மாண்டு விட்டான். அவனைக் காப்பாற்ற நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம், பயனில்லை. முடிவு வரையில் அவன் தைரியமாக இருந்தான். இந்தக் கைக் கடிகாரத்தை உங்கள் காதல் சின்னமாக உனக்கு அனுப்பச் சொன்னான்.

"நான் ஒரு தள்ளாத நர்ஸாக இந்த ஆஸ்பத்திரியில் வேலை செய்கிறேன். இந்தச் சமயத்தில்

உனக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவள், துயரத்தை உண்டாக்குகிறேன்.''

விசாவுக்குப் பைத்தியம் பிடித்திருக்கக்கூடும். ஆனல் அவள் அவ்வளவு கோழையாகிவிடவில்லை. மூன்று நாள் வரையில் அவள் நாடகத்துக்குச் செல்லவில்லை. புண்பட்ட உள்ளத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகத் தேற்றிக்கொண்டாள்.

நாலாவது நாள் அவள் தியேட்டருக்கு வந்தாள். எங்கிருந்தோ அவளுக்குத் தைரியம் பிறந்தது. தினத்தைவிட நன்ருக நடித்துவிட்டாள்.

''விசா, உலகத்தை நீ அறிந்துவிட்டாய். உனக்கு இனிச் சாவே கிடையாது!'' என்று உருக்கமாக டைரெக்டர் கூறினர். மக்கள் கை குலுக்க அவளைச் சூழ்ந்து கொண்டனர்.

''விசா, நீ உண்மையான சிறந்த நடிகை!'' என்று காரியதரிசி நாத் தழுதழுக்கக் கூறினர்.

விசா எதையும் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. அறைக்குத் திரும்பியதும் முதல் வேலையாக அந்த நர்ஸின் கடிதத்தை நூருவது முறையாகப் படித்தாள். இனிமேல் காதலைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. நூற்றுக்கணக்கான பேரின் மனிதத்தன்மையை அவள் இதயம் பெற்றுவிட்டது.

டோரனினுடைய கைக்கடிகாரம் பன்னிரண்டை நோக்கி வேகமாக ஓடியது. 'நாட்டியம் என் கலை, வாழ்க்கை, காதல் மூன்றும்!' என்று விசா முணுமுணுத்தாள்.

### 70-லட்சம் தபால்கள்

இந்தியத் தபால்-தந்தி இலாகா 35-பாஷைத் தபால்களைக் கையாள்கிறது. தினம் 70-லட்சம் தபால்கள் பட்டுவாடா ஆகின்றன.

### சரியான ஏற்பாடு

தென்னுப்பிரிக்கத் தோட்ட முதலாளியான வெள்ளைக்காரர் ஒருவர், தம்முடைய நீக்ரோ ஊழியன் ஒருவனுடன் மறு உலகத்தைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்.

''ஸாம், நீ முதலில் செத்தால், திரும்பி வந்து அந்த உலகம் எப்படி இருக்கிறது என்று எனக்குச் சொல்ல வேண்டும். நான் முதலில் செத்தால், திரும்பி வந்து அப்படியே உனக்குச் சொல்லுகிறேன்'' என்ருர் வெள்ளைக்காரர்.

''இரண்டாவது சொன்னீர்களே, அந்த ஏற்பாடுதான் சரி, ஸார். ஆனல், நீங்கள் வரும்போது மாத்திரம் இருட்டில் வராதீர்கள்; பகலில் வாருங்கள்'' என்ருன் நீக்ரோ.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# வெல்லாமல் வெருட்டினார்!

பிரபல பிரெஞ்சு தத்துவ சாஸ்திரி டீட்ரோ என்பவர் ஒரு சமயம் ருஷிய சக்கரவர்த்தினியின் அரண்மனைக்கு விருந்தாளியாகச் சென்றிருந்தார். தத்துவ சாஸ்திரி ஒரு நாஸ்திகர். அவருடைய வாக்கு வன்மையில் தர்பாரின் பிரபுக்களெல்லாம் பிரமித்துப் போனார்கள். அவர்களெல்லாம் எங்கே நாஸ்திகர்களாகி விடுவார்களோ என்று சக்கரவர்த்தினி பயந்தாள்.

யூலர் என்ற பிரபல கணித சாஸ்திரியை அழைத்து இவருடன் 'கடவுள் உண்மை' பற்றி வாதிக்கச் சொன்னாள்.

"$(a+b^n) \div n = x$. டாங்க் ட்யூஸ் எக்ஸிஸ்டே ரெஸ்பாண்டஸ்" என்று கர்ஜித்தார் கணித நிபுணர்.

தத்துவ சாஸ்திரிக்குக் கணிதம் தெரியாது. ஆகவே, ஒன்றும் புரியவில்லை. அவர் சொல்லாமலே கிளம்பிவிட்டார். தர்பாரில் இருந்த அனைவரும் 'கொல்' என்று நகைத்தார்கள்.

கணித நிபுணர் சொன்னது வேறு ஒன்றும் அல்ல. "ஓர் எண்ணுடன் மற்றோர் எண்ணின் குறிப்பிட்ட வர்க்கத்தைக் கூட்டி, வர்க்கக் குறி எண்ணால் வகுத்தால், இன்ன எண் விடையாக வரும். ஆகவே, கடவுள் இருக்கத்தான் இருக்கிறார்" என்றே அவர் சொன்னார்.

எவையோ சில எண்களைக் கூட்டிப் பெருக்கி வகுப்பதால் ஏதோ ஓர் எண் விடையாகக் கிடைப்பதற்கும் கடவுள் இருப்பதற்கும் என்ன சம்பந்தம்? இந்தக் கேள்வியைத் தத்துவ சாஸ்திரி கேட்டிருக்கலாம். நகைத்தவர்களைப் பார்த்து அவரே நகைத்திருக்கலாம். ஆனால், கணித சாஸ்திரத்தின் சங்கேத பாஷை அவருக்குத் தெரிந்திருந்தால்தானே? அதுதான் இல்லை.

—'மாதமாட்டிக்ஸ் ஃபார் மில்லியன்ஸ்'

May '54 Regd. No. M. 4975

# மஞ்சரி

ஜய - வைகாசி

ஊரும் உலகமும் .. .. .. .. .. .. .. .. .. .. .. 1
ராஜாஜியின் சாதனை .. .. .. அமிர்த பஜார் பத்திரிகை 4
அணுக்குண்டு பிறந்த வேளை .. .. அஸ்ட்ரலாஜிகல் மகஸீன் 8
இப்படி ஆயிரம் பெண்கள் .. .. .. .. .. .. ஸ்த்ரீ 12
க்விஸ் .. .. .. .. .. .. .. .. .. .. .. .. .. 15
கஜேந்திர மோட்சம் .. .. .. .. .. .. .. .. .. 16
பரியாய மகோற்சவம் .. .. .. .. .. .. .. கர்மவீர் 20
வயலின் மேதை .. .. .. அமெரிக்கன் ரிப்போர்ட்டர் 24
இருதயத்துக்கு ராஜா .. .. .. .. .. .. .. .. .. 26
விஞ்ஞானியின் விநோத வாழ்வு .. .. .. ஸ்வதந்த்ரா 30
குரங்கிடம் கண்ட அம்சம் .. .. .. .. .. .. .. .. 33
கார்ட்டூன் கதம்பம் .. .. .. .. .. .. .. .. .. 38
கோமாளி .. .. .. ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் 40
வைரம் விளையும் நாடு .. .. .. காமன்வெல்த் டுடே 44
பொல்லாத பிரசார நிபுணர் .. .. .. .. .. .. .. .. 48
சதுரங்கத் தோழர் .. .. .. .. .. .. .. .. .. .. 53
கிமோனோ .. .. .. .. .. .. .. .. .. .. .. .. 57
புத்தர் வாக்கு .. .. .. .. .. .. .. தம்மபதம் 59
இதைப் படித்ததுண்டா? .. .. .. .. .. .. .. .. .. 61
என்னைக் கேளுங்கள் .. .. .. .. .. .. .. .. .. .. 62
வெளி ஆதிக்கத் திட்டுக்கள் .. .. .. .. .. .. .. .. 65
கல்லா நாகரிகம் .. .. .. .. .. .. ரா. ஸ்ரீ. தேசிகன் 73
தபால் வளர்ச்சி .. .. .. ஆபரேடர்ஸ் ஃபோரம் 76
விடுதலை (உருவகக் கதை) .. .. .. .. கவி ரவீந்திரர் 80
நடிகை (ருஷியக் கதை) .. .. .. இல்யா எர்ன்பர்க் 83
வெல்லாமல் வெருட்டினார் .. .. .. .. .. (3-ஆம் அட்டை)